November -2018 | Volume-5 | issue-50

for private circulation only

# காட்டாறு

அறிவியல் பண்பாட்டு மாத இதழ்

நவம்பர் - 2018 பருவம் - 5 புனல் - 50 தனிச்சுற்று நன்கொடை ரூ 25

## யாகப் புதைகுழிகளில் மீண்டும் தமிழர்கள்





நேர்காணல்:
கல்யாண்குமார்,
வின்சென்ட்

## பிரியதர்ஷினி
## கேஸ்ட்லஸ்
## ஆனந்தமுனிராஜன்

# I am "Casteless"

இந்துமதத்தைப் பின்பற்றும் மக்கள் யாராக இருந்தாலும், அவர்களது பெயரைக் கேட்ட உடனேயே அவர்கள் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்பதை அறிந்துகொள்ளும் வகையில்தான் பெயர்கள் வைக்கப்பட்டு வந்தன. மனுசாஸ்திரம் அப்படித்தான் பெயர் வைக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது. இந்துமதப் பண்பாடுகளுக்கு மாற்றாக, அறிவியல் பூர்வமான திராவிடர் பண்பாட்டை முன்னெடுத்த தோழர் பெரியார், 1929 ஆம் ஆண்டு செங்கல்பட்டு முதல் சுயமரியாதை மாநாட்டில், பெயர் வைப்பதில் இருக்கும் இந்து தர்மத்தைத் தகர்த்தார்.

அவரது சுயமரியாதை இயக்கத்தில் உள்ள தோழர்கள் இனிமேல் தங்களது பெயர்களுக்குப் பின்னால், அவர்களது ஜாதிப்பெயர்களைச் சேர்த்துக் கூறக்கூடாது, எழுதவும் கூடாது என்று பிரகடனம் செய்தார். அதன் விளைவாக, ஒட்டுமொத்த இந்தியாவிற்கும் மாற்றாக, தமிழ்நாட்டில் ஜாதிச்சங்கம் நடத்துபவரின் பெயரில்கூட ஜாதிப்பெயர் நீக்கப் பட்டுள்ளதைப் பார்க்கலாம்.

ஏற்கனவே சூட்டப்பட்ட பெயர்களில் இருந்த ஜாதியை அகற்றிய பெரியார், புதிதாகப் பிறக்கும் குழந்தைகளுக்குப் பெயர் சூட்டுவதிலும் ஜாதி, மத, ஆணாதிக்கங்களைத் தகர்த்தார். ரஷ்யா, மாஸ்கோ, புரட்சி, பகுத்தறிவு, சமதர்மம், அசோகன், சித்தார்த்தன், கௌதமன் போன்ற பெயர்களை ஆண் - பெண் இருபாலினங்களுக்கும் சூட்டினார்.

திராவிடர் இயக்கங்களின் தோழர்கள் பெரியாரின் பண்பாட்டுப் புரட்சியை இன்றும் தொடர்கின்றனர். அந்தத் தொடர்ச்சிகள் பற்றிய ஒரு அறிமுகம்தான் 'I am Casteless'.

என்னுடைய பெயர் ஆ.பி.கேஸ்ட்லஸ். திண்டுக்கல்....... 5ஆம் வகுப்பு படிக்கிறேன். என்னுடைய வயது 10. அப்பா பெயர் ஆனந்தமுனிராஜன்.அம்மா பெயர் பிரியதர்ஷினி

**உங்கள் பெயரைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

ரொம்பப் பெருமையா நினைக்கிறேன். யாருமே வைக்காத பெயரா இருக்கு எனக்கு. எனக்கு ஏன் இந்த மாதிரி பெயர் வச்சாங்கண்ணா...எங்க அப்பா பெரியார் வழியில வந்தவர், அதனால இந்தப் பெயர் வச்சு இருக்காங்க.

**இந்தப் பெயரைப் பற்றி அப்பா, அம்மாகிட்ட கேட்டு இருக்கீங்களா?**

எதுக்காக வைச்சாங்கண்ணு தெரியாத முன்னாடி கேட்டு இருக்கேன். அதற்கு அர்த்தம் "ஜாதியற்றவன்" அப்படின்னு சொன்னாங்க. ஜாதியை ஒழிச்சு மக்கள் எல்லாரும் ஒன்னா இருக்க மாதிரி இருக்கு அந்த பெயரோட அர்த்தம்.

**"கேஸ்ட்லெஸ்" பெயரைக் கேட்டுட்டு உன்னோட நண்பர்கள், உறவினர்கள் எல்லாம் பேசும்போது இந்தப் பெயரைப்பற்றி என்ன சொல்லி இருக்காங்க? என்ன நினைக்கிறாங்க?**

எங்க அத்தை யாரும் என்னைப் பெயர் சொல்லி கூப்பிடமாட்டாங்க. செல்லமா தம்பினு சொல்லித்தான் கூப்பிடுவாங்க. என்னோட வகுப்புல பசங்க, மற்ற நண்பர்கள் எல்லாம் என்னைப் பெயர் சொல்லித்தான் கூப்பிடுவாங்க. மேம், பெயரோட அர்த்தம் தெரியாததால என்னைக் கூப்பிட்டு அர்த்தம் கேட்டுட்டு 'குட்'னு சொன்னாங்க.

**மு.ஆனந்தமுனிராஜன்**

## தோழர் “கேஸ்ட்லெஸ்” ஸின் அப்பா

திண்டுக்கல்ல வழக்கறிஞராகப் பணி புரிகிறேன். 2004-ல் திருமணம் நடைபெற்றது. திருமணம் ஜாதிமறுப்பு மற்றும் சுயமரியாதைத் திருமணம். சுயமரியாதைத் திருமணம்னு கூடச் சொல்லமுடியாது. பதிவு அலுவலகத்துக்கு முன்னாடி நண்பர்கள் முன்னால இரண்டு பேரும் மாலை மாற்றிக் கொண்டு, பதிவு அலுவலகத்தில் பதிவு செய்துகொண்டு வந்துவிட்டோம் அவ்வளவுதான் எங்களுடைய திருமணமா இருந்தது. அதே மாதிரி எந்தவித ஜாதி, சடங்குகளும் எதுவும் பண்ணக் கூடாது அப்படிங்கறதுல ரொம்ப உறுதியா இருந்தோம். அதனால திருமணத்துல தவிர்த்தோம்.

2007-ல் என்னுடைய அப்பா காலமானார். ஓராண்டுக்கு முன்னால் எங்க அம்மா காலமானாங்க இரண்டு பேருக்குமே எந்தவிதமான சடங்குகளும் பண்ணலை. குறிப்பா ஜாதிஒழிப்புத் தளத்துல இருக்கணும் அப்படிங்கற அடிப்படையில திருமணத்திலும், இறப்புகளிலும் அந்த மாதிரியான சடங்குகளைத் தவிர்க்கிறது அப்படிங்கறதுல தெளிவா இருக்கோம்.

நான் பள்ளி இறுதி வகுப்பு படிக்கும்போது என்னுடைய தமிழ் ஆசிரியர் அனிபா அவர்கள் மூலமாகப் பெரியாரைப்பற்றி அறிமுகம் கிடைத்தது. அவர் இப்ப தவறிட்டார். அதற்கு அப்புறம் திராவிடர் கழகத்துல இணைந்து அப்ப திண்டுக்கல் மாவட்டச் செயலாளராக செல்வராஜ் இருந்தாரு. அவரும் தவறிட்டார். அவருடைய வளர்ப்பு நாங்கெல்லாம். நான் காட்டாறு இதழ்ல இருக்கக் கூடிய தாமரைக்கண்ணன் எல்லாருமே அவருடைய வளர்ப்புதான்.

பனிரெண்டாம் வகுப்பு முடித்துவிட்டுச் சட்டக் கல்லூரியில் முதலாண்டு சேரும்பொழுதே திராவிடர் மாணவர் கழகத்துல இணைந்து வேலை பார்க்கிறோம். வேலை பார்த்துவிட்டு இருக்கும் போதே அப்ப 69 விழுக்காடு இடஒதுக்கீடு செல்லாது அப்படீன்னு ஒரு தீர்ப்பு இங்க வெளியிடுறாங்க. அப்ப திராவிடர் கழகத்துல ஆசிரியர் வீரமணி அவர்கள் தலைமையில் அந்தத் தீர்ப்பு நகலை எரித்து ஒருமுறை சிறை சென்றோம்.

அப்புறம் 1997-ல் உச்சநீதிமன்றம் அந்தத் தீர்ப்பை வழங்கிய உச்சநீதிமன்ற நீதிபதிகளுடைய கொடும்பாவி எரிப்பு. அந்த நேரத்துல நீதிபதி களுடைய கொடும்பாவி எரிக்கிறாங்க. அப்ப நான், தாமரைக்கண்ணன், தோழர்கள் எல்லாருமே சிறை சென்றோம். கிட்டத்தட்ட 20, 25 நாளுக்குமேல் உச்சநீதிமன்ற நீதிபதிகளுடைய கொடும்பாவி எரிச்சு சிறை சென்றோம்.

திராவிடர் கழகத்தில் தொடர்ச்சியாகப் பணிபுரிந்தோம். அப்புறம் மணி அண்ணன் அமைப்பை (தி.க.) விட்டு வெளியேறும்போது மணி அண்ணனுடன் இணைந்து வெளியே வந்தோம். வந்து தொடர்ச்சியாக வேலைகள் பார்த்துட்டு இருந்தோம். அப்ப பெரியார் திராவிடர் கழகமும் தனியா இயங்கீட்டு இருந்தாங்க. விடுதலை இராசேந்திரன் அவர்களுடனும், ஆனூர் ஜெகதீசன் அய்யா அவர்களுடனும் இணைந்து இருந்தாங்க.

அப்ப இணைப்பு மாநாடு நடந்தது. மணி அண்ணன் வெளியில் வரும்போது தந்தை பெரியார் திராவிடர் கழக இணைப்பு மாநாடு ஒன்னு நடத்தினோம். அதுல முழுமையா இருந்தது பாலகுரு அண்ணன், நான், இறந்துபோன பத்ரி எல்லோருடனும் இணைந்து தொடர்ச்சியா அதுல வேலை பார்த்தோம். வேலை பார்த்துட்டு 2000-2001 காலகட்டங்களில் நாங்கள் சென்னையில் தொடர்ச்சியாக வேலை பார்த்தோம். அப்புறம் பணிக்காலம்னு இங்க வந்துட்டோம்.

இங்க வந்ததற்கு அப்புறம் 2009 வரைக்கும் தொடர்ச்சியாக வேலை பார்த்துட்டு இருந்தோம். 2009ல் ஈழப்படுகொலை நடந்த சமயத்தில்தான் இயக்கத்தின் மீது அவநம்பிக்கை ஏற்பட்டது. தொடர்ச்சியா ஒரு இயக்கத்தில் இயங்கீட்டே இருக்கிறோம். இத்தனை அமைப்புகள் இருக்குது கண்ணுக்கு எதிரா பக்கத்தில் இருக்கக்கூடிய ஒரு நாட்ல 1 லட்சம் மக்கள் படுகொலை செய்யப் படுறாங்க அதை எதிர்த்து நாம எதுவுமே செய்ய முடியலை... அந்த நேரத்துல பல இளைஞர்கள் மனநலம் பாதிக்கப்பட்டார்கள். உண்மையைச் சொல்லணும்னா மன உளைச்சலாகவும், மனநலம் பாதிக்கப்பட்டும் அதுல அமைப்பை விட்டு வெளியே போறோம்.

இப்ப இருக்கக்கூடிய இந்துத்துவா சக்திகளின் எழுச்சியை பார்க்கும்போது உதிரியா இருக்கறது பிரயோஜனப்படாது. இது சரியா வராது. அவுங்களுக்குத்தான் ஊக்கம் அளிக்கும். நம்ப இன்னும் ஈழப்படுகொலை, ஈழப்பிரச்சனைகளை மட்டுமே வச்சிக்கிட்டு அமைப்பு மேல விரக்தியா இருந்தோம் அப்படின்னா இந்துத்துவா சக்திகள் எளிதாக ஊடுருவிவிடுவாங்க. தமிழ்நாட்டுல கால் ஊன்றி விடுவாங்க. அப்படின்னு ஒரு நிலை ஏற்படும் போது அமைப்புக்குள்ள திரும்ப இணைந்து செயல்பட வேண்டிய சூழல் ஏற்பட்டது.

திண்டுக்கல்ல பார்க்கும்போது தொடர்ச்சியா திராவிடர் கழகத்துல இணைந்து இப்பதான் முதல் முதல்ல பெரியார் பிஞ்சுகள் மாநாட்டுல கலந்துக்கிட்டோம். இப்ப திராவிடர் கழகத்துல நகரச் செயலாளராகப் பொறுப்புப் போட்டு இருக்காங்க. ஏற்கனவே மாணவர் கழகத்துல மாவட்டச் செயலாளராக இருந்து இருக்கிறேன். திராவிடர் கழகத்தினுடைய வழக்கறிஞர் அணி பிரிவுக்கு மாநிலப் பொருளாளராக இருந்து இருக்கிறேன்.

தொடர்ச்சியாக 10 ஆண்டுகள் எந்த அமைப்புகளிலும் வேலை பார்க்காதது என்ன பிரச்சனை ஆச்சுன்னா... குடும்பம் பெரியாரியலை விட்டு விலகி வெளியே போகுது... அது ஒரு

இக்கட்டான சூழல். குடும்பமே பெரியாரியலை விட்டு விலகி போற மாதிரி ஒரு சூழல்... அப்போ திரும்ப அமைப்புல இணைந்து செயல்பட வேண்டிய கட்டாயம் ஏற்படுது.

இன்னொன்று இப்ப இருக்கக்கூடிய பெரியாரிஸ்டுகள் மட்டும்தான் இந்துத்துவ சக்திகளை எதிர்த்து நிற்க முடியும். மற்றபடி பார்ப்பன எதிர்ப்பு இல்லாமல் அல்லது பார்ப்பன எதிர்ப்பை மறைமுகமாக, வெளிப்படையாகச் சொல்ல முடியாத எந்த அமைப்புமே இந்துத்துவா சக்தியை தடுத்து நிறுத்தி விட முடியாது. பார்ப்பன எதிர்ப்பை முபமையாகச் செயல்படுத்தக்கூடிய ஒரே அமைப்பு அப்படின்னா பெரியார் அமைப்பு மட்டும்தான்.

இந்தியாவிலே பெரியாரியல் அமைப்பு மட்டும்தான் பார்ப்பனர்களை நேரடியாக எதிர்த்து களத்தில் நிற்கக்கூடியவர்கள். அப்ப பார்ப்பன எதிர்ப்புக் களத்தில் நிற்கும் போதுதான் இந்துத்துவா சக்திகளை தடுத்து நிறுத்த முடியும், அப்படிங்கற அடிப்படையில நம்ம உதிரியாக இருக்கக்கூடிய பெரியாரிஸ்டுகள் அனைவருமே ஒருங்கிணைந்து திருப்பி வந்து 80, 90 காலகட்டங்கள் மாதிரி ஒரு வீரியமாகப் பெரியாரியலை நகர்த்திக் கொண்டு போனால்தான் சரியாக இருக்கும், அப்படிங்கறதால மீண்டும் இணைந்து வேலை பார்க்கிறோம்.

**இப்படி ஒரு பெயர் வைக்கவேண்டும் என்ற சிந்தனை எப்படி வந்தது?**

2001-ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்கா ‘டர்பன்’ நகருல நிற வெறிக்கு எதிரான மாநாடு. அதுல ஜாதியத் தீண்டாமையும் ஜாதியப் பாகுபாட்டையும், நிற வெறியாக இணைக்க வேண்டும் அப்படின்னு. இந்தியாவில் இருக்கக்கூடிய முற்போக்கு ஜனநாயக சக்திகள், ஜாதி ஒழிப்பு வீரர்கள், பெரியாரிஸ்டுகள் எல்லாம் ஒரு கோரிக்கை வைக்கிறார்கள். அப்ப இது சம்மந்தமாக அய்யா விடுதலை இராசேந்திரன் மற்றைய தோழர்கள் எல்லாம் டர்பனுக்குப் போறாங்க, போய் அவங்களுக்கான முயற்சியில் ஈடுபடுறாங்க.

அப்ப இந்திய அரசாங்கம் இந்த முயற்சி வெற்றி பெறக்கூடாதுனு கடுமையாகப் போராடுது. மாநாட்டுக்கு வந்து இருக்கக்கூடிய ஒவ்வொரு நாட்டு தலைவர்களையும் சந்தித்துப் பேசுறாங்க. அதன் அடிப்படையில இந்தியாவில் இருந்து சென்ற முற்போக்கு ஜனநாயக சக்திகள், என்ன பண்றாங்கனா கியூபா அதிபர் கேஸ்ட்ரோ கிட்ட இதப் பேசுறாங்க. இப்படி இருக்குதா அப்படிங்கறத ஒத்துக்குறார். ஒத்து கிட்டு நானும் சில நாடுகள் கிட்ட பேசுறேன். அப்படினு வாக்குறுதி கொடுக்குறார்.

வாக்குறுதி கொடுக்கும்போது என்ன ஆகுதுன்னா அன்றைய இந்திய அரசு என்ன பண்ணுதுனா, கேஸ்ட்ரோகிட்ட உட்கார்ந்து பேசி இந்த மாதிரியான பிரச்சனை வந்து உள்நாட்டுப் பிரச்சனை இந்தப் பிரச்சனைய நாங்க தீத்துக்குறோம். இது ஒன்னும் பெரிய விஷயம் கிடையாது. நிறவெறி அளவுக்குக் கிடையாது. அப்படின்னு சொல்லி அதற்கான முயற்சி ஆரம்ப நிலையிலேயே தோற்கடிக்கப்படுது.

அது சம்மந்தமாக அய்யா விடுதலை இராசேந்திரன் இங்க சென்னையில ஒரு கூட்டத்தை ஏற்பாடு பண்ணி டர்பன்ல என்ன நடந்துச்சு. நாங்க அங்க இவ்ளோ வேலை பார்த்தோம் என்னெல்லாம் நடந்திச்சு இதுல இப்படி தோல்வி அடைந்தோம் அப்படின்னு சொல்றாரு. அப்ப நான் முடிவு பண்ணது என்னன்னா... நமக்கு பையனோ, பொண்ணோ யாரு பிறந்தாலும் “கேஸ்ட்லெஸ்” அப்படிங்கற பெயர் வைக்கணும்... அப்ப சில விவாதங்கள் ஏன் ‘ஜாதியற்றவன்’னே வைக்கலாம்ல, ‘ஜாதிப்பகைவன்’னு வைக்கலாம், ‘ஜாதி மறுப்பாளன்’னு வைக்கலாம் அப்படின்னு நிறைய பேர் சொன்னாங்க.

இங்க இருக்கக்கூடிய ஜாதியச் சிக்கல்கள் சர்வதேச அளவுல போகாம இருக்குது. இது வாய்ப்பா இந்தப்பெயர் பலபேர்கிட்டப் போய்ச் சென்றடையும் போது, இந்தப் பெயருக்கான காரணம் என்ன? எதனால் ஏற்பட்டது? அப்படிங்கும் போது இந்தியாவில் இருக்கக்கூடிய உள் முரண்பாடுகள் நிறைய இருக்குல இத வெளிப்படுத்தனும் அப்படிங்குற நோக்கத்திற்காகத்தான் இந்தப் பெயரைத் தேர்ந்தெடுத்தேன்.

என்னுடைய திருமணத்திற்கு முன்னாலேயே 2001 லேயே இந்த மாதிரி முடிவு எடுத்துட்டோம். ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி, எங்களுடைய திருமணம் ஜாதி மறுப்புத் திருமணம், காதல் திருமணம். காதல் திருமணம் அப்படிங்கற போது இதன் அடிப்படையிலேயே என்னுடைய இணையர்கிட்ட இந்த விஷயத்தைத் திருமணத்திற்கு முன்னாலேயே பேசிட்டேன். குழந்தை எதுவா இருந்தாலும் “கேஸ்ட்லெஸ்”ங்குற பெயர் வைக்கணும்னு. அவங்களும் மனப்பூர்வமாக ஏத்துக்கிட்டாங்க. அப்புறம் தம்பி பிறந்தான் ‘கேஸ்ட்லெஸ்’னு பெயர் வச்சுட்டோம்.

**உங்களுடைய சக நண்பர்கள், உறவினர்கள் இதை எப்படி எடுத்துக்கொண்டார்கள்?**

வீட்டிலும் சரி, நண்பர்களும் சரி பள்ளிக் காலத்த முடித்த உடனேயே திராவிடர் கழகத்துல இணைந்து வேலை பார்த்தோம். இந்த நேரங்களில் இருந்த எதிர்ப்பைப் பார்த்தீங்கனா பெருசா ஒன்னும் இல்ல. “நான் அப்படித்தான்”ங்கறது அவங்களுக்குத் தெரியும் இல்லையா... அதனால பெயரோட அர்த்தம் கேட்டுகிட்டாங்க, இந்தப் பெயரை வைக்கலைன்னா தான் ஆச்சர்யபடனும்னாங்க. அவுங்க அதப் பெரிய முரணாகப் பார்க்கல.

**இப்படிப் பெயர் வைப்பதால் சமூகத்தில் என்ன விளைவுகள் வந்துவிடும்?**

ஜாதிங்கறது 2000 ஆண்டுகளாக இருந்திட்டு இருக்குது. ஜாதி ஒழிப்புக்கான ஒரு இயக்கம் பெரியார் காலத்திற்குப் பின்பு தமிழகத்தில் மிக வீச்சாக இருக்கிறது. எவ்ளோ பெரிய ஜாதி வெறி பிடிச்ச நபர்களாக இருந்தாலும் ஜாதி ஒழிப்பிற்கான ஒரு அமைப்பு தமிழ்நாட்டில் செயல்பட்டுக்

கொண்டு இருக்குது அப்படிங்கறது எல்லாத்துக்கும் தெரியும். அப்படி எங்களை அடையாளப் படுத்துவதுதான் நோக்கம்.

நாங்கள் ஜாதி ஒழிப்புக் குடும்பம். அதனுடைய தொடர்ச்சியாகத்தான் என்னுடைய காரில் 'ஜாதி இல்லை' என்று எழுதுவதும், எங்கள் வீட்டுக்கு 'ஜாதி மறுப்பு இல்லம்' என்று பெயர் வைத்ததும், எங்கள் குடும்பப் பெயர்கள் ஜாதி ஒழிப்பை நோக்கியே இருக்கணுன்னு தீவிரமா இருந்தோம். எங்களைப் பொறுத்தவரை எங்களிடம் ஜாதி கேக்க மாட்டாங்க. எந்தச் சாமி கும்பிடுறீங்கன்னு கேக்க மாட்டாங்க. அதுவே எங்களுக்குப் பெரிய வெற்றி தான்.

**ஜாதிச் சான்றிதழ் காரணமாகத்தான் ஜாதி இருக்குதுன்னு சொல்றாங்க அதைப்பற்றி உங்கள் கருத்து?**

ஜாதிங்கிறது 2000வருஷமா இருக்குது.1952 க்கு அப்புறம்தான் சாதிச் சான்றிதழ் இருக்கு. நீங்க சொல்றதப் பாத்தா 1952 ல தான் ஜாதி உற்பத்தி ஆகி இருக்கணும். ஜாதிச் சான்றிதழ் காரணமாத்தான் ஜாதி வந்ததுங்கிறது ஒரு பார்ப்பனீயத்தனமான வாதம். இடஒதுக்கீட்டு அடிப்படையில் பள்ளிக் கூடம் படிச்சிருப்பான், வேலைக்கு போயி ருப்பான், பெரிய அதிகாரி ஆயிருப்பான் அவன் சொல்வான் ஜாதிச் சான்றிதழ் இருக்கக்கூடாதுன்னு.அவங்க தாத்தா, அப்பா என்ன படிச்சிருக்காங்கன்னு கேட்டா சொல்ல முடியாது. ஏன்னா அவங்க படிச்சிருக்க மாட்டாங்க. இவங்க இடஒதுக் கீட்டுல படிச்சுட்டு இந்த மாதிரி பேசிட்டு இருக்காங்க. இதனால கல்வி, வேலைவாய்ப்பு போன்றதுல ஏகபோகமா இருக்கிற பார்ப்பனர் களுக்கே இந்தவாதம் வலு சேர்க்கும்.

> ஜாதிங்கிறது 2000 வருஷமா இருக்குது. 1952 க்கு அப்புறம்தான் சாதிச் சான்றிதழ் இருக்கு. நீங்க சொல்றதப் பாத்தா 1952 ல தான் ஜாதி உற்பத்தி ஆகி இருக்கணும். ஜாதிச் சான்றிதழ் காரணமாத்தான் ஜாதி வந்ததுங்கிறது ஒரு பார்ப்பனீயத்தனமான வாதம்.

**பொதுவாகவே பெரியார் இயக்கத் தோழர்கள் தமிழில் பெயர் வைக்கின்றனர். ஆனால் நீங்கள் அதிலிருந்து மாறுபட்டுப் பெயர் வைத்ததன் நோக்கம்?**

நாங்கள் ஒரு காலத்தில் தமிழ் வெறியர் களாகத்தான் இருந்தோம். பெரியார் சொன்னதைப் போல் எல்லாப் பற்றுகளையும் துறக்கவேண்டும் என்று உணர்ந்தோம். அவர்கூறியதைப் போல நடுநிலையாகச் சிந்தித்தோம். அதனால் தமிழ் மொழியைத் தாய்மொழி என்ற அளவில் ஏற்றுக் கொள்கிறோமே தவிரத் தமிழ்மொழியில்தான் பெயர் வைக்கணும் என்ற கட்டாயம் இல்லை. ஆசிரியர் வீரமணி அவர்கள் மண்டல் கமிஷன் நினைவாக 'வி.பி.சிங்' என்று பெயர் வைக்கச் சொன்னார். திராவிடர் கழகத் தோழர்கள் பலபேர் வி.பி. சிங் என்று பெயர் வைத்துள்ளனர். அது ஒரு வரலாற்றுப் பெயராக இருக்கணும் என்பதுதான். அதனால்தான் என் மகனுக்கு 'கேஸ்ட்லெஸ்' என்று பெயர் வைத்தோம்.

பெரியார் ரஷ்யா, மாஸ்கோ என்று பெயர் வைக்கச் சொன்னார். பெரியார் கேட்பார் நீங்கள் பழநி, திருப்பதி, சிதம்பரம் என்று பெயர் வைக்கும் பொழுது நாங்கள் ரஷ்யா, மாஸ்கோ, என்று பெயர் வைக்கக் கூடாதா என்று . அதுபோல கொள்கையின் அடிப்படையிலும் தத்துவத்தின் அடிப்படை யிலும் தான் பெயர் இருக்கணும். மத்தபடி இப்படித்தான் வைக்கணும் என்பதெல்லாம் கட்டாயம் இல்லை. தமிழில்தான் பெயர் வைக்கணும்னு அவசியம் இல்லை. அதில் எனக்கு உடன்பாடு இல்லை.

**ஒருவேளை உங்களுக்குப் பெண்குழந்தை பிறந்திருந்தால்?**

பெண் குழந்தை பிறந்தாலும் இப்படித்தான் பெயர் வைக்கணும் என்றுதான் முடிவு செய்தோமே தவிர பெண்ணுக்கென்று தனியாகப் பெயர் வைக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லை. பெண் குழந்தை பிறந்திருந்தாலும் பெரியார் சொன்ன 'பெண் விடுதலை' என்ற அடிப்படையிலேயே வளர்த்திருப்போம்.

**நியூமராலஜி அடிப்படையில் பெயர் வைப்பது பற்றி உங்கள் கருத்து என்ன?**

படிப்புக்கும் அறிவுக்கும் சம்மந்தம் இல்லையென்று சொல்லுவார்கள். அது தான் உண்மையான விசயம். அது போலத்தான் நல்லா படித்தவர்களும், பட்டம் வாங்குன வங்களும் உயர்பதவிகளிலிருப்பவர் களும்தான் நியூமராலஜி பார்க்கிறார் களே தவிர, பாமர மக்கள் அதைப் பற்றி அவ்வளவாகக் கவலைப் படுவதில்லை. அது போன்றவற்றில் எனக்கு உடன்பாடில்லை. இது களையப்பட வேண்டிய ஒன்று.

**குடும்பத்தில் முதல் குழந்தைக்குக் குலதெய்வத்தின் பெயரை வைக்கின்றார்களே?**

குலதெய்வ வழிபாடு என்பது ஜாதியைப் பாதுகாக்கும் வழிபாடு. அது ஒரு ஆணாதிக்க வழிபாடு. பெண்ணுக்கென்று நிரந்தரமான குலதெய்வம் கிடையாது. பெண்களுக்குத் திருமணத்திற்கு முன்பு ஒரு குலதெய்வம், திருமணம் ஆன பிறகு ஒரு குலதெய்வம் ஆகிவிடுது. பிறக்கும் போது இருக்கும் குலதெய்வம் சாகும் வரை இருக்குறது இல்ல. திருமணத்திற்கு அப்புறம் மாறிடுது. இது எப்படினு நமக்கு புரிய வில்லை. குலதெய்வ வழிபாடுங்குறது ஜாதியையும், ஆணாதிக்கத்தையும் பாதுகாக்கும் ஆயுதமே தவிர வேறு ஒன்னும் இல்லை. அதனால் குலதெய்வப் பெயர்களை எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது. அதனால் அந்த மாதிரியான பெயர்களை வைக்கவில்லை.

குலதெய்வப் பெயர், 'தான் எந்த ஜாதி' என்பதை வெளிப்படுத்துவதற்கான பெயர். நாங்கள் எப்படிச் சாதியை விரும்பாமல் 'கேஸ்ட்லெஸ்'னு பெயர் வைச்சோமோ... அது மாதிரி அவங்க அவங்களோட ஜாதியை வெளிப்படுத்துவதற்காக குலதெய்வப் பெயர்களை வைக்குறாங்க.

நான் வழக்கறிஞர் என்பதால எங்கிட்ட சில பிரச்சனைகளுக்காகத் தாழ்த்தப்பட்ட மக்கள் வருவாங்க. அதில் பழைய பத்திரங்களை எடுத்துப் பார்த்தா, அவங்க பெயர்கள் எல்லாம் மண்ணாங்கட்டி, பாவாடை, அம்மாவாசை என்று தான் இருக்கும். இந்தப் பெயர்கள் எல்லாம் குலதெய்வப் பெயர்கள்தான். இன்று அது குறைந்து விட்டது. 50 வருசங்களுக்கு முன்னால அப்படி இருந்தது.

இப்ப சமஸ்கிருதப் பெயர்களை வைக்குறாங்க. இந்தப் பெயர்கள் எல்லாம் ஆபாசமாக இருக்குது, வாயில் நுழையாத பெயர்களாக இருக்குதுனு சொல்றாங்க... இருந்தாலும் அவங்க அவங்களோட குல தெய்வப் பெயர்கள்ல இருந்து விடுபட்டு இருக்காங்க. அது வரவேற்கப்பட வேண்டிய விசயம் தான். ஆனால், இன்னும் சில ஆதிக்கச் சாதியினர் அவங்களோட ஆதிக்கத்தைக் காட்டத் தங்களது குலதெய்வப் பெயர்களை வைக்கிறாங்க. முதல் குழந்தைக்குக் குலதெய்வப் பெயர்களை வைப்பதே தாங்கள் இந்தச்சாதி என்று அடையாளப் படுத்தத்தான்.

**திரைப்பட நடிகர்கள், நடிகைகள் பெயர்களுக்குப் பின்னால் ஜாதிப் பெயர்களை வைத்துக் கொள்ளுகின்றனரே?**

ஜாதி வெறியர்கள் தங்கள் குழந்தைகளுக்குச் சாதிப்பெயர்களை வைக்கின்றனர். அது மாதிரி சாதி மறுப்புத் திருமணம் செய்வோரும் திருமணம் செய்யறதோட மட்டும் நிறுத்தாம தங்கள் குழந்தைகளின் பெயரில் கவனம் செலுத்தணும். எந்தச் சமரசமும் இல்லாமல் பெயரில் கவனம் செலுத்தணும். சினிமாத்துறையுல பெயர் வைப்பதிலும் அதுவே அடங்கியிருக்கு.

ஒரு தெருவுக்குப் போனால் ஒரு நடிகரோட நற்பணி மன்றம் இருக்கும். அந்த நடிகர் எந்தச் சாதினு தெரிந்தாலோ அல்லது அந்தத் தெருவில் உள்ளவர்கள் எந்தச் சாதினு தெரிந்தாலோ போதும். ரெண்டில் ஒன்று தெரிந்தால் போதும் ரெண்டும் ஒன்றாகத்தான் இருக்கும். ஒரே சாதிக்காரர்களாகத் தான் இருப்பார்கள். பிற்படுத்தப்பட்டவர்கள் தாழ்த்தப்பட்ட நடிகர்களோட பெயரை அவங்களோட குழந்தைகளுக்கு வைக்குறது இல்ல.

'பெயரில் சாதி' என்பதற்கு ஒரு சின்ன உதாரணம், ஒரு ஆய்வாளர் அம்பேத்கர்னு பெயர் வைத்திருந்தார் திண்டிவனம் பகுதியில். அவர் சந்தித்த பிரச்சனைகளை ஆனந்த விகடனில் பேட்டியாகப் போட்டிருந்தாங்க. ஆனால் அவர் ஒரு பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர். பெயரில் என்ன இருக்குனா, பெயரில் எல்லாம் இருக்கு. பெயரில் ஜாதியும் இருக்கு, பாலின வேறுபாடும் இருக்கு.

**ஜாதியற்றோர் இடஒதுக்கீடுனு கேரளாவில் சொன்னாங்க அதுமாதிரி தமிழ்நாட்டில் என்ன செய்ய வேண்டும்?**

திராவிடர் கழகம் தீர்மானம் போட்டாங்க... சாதி மறுப்புத் திருமணம் செய்வோருக்குத் தனியாக இடஒதுக்கீடுனு... சாதி மறுப்புத் திருமணம் செய்வோருக்குக் கண்டிப்பாகத் தனியா இட ஒதுக்கீடு வேணும். 'சாதியற்றோர் இடஒதுக்கீடு' அதிகரிக்க அதிகரிக்க இந்த இடஒதுக்கீட்டைக் குறைக்கணும். சாதி மறுப்புத் திருமணம் செய்யும் போது பெரும்பாலும் ஆண் என்ன சாதியோ அந்த ஜாதிக்குப் போயிடுறாங்க. அதனால முழுமையா ஜாதிய ஒழிக்க முடியல. அந்தச் சூழல்ல இருந்து மீட்டுக் கொண்டுவரணும். சாதி மறுப்புத் திருமணம் பண்றவங்களுக்குப் பாதுகாப்பு தரணும். அவர் களைச் சாதி மறுப்புத் தம்பதிகளா மீட்டெடுக் கணும்.

**தோழர் பிரியதர்ஷினி**

என் பெயர் பிரியதர்ஷினி. எனக்கு ஆனந்த முனிராஜன் 2002-ல் அறிமுகமாகிப் பின்னர் சாதி மறுப்பிற்காகத்தான் திருமணம் செய்து கொண்டோம். அப்போது பதிவு செய்து உறுதிமொழி ஏற்றுதான் திருமணம் செய்து கொண்டோம். ஆணாகப் பிறந்தாலோ, பெண்ணாகப் பிறந்தாலோ இந்தப் பெயர்தான் வைக்கணும் என்று முடிவு செய்தோம். அப்புறம் நான்கு வருடங்கள் கழிச்சுதான் மகன் பிறந்தான். நான்கு வருட இடைவெளியில் நான் நிறைய மாநாடுகளுக்கும், பொதுக்கூட்டங்களுக்கும் சென்றேன்.

அதன் பிறகு இந்தப் பெயர் வைத்தால்தான் சிறப்பாக இருக்கும் என்று புரிந்து கொண்டேன். அந்தப் பெயரையே மகனுக்கு வைத்தோம். இந்தப் பெயரை நாங்கள் வைத்த போது நிறைய எதிர்ப்புகள் வந்தன. இன்னமும் கூட அந்தப் பெயரைச் சொல்லி யாரும் கூப்புடுறது இல்லை. சின்ன வயசுல இந்தப் பெயரை வைச்சதுக்கு நிறைய சண்டை எல்லாம் போடுவான். இப்ப புரிதல் வந்ததும் ரொம்பப் பெருமையாக நினைக்கிறான்.

இந்தப் பெயரின் மூலமா அடுத்த தலை முறைக்கு ஜாதி இல்லைனு தெரிவிக்கணும். வெளிய யாரும் அவன என்ன ஜாதினு கேக்கக்கூடாதுன்னு இந்தப் பெயர வச்சிருக்கோம். அவன வெளிய யாரு கிட்டையும் ஜாதி கேக்கக்கூடாதுன்னும், பாக்கக் கூடாதுன்னும் சொல்லி வச்சுருக்கேன். இத மத்தவங்க கிட்டையும் சொல்லச் சொல்லி யிருக்கேன். இப்பவும் சின்ன பசங்க ஜாதிய பத்தி பேசுறாங்க. அவனோட நண்பர்கள் இயேசுவக் கும்புடு, அல்லாவக் கும்புடுனு இவன்கிட்ட சொல்றாங்க. அப்படி முடியாதுனு சொல்லு, சாதி எல்லாம் இல்லைனு சொல்லு, நீ வெளிப்படுத்து அப்புடினு சொல்லிக் கொடுத்திருக்கோம்.

இந்தப் பேர என்னனு கேட்டா... அத பத்தி சொல்லி ஜாதி இல்லைனு புரியவைக்கணும்னு சொல்லியிருக்கோம். அடுத்த தலைமுறைக்கு சாதி இல்லைனு தெரியப்படுத்தச் சொல்லியிருக்கோம். இவனும் அப்படித்தான் இருக்கான். சாதி பாக்காம, சாமி எல்லாம் கும்பிடாம அப்படியே இருப்பான்னு நம்புறோம். இப்பதான் அவங்க அப்பா வெளிய மாநாட்டுக்கு எல்லாம் கூப்பிட்டுப் போறாரு. அவனோட தலைமுறையில இதுமாதிரி இருக்கக் கூடாது இது விவாதிக்கப்படணும்னு இந்த பெயர வச்சுருக்கோம். ●

# அஸ்திவாரக் குழிக்குள் புகையும் கருமருந்து!

"மானமும் அறிவும் மனிதர்க்கு அழகு!" தந்தை பெரியார் அவர்களுடைய ஒவ்வொரு எழுத்தும் பேச்சும் பொருள் பொதிந்தது, அழகானது, வியப்பிற்குரியது. பெரியாரைப் பற்றி படிப்பதென்றால், பேசுவதென்றால் அவ்வளவு சேதிகள் அடுக்கடுக்காக வந்து கொண்டேயிருக்கும். அத்தனையும் சுவையானவை, சுகமானவை. சில சோகமானவை.

நான் படித்தவரைக்குமான பெரியாரின் தத்துவங்களில் என்னை எப்போதும் கவர்ந்த ஒரு சொற்றொடர் என்றால், அது "மானமும் அறிவும் மனிதர்க்கு அழகு!" என்கிற இந்த வாக்கியம்தான். இந்தத் தொடரின் ஆழத்தில் நான் லயித்துப் போய் மூழ்கிப் போவதுண்டு.



எங்கள் கிராமத்தில் 90-களின் இறுதியில் இயக்கம் கட்டத் தொடங்கியபோது எங்களுக்குப் பெரிதும் பயன் பட்டது சுவரெழுத்துதான். சுவர்களில் அய்யாவின் கருத்துகளை நாங்கள் எழுதி வந்த நேரத்தில் கடும் எதிர்ப்புகளும் இருக்கும். ஆனால், ஏதேனும் ஒரு வகையில் யாரேனும் ஒருவருக்கு அந்தக் கருத்து உடன்பாடானதாகிவிடும். அதனால், எங்கள் பணிகளுக்குப் பெண்கள், சாமானிய மக்கள், இளைஞர்கள் ஆகியோருடைய ஆதரவு எப்போதும் மறைமுகமாகவும், தேவைப்படும் நேரத்தில் வெளிப்படையாகவும் இருந்து கொண்டேயிருக்கும்.

அந்தளவிற்குப் பெரியாரின் கருத்துகள் இந்தச் சமூகத்தின் மீது பற்றோடு ஒட்டியிருக்கின்றன. உதாரணத்திற்கு ஒன்றிரண்டைச் சொல்லியாக வேண்டும். எல்லோரும் ஒழுக்கத்தை வலியுறுத்து வார்கள். ஒழுக்கம் ரொம்ப முக்கியம் என்று கண்களை உருட்டி மிரட்டுவார்கள். ஆனால், ஒழுக்கம் என்றால் என்ன? என்று யாருமே தெளிவாகச் சொன்னது இல்லை. ஒழுக்கம் என்பதற்குச் சரியான விளக்கத்தை யாருமே சொல்லவில்லை.

திருவள்ளுவர் ஒழுக்கம் குறித்து எழுதிய குறளுக்குத் தெளிவுரை எழுதிய அறிஞர் பெருமக்கள் கூட இன்னதுதான் ஒழுக்கம் என்று வரையறுக்க வில்லை. பெரியார் ஒருவர்தான் மிக மிக எளிமையாக யாரும் புரிந்துகொள்ளும் வண்ணம் சாதாரணமாகச் சொல்லிவிட்டுப் போனார்,

"சொல்லுகிறபடி நடப்பதும், நடக்கிறபடி சொல்வதும்தான் ஒழுக்கம்!"

இந்தக் கருத்தை நாங்கள் சுவர்களில் எழுதிய காலத்தில் எத்தனையெத்தனை பெண்மக்கள் பெரியாரின் விசிறிகளாகவே ஆனார்கள் அப்பப்பா!

இதேபோல எங்கள் கிராமத்தின் முகப்பி லிருக்கிறது பயணிகள் நிழற்குடை. நிழற் குடையின் பக்கவாட்டில் பெரிய எழுத்துகளில் "மானமும் அறிவும் மனிதர்க்கு அழகு" என்று எழுதியிருந்தோம். அதற்கு எதிரிலே ஒரு தேநீர் கடை. நாங்கள் வழக்கமாக தேநீர் குடித்துக் கொண்டே செய்தித்தாள் வாசித்தபடி எங்கள் அரசியல் களம் சூடுபிடிக்கிற இடம் அதுதான். அந்தத் தேநீர்க் கடைக்காரர் எங்களிடம், "மானமும் அறிவும் மனிதர்க்கு அழகு" என்கிற செய்தியை சுட்டிக் காட்டிய படி, "தம்பி, இதை மட்டும் அழிச்சுடாதீங்க. ஏன்னா, கடன் தராதவங்க கிட்ட நான் அதைக் காட்டித்தான் வசூல் பண்றேன்" என்றார். இப்படி

தந்தைபெரியாரின் தத்துவங்கள் கருத்துகள் எல்லாம் இந்த நாட்டின் மூலை முடுக்குகளில் எல்லாம் சென்று சாமான்ய மக்களின் எண்ணங்களில் சிந்தனைகளில் வேரூன்றி நிற்பவை.

மானமும் அறிவும் மழுங்கிப் போகும்படி அடியாக்கப்பட்ட இனத்திற்காகத் தம் வாழ் நாளையே ஒப்புவித்துக் கொண்ட பெரியார் எந்தெந்த இடங்களில், எந்தெந்த வடிவங்களில் எல்லாம் நம் மக்கள் இழிவுபடுத்தப்பட்டார்களோ, எப்படி யெப்படி எல்லாம் நம் மக்கள் முட்டாள் களாக மூடர்களாக ஆக்கப்பட்டார்களோ அந்த இடங்களில் எல்லாம் நுழைந்து தயவு தாட்சண்ய மின்றித் தாக்குதலை நடத்தியவர் பெரியார்.

பகுத்தறிவின் வழிநின்று கடவுள் இல்லை, இல்லவே இல்லை என்கிற பெரியார்தான் கடவுளை வழிபட அனுமதி மறுக்கப்பட்ட மக்களின் பக்கத்தில் நின்று கொண்டு கோவில் நுழைவுப் போராட்டங்களை நடத்தினார். இங்கே பெரியாருக்கு கடவுளின் தேவையும் எழவில்லை. பகுத்தறிவின் கவலையும் எழவில்லை. அவருக்கு முன்நின்றது ஒன்றே ஒன்றுதான் 'மறுக்கப்பட்ட உரிமையை மீட்பது'.

கடவுள் இல்லை, கடவுளை நம்பாதே! வணங்காதே! என்ற பெரியாருக்குத் தேவைப்பட்டது எதுவோ, அதுவேதான் கோவிலுக்குள் வருகிறவர்களைத் தடுக்காதே என்பதிலும், கருவறைக்குள் போக அனுமதி மறுக்காதே என்பதிலும் இருந்தது. அதனால்தான் பெரியார் அத்தனை இடங்களையும் கடந்து இன்னமும் தமிழ் மண்ணில் தலைநிமிர்ந்து நிற்கிறார்.

தான் வாழ்ந்த காலத்தில் கல்லடியும், சொல்லடியும், ஏன் செருப்படியும் வாங்கியதன் காரணம் எதுவாக இருந்ததோ அதுவேதான் அவர் மறைந்து 50 ஆண்டுகள் ஆகிற நிலையிலும் அவரது சிலை அவரைப் போலவே எதிர்ப்புகளை சந்திக்கும்படி செய்கிறது. பெரியார் ஒருவர்தான் சொன்னபடி நடந்தார் என்பதற்கு மறுக்க முடியாத சாட்சிகளாக அவரது எதிர்ப்பாளர்கள் இன்றும் பெரியாரை நிரூபிக்கிறார்கள்.

பெரியாரின் கவலையெல்லாம் இந்த மக்கள் மானமும் அறிவும் உள்ளவர்களாக வாழ வேண்டும் என்பதே! அதைத்தவிர அவருக்கு வேறு இலக்கே இல்லை என்பேன்! அந்த ஒற்றை இலக்குக்காகவே அவர் இந்த பூமியின் சுற்றளவைப்போல் 33 மடங்கு சுற்றுப் பயணத்தை நடத்தி, பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகளில் பங்கேற்று இருபதாயிரம் மணிநேரங்களுக்கும் மேலாக உரையாற்றினார். தன் இறுதி சுவாசத்திற்கு நான்கு நாட்கள் வரை கொண்ட கொள்கையை முழங்கிய ஒரு புரட்சியாளரை, ஒரு தத்துவஞானியை பெரியாருக்கு முன்னும் பின்னும் இந்த மனித சமூகம் காணவில்லை.

திராவிட சமுதாய இன மக்களை வெறும் அதிகார மிரட்டலால் மட்டுமே சின்னஞ்சிறு பார்ப்பனக் கூட்டம் இத்தனையாண்டு காலமும் கட்டிவைத்திருக்கவில்லை. இந்த சமூகத்தின் மூளையில் ஒரு நம்பிக்கைக் கயிற்றைக் கட்டி அச்சம் என்கிற முடிச்சைப் போட்டு வைத்திருக்கிறது. அதனால்தான் கணினி அறிவியலைப் படித்துவிட்டு, அமெரிக்காவில் போய் அறிவியல் அறிவைக் கொண்டு காசு பார்த்து வயிறு வளர்க்கும் மகாமகா பட்டதாரிகள், படிப்பாளிகள் கூட திருமண வயது வந்ததும், ஜாதகத்தை வைத்துக் கொண்டு ஜாதிக்குள் பெண் தேடி, பொருத்தம் பார்த்து, நாள் குறித்து, சடங்கு, சம்பிரதாயங்களோடு திருமணம் செய்துகொள்ள கொஞ்சமும் வெட்கப்படுவதே இல்லை.

நோக்கியாவும் சாம்சங்கும் தயாரித்த ஆன்ட்ராய்டு ஃபோனில் யானைத் தலையும் மனித உருவமும் நான்கு கைகளும் கொண்ட உருவப்படத்தை முகப்புப்படமாக வைத்துக் கொள்ளவும், அழைப்பு மணியோசைக்கு பதிலாக, "தீராத வினையெல்லாம் தீர்த்து வைப்பான்.." என்ற பாடலையும் கூச்சமே இல்லாமல் ஒருவனால் வைத்துக்கொள்ள முடிகிறதென்றால் அவன் எவ்வளவு நுண்ணிய கட்டுப்பாடுகளுக்குள் சிக்குண்டு கிடப்பான் என்பதைக் கவனித்தால் புரியும், பெரியார் ஏன் "மானமும் அறிவும் மனிதர்க்கு அழகு!" என்று வலியுறுத்தி அதற்காகவே தாம் உழைப்பதாகவும் சொன்னார் என்பது.

பார்ப்பனரல்லாத மக்களை எவ்வளவுக்கு எவ்வளவு அடிமைகளாக, முட்டாள்களாக, சிந்திக்கவே தெரியாத மூடர்களாக, இந்த விஞ்ஞான யுகத்திலும் அறிவியலை வெறும் வயிறு வளர்க்கவும், காட்டுமிராண்டிக் கால பழக்க வழக்கங்களை வாழ்வியல் கடமையாகவும் எண்ணும்படியும் அதை எவ்வகையிலும் நியாயப்படுத்தும்படியான, அயோக் கியர்களாகப் பார்ப்பனர் ஆக்கி வைத்துள்ளனர் என்பதற்கான மிகப்பெரும் சான்றுகள் நம் வீட்டு துக்க மகிழ்ச்சி நிகழ்வுகளில் கடைபிடிக்கப்படும் சடங்குகளில் இருந்து தெரியும்.

திருமணம் என்பது ஓர் ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்வதற்கான ஓர் ஏற்பாடு அவ்வளவு தான். இதிலே பார்ப்பனர்களால் புகுத்தப்பட்டுள்ள சடங்குகளும் சம்பிரதாயங்களும் எத்தனை யெத்தனை!

மணம் முடித்துக்கொள்ளும் ஆணும் பெண்ணும் ஒரே சாதியினராக இருப்பதும், இவர்கள் திருமணம் இவர்கள் இருவரின் குடும்பத்துப் பெரியோர்களால் மட்டுமே உறுதிசெய்யப்பட வேண்டும் என்பதும், அப்படி உறுதிசெய்யப்பட்டு நடத்தப்படும் திருமணத்தை பார்ப்பனர்களே அவர்களது பழக்க வழக்க விருப்பு வெறுப்பு சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு நடத்தி வைக்க வேண்டும் என்றும் இந்தப்படி நடக்காத திருமணங்களை சட்டப்படி ஏற்க இயலாது என்றும் இந்த மண்ணில் ஒரு கண்டிப்பான கட்டுப்பாட்டை ஏற்படுத்தியிருந்தனர் பார்ப்பனர்கள்.

பெரியார் அவர்களின் சாதி ஒழிப்பு நடவடிக்கைகள் பற்பல வகையிலானவை. அவற்றில் ஆகப்பெரிய நடவடிக்கை சாதியைப் பாதுகாக்கும் அரசியல் சட்ட எரிப்புப் போராட்டம். 1957-ஆம் ஆண்டில் நவம்பர் 26 அன்று மிகப்பெரிய இழப்புகளையும் வலிகளையும் எதிர்கொண்டு நடத்தப்பட்ட போராட்டம். ஆனால், இதற்கும் முப்பது ஆண்டுகளுக்கும் முன்பே பெரியார் நடத்திய பண்பாட்டுப் புரட்சிதான் சுயமரியாதைத் திருமணங்கள்!

திருமணத்தின் அடிப்படை அம்சங்களாக பார்ப்பன வேத மத சட்டங்கள் வலியுறுத்தும் ஜாதியை, தாலியை, சடங்கு சம்பிரதாயங்களை மறுத்து ஒதுக்கியதோடு திருமணத்தை நடத்திட புதோகிதர் என்கிற புரோக்கருக்கும் இடமில்லை எனப் பார்ப்பனர்களின் அடிமடியிலேயே கையை வைத்தார் பெரியார்.

இந்த இடத்தில் அன்றொரு வரலாற்றை நாம் திரும்பிப் பார்த்துவிட்டு வருவதே இந்தக் கட்டுரையை முழுமையாக்கும். அது, ஆயிரத்து தொள்ளாயிரத்தின் தொடக்கத்தில் ஆங்கிலேய அரசு வெளியிட்ட ஒரு கணக்கீட்டில் இந்த நாட்டில் பெண் குழந்தைகள் ஒரு வயது முதலே விதவைகளாக அதாவது, திருமணமும் நடந்து கணவனையும் இழந்து இனி வாழும் காலம்வரை பார்ப்பனிய வேத சடங்குகளின் ஒடுக்கு முறையில் உப்புப் போட்டு கூட சோறு திங்க முடியாத அவலத்தில் வாழ்ந்து சாக வேண்டும் என்கிற சடங்கு விதிக்கு ஆட்படுத்தப்பட்டிருந்த கொடுமைகளை இந்த சமுதாயம் நியாயப்படுத்தி வைத்திருந்த அந்தக் காலத்தில் பெரியாரின் சுயமரியாதைத் திருமணங்களில் பெரிதும் விதவை மறுமணங்களாக நடத்தப்பட்டன.

ஏன், பெரியாரால் 1928-ஆம் ஆண்டு அதாவது தொன்னூறு ஆண்டுகளுக்கும் முன்பு முதன்முதலாக நடத்தப்பட்ட சுயமரியாதைத் திருமணம், அருப்புக்கோட்டை சுக்கிலாநத்தம் கிராமத்தைச் சேர்ந்த சண்முகம் - மஞ்சுளா இணையர் திருமணம் தான். இதிலே மணமகள் மஞ்சுளா ஒரு விதவைப் பெண்.

இன்றைக்குப் பல புரட்சிகரத் திருமணங்கள் வெகுஇயல்பாக நடத்தப்படுகிற, நாள்தோறும் சாதி மறுப்புத் திருமணங்கள் பதியப்படுகிற காலத்தில் கூட, பெண் ஏற்கனவே மணமானவர் எனில் சற்றே பின்வாங்குகிற, மனம் சுறுக்குகிற பல சீர்திருத்தக்காரர்களை நாம் பார்க்கிறோம் எனில், தொன்னூறு ஆண்டுகளுக்கும் முன்பு சுயமரியாதைத் திருமணத்தை விதவை மறுமணமாக, சாதி, தாலி, சடங்கு, புரோகித மறுப்புத் திருமணமாக 100 விழுக்காடு சுயமரியாதைத் திருமணமாக நடத்திக் காட்டியவர் பெரியார். இங்கு தான் பெரியார் 'பார்ப்பனியம்' என்கிற ஒரு பண்பாட்டுக் கற்பனாவாதப் பிரமாண்டத்தின் அடிக்கட்டுமானத்திலேயே அணுகுண்டை வைத்தார்.

**பெரியாரின் கவலையெல்லாம் இந்த மக்கள் மானமும் அறிவும் உள்ளவர்களாக வாழ வேண்டும் என்பதே! அதைத்தவிர அவருக்கு வேறு இலக்கே இல்லை என்பேன்! அந்த ஒற்றை இலக்குக்காகவே அவர் இந்த பூமியின் சுற்றளவைப்போல் 33 மடங்கு சுற்றுப் பயணத்தை நடத்தி......**

இன்றுவரை பார்ப்பனத் தகிடுதத்தங்களை பட்டையும் கொட்டையுமாகத் திரிகிற பக்திப் பைத்தியங்கள் கூட ஏற்க மறுத்து, விடாது விரட்டி விரட்டி அடிக்கிறது என்றால், தமிழ் மண்ணில் பார்ப்பனியம் தமது அதிகாரங்களை வைத்து மறுகட்டமைப்பு செய்திடும் முயற்சிகள் தொடர்ந்து சரிந்து வீழ்ந்து கொண்டே இருக்கிறது என்றால், இதன் அஸ்திவாரக் குழிக்குள் பெரியார் என்கிற வெடி குண்டின் கருமருந்து இன்னமும் காரம் போகாமல் இருக்கிறது என்பதைத்தவிர வேறு எதுவும் காரணமில்லை என்று நான் உரக்கச் சொல்வேன்.

விடுதலை பெற்ற இந்தியக் குடியரசில் புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் பெரு முயற்சியால், இந்திய அரசியல் சட்டத்தில் பல மாற்றங்கள் புகுத்தப்பட்டன. இன்னல்கள், இழிவுகள், கொலை மிரட்டல்கள் அனைத்தையும் தாண்டிப் புரட்சியாளர் அம்பேத்கர் பல சட்டங்களை தீட்டினார். அதிலே குறிப்பிடத்தக்க ஒன்று, ஸ்பெஷல் திருமணச்சட்டம். 1947 தொடங்கி அம்பேத்கரின் ஓயாத போராட்டத்தின் விளைவாக 1951-இல் நாடாளுமன்றத்தில் விவாதத்திற்கு வந்தது. ஆனால், நூலாதிக்கம் அச்சட்டத்தை நிறைவேற்ற அனுமதிக்கவில்லை. இதுபோன்ற பல்வேறு சமூகநீதி மற்றும் மதச்சீர்திருத்தச் சட்டங்கள் புத்தகத்தில் எழுதப்பட்டு பின்னர் நாடாளுமன்ற விவாதங்களில் தலையும் காலும் கைகளும் வெட்டப்படுவதும், சில விவாதக் களத்திலேயே கதை முடிக்கப்படுவதுமான பார்ப்பனச் சூழ்ச்சியைக் கண்டு வெகுண்டெழுந்து, கேவலம் எனது கோரிக்கைகளைக் கூட நிறைவேற்றத் தகுதியில்லாத இந்த மந்திரி பதவி யாருக்கு வேண்டும் என்று கேட்டு இந்தியாவின் சட்டமந்திரி என்கிற பொறுப்பை பார்ப்பனர்களுக்கே பிச்சைப்போடுவது போல தூக்கி எறிந்துவிட்டு அம்பேத்கர் வெளியேறிய பின்னர், சமூகத்தில் புரட்சியாளர் அம்பேத்கரும் தந்தை பெரியாரும் ஏற்படுத்திய தாக்கங்களின் அழுத்தத்தால் ஸ்பெஷல் திருமணச்சட்டம் 1954ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இதில் கூட வேற்று மதத்தவர்களின் கலப்புத் திருமணம் தான் (Inter Religion Marriage) சட்ட அங்கீகாரம் பெற்றது. இந்து மதத்திற்குள்ளேயே இருவேறு சாதியினர் செய்துகொள்ளும் சாதிக் (Inter Caste Marriage) கலப்புத் திருமணங்களை இச்சட்டம்

அங்கீகரிக்கவில்லை. பின்னர் இந்துமதச் சீர்திருத்தச் சட்டம் 1955ஆம் ஆண்டு பண்டித நேருவின் தொடர் முயற்சியால் பலத்த பார்ப்பன எதிர்ப்புக்கிடையே நிறைவேறியது. ஆனாலும், இதில் எந்தச் சட்டமும் பார்ப்பனர்களின் அடிக்கட்டுமானத்தைத் தொட முடியவில்லை. காரணம் இந்து திருமணம் என்பது சாஸ்திர சம்பிரதாயங்கள் மற்றும் புரோகிதத் திருமணங்கள்தான் என்கிற அடிக்கட்டு மானம் பாதுகாப்பாகவே இருந்தது.

**வாழ்க அறிஞர் அண்ணா**

கெட்டித்தட்டி போயிருந்த பார்ப்பனச் சடங்குகளில் இச்சட்டங்கள் சில ஊசலாட்டங்களை ஏற்படுத்தின, சில உடைப்பு களை ஏற்படுத்தின என்பது மறுக்க முடியாத உண்மை. ஆனால்,

> “அய்யா இந்த ஆட்சி உங்களுடையது. என்னென்ன கொள்கைகளை உங்கள் லட்சிய முழக்கமாகக் கொண்டு நீங்கள் இந்த நாட்டில் பட்டிதொட்டியெங்கும் ஓய்வறியாத சூரியனாய் மூத்திரச் சட்டியைத் தூக்கிக்கொண்டு சுற்றிச்சுற்றி வருகிறீர்களோ அந்தக் கொள்கைகளை, லட்சியங்களை எல்லாம், இதோ உங்கள் பிள்ளைகள் நாங்கள் ஒற்றைக் கையெழுத்திலே நிறைவேற்றிடச் சித்தமாக இருக்கிறோம். நீங்கள் இனி கவலை கொள்ள வேண்டாம். நீங்கள் எண்ணுவதை செய்து முடித்துவிடும் ஆற்றல் வாய்ந்த அதிகாரம் படைத்த பிள்ளைகள் நாங்கள் இருக்கிறோம்”

என்று 1967ஆம் ஆண்டில் அடைமழை கொட்டும் ஒரு நள்ளிரவில் திருச்சி புத்தூர் மாளிகையில் 18 ஆண்டு பிரிவினைக்குப் பிறகு தந்தையைச் சந்தித்த முதல்வர் அண்ணா மானசீகமாகக் கும்பிட்ட கைகளோடு பெரியாரின் கைகளை எடுத்து தன் கைகளுக்குள் வைத்துக் கொண்டு கண்ணீர் கோர்க்கச் சொன்னார். சொன்னபடி செய்தார்.

1967ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ‘சுயமரியாதைத் திருமணச் சட்டம்’ நிறைவேறியது. சாதாரண சீர்திருத்தச் சட்டங்களுக்கே டில்லிப் பார்ப்பனர்கள் வானத்துக்கும் பூமிக்கும் குதித்தார்கள். அய்யோ, எங்கள் பாரம்பரிய பண்பாடு போகிறதே என்றார்கள். ஆனால், சடங்கு, சம்பிரதாயம், சாஸ்திரம் மட்டுமல்ல பார்ப்பன புரோகிதரும் தாலியும் இல்லாமலே வெறும் மாலை மாற்றிக்கொண்டால் போதும் என்கிற மான மீட்பு சுயமரியாதைத் திருமணச் சட்டம் சலனமே இல்லாமல் தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேறியது.

இதற்கும் முந்தைய 40 ஆண்டுகால பெரியாரின் பேருழைப்பே இச்சட்டத்தை நிறைவேற்ற வாய்ப்பான சூழலை உருவாக்கியது. காரணம் இந்திய நாடாளுமன்றத்தில் ஸ்பெஷல் திருமணச் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கும் கால் நூற்றாண்டுக்கும் முன்பே பெரியார், பார்ப்பனர் மற்றும் பார்ப்பனச் சடங்குகள் - சட்ட திட்டங்கள் அல்லாத சட்டப்படி செல்லுபடியாகாத திருமணங்களை நூற்றுக்கணக்கில் நடத்தி ஒரு சடங்கு மறுப்பு சமூகத்தையே உருவாக்கிவிட்டார்.

சுயமரியாதை இயக்கம் - திராவிடர் கழகம் சார்பாக பெரியார் நடத்திய ஆயிரக்கணக்கான சுயமரியாதைத் திருமண இணையர்கள் தங்கள் உற்றார், உறவுகளை, குடும்பத்தில் தமக்குள்ள உரிமைகளை, சட்டப்படியான அங்கீகாரத்தை அனைத்தையும் துறந்துவிட்டு தன்மானம் - சுயமரியாதை பகுத்தறிவு என்கிற கொள்கை உறுதியில் தங்களை ஆணித்தரமாக நிலைநிறுத்திக் கொண்டனர்.

இவர்களில் பலபேருடைய திருமணங்களுக்கு 35, 40 ஆண்டுகள் ஆனபின்பு, பல இணையர்களின் வாரிசுகளே மணம் முடித்த பிறகு, பலபேர் பேரக் குழந்தைகளை கொஞ்சிக் கொண்டிருக்கும் நிலையில்தான் இவர்களுடைய திருமணங்கள் செல்லும் என்கிற சட்டமே வந்தது என்பதுதான் வேடிக்கை. தன்னுடைய கொள்கைக்கு எதையும் தாங்கும் இதயம் கொண்ட தொண்டர்களே கொண்டிருந்த ஒரே தலைவர் தந்தை பெரியார் தான் என்பதை ரத்த சாட்சியாக நிரூபிக்கிற நிகழ்வுதான் சுயமரியாதைத் திருமணங்கள். அந்த சுயமரியாதைத் திருமணத்திற்கு சட்ட அங்கீகாரம் வழங்கியது தான் மகன் தந்தைக்காற்றிய உதவி.

இந்தச் சட்ட முன்வரைவு தயாரித்த பின் எதற்கும் இதை அய்யாவிடம் ஒருமுறை காட்டிவிடலாமே என்று அண்ணா முடிவெடுத்து சட்ட முன்வரைவின் பிரதி ஒன்றை பெரியாரின் பார்வைக்கு அனுப்பியுள்ளார்.

அதை முழுமையாக ஊன்றிப் படித்த பெரியார் தாலி அண்டு மாலை என்றிருந்ததை “தாலி அல்லது மாலை” என்று திருத்திவிட்டுச் சொன்னாராம், “தாலியும் மாலையும்” என்று மட்டும் பார்ப்பான் எதிர்காலத்திலே இதை மாற்றிவிடுவான். “தாலி அல்லது மாலை” என்று என்றிருந்தால் தான் தாலி இல்லாத சுயமரியாதைத் திருமணங்கள் அங்கீகரிக்கப்பட்டு நம் பெண்களின் அடிமைச் சங்கிலி அறுபடும்” என்று கூறினார்.

**இந்தச் சட்டம் 50 ஆவது ஆண்டை நிறைவு செய்கிறது தமிழகத்தில். இங்கே பார்ப்பனப் பூண்டு முளை வரும் என்று யாரேனும் நம்புகிறீர்களா? இன்றும் ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் பெரியார் எனும் கருமருந்து புகைந்து கொண்டே இருக்கிற தமிழகம் பார்ப்பனியத்தின் புதைகுழி என்பதை இந்த நாளில் ஓங்கிச் சொல்வோம்!**

**வாழ்க பெரியார்!**

**வாழ்க சுயமரியாதைத் திருமணங்கள்!!**

**வாழ்க அறிஞர் அண்ணா!!!**

தமிழில்: பேராசிரியர் கிரண்குமார்

# ‘கரு’ மறுப்பாளர் – குழந்தை மறுப்பாளர்

## *Antinatalism*

# Anti - Natalist



ஜனத்தொகை நிரம்பி வழியும் இந்த மூர்க்கத்தனமான உலகினுள் குழந்தைகளை ஈன்றெடுக்கக் கூடாதென பல இந்தியர்கள் முடிவு செய்து கொண்டிருக்கின்றனர்.

நகர்ப்புற இந்தியாவில் வாழும் தம்பதிகள் பலர் இக்கிரகத்தின் மீதான பாரத்தைக் குறைப்பதற்காகவே குழந்தை-வேண்டாத் தம்பதிகளாக (Child-free) வாழ்ந்து வருகின்றனர்.

ஒரு கட்டுரையில் இருந்த அந்த வார்த்தையைக் கடந்து வந்த பிறகு, “நான் கருமறுப்புவாதியா (Anti-natalist?)” என்று ஆழமாகச் சிந்தித்தேன். எனது கணவர், “தேச விரோதிகளா? (Anti-nationalist?) ” என்று கேட்டார். அவருடைய கருத்தை நான் திருத்திக் கூறினேன் - அதிகச் சுமையுள்ள இந்த உலகிற்குள் மனிதர்களைக் கொண்டுவருவது என்பதே கொடூரமானது என்று நம்பும் ஒரு தத்துவம் - என்று அந்தக் கருத்தை நான் தொடர்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தபோது அவருக்கு பதிலளித்தேன்.

எனக்கு முப்பத்தியெட்டு வயதிருக்கும்; நானும் எனது கணவரும் பதிமூன்று வருடங்களாக ஒன்றாக வாழ்ந்து வருகிறோம், சூழ்நிலையின் காரணமாக எங்களுக்குக் குழந்தைகள் இல்லை. நீண்ட நாட்களுக்குப் பிறகு நாங்கள் எடுத்த முடிவால், இன்று நாங்கள் தத்தெடுத்து வளர்க்கும் இரண்டு நாய்களால் எங்களுடைய ‘குடும்பம்’ முழுமையடைந்தது. எங்கள் மூலமாகத்தான் எனக்கு குழந்தைகள் வேண்டும் என்று நான் எப்பொழுதுமே கருதியதில்லை. எனினும் எனது தாய்மை உணர்வு வெளிப்பட்டிருக்குமேயானால், நான் தத்தெடுக்கும் வழியைத்தான் தேர்வு செய்திருப்பேன்.

எனது காரணங்கள் ஒன்றும் வழக்கத்துக்கு மாறானவையல்ல. தாய்-தந்தை நிலை என்பது எல்லோருக்குமானது அல்ல; குழந்தை வளர்த்தெடுப்பது என்பது ஒரு மிகப்பெரிய பொருளாதாரம் மற்றும் உணர்வு ரீதியான முதலீடாகும்; மிக அதிகமான அளவில் விட்டுக் கொடுத்தலும் அர்ப்பணிக்கும் திறனும் இதற்குத் தேவை; நானும் எனது கணவரும் பல்வேறு வழிகளில் மனநிறைவேற்றத்தை அடைந்திருக்கிறோம். ஆனால், கடைசிப் பத்து வருடங்களாக இன்னும் அதற்குத் தடையாக இருந்த இன்னுமொரு காரணம் காலத்தோடு சேர்ந்து மிகவும் வலுவாக வளர்ந்தது.

எந்த உலகத்தினுள் எனதுக் குழந்தையை கொண்டு வரவேண்டும் என்று விரும்பினேனோ அது இந்த உலகம் இல்லை. நாம் வாழும் இந்தக் காலகட்டத்தின் அழுத்தங்களினாலும் பிரச்சினைகளினாலும் அந்தக் குழந்தை பாதிப்படையும். இதிலிருந்து அவர்களைப் (குழந்தைகளை) பாதுகாப்பதற்கு என்னால் உறுதியான உத்தரவாதம் கொடுக்க முடியாது. இந்தியாவில், நாள்தோறும் சுற்றுச்சூழல் மற்றும் வாழ்க்கைமுறை சார்ந்த பிரச்சினைகளைப் பற்றிய செய்தித் தலையங்கங்கள் வந்துகொண்டே இருக்கின்றன.

பல ஆய்வறிக்கைகள் கூறியபடி, இவையனைத்தும் அதிக மக்கள் தொகையினால் எழும் பிரச்சினைகள்தான். சுற்றுச்சூழல் பிரச்சினைகளைத் “தீர்க்கப்பட வேண்டியவை” என்று எல்லோரும் ஒப்புக் கொண்டாலும், நடைமுறையில், ஒவ்வொருவரும், “நாம் குழந்தை பெற்றுக்கொள்ள வேண்டும்” என்று எடுக்கும் முடிவானது - சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பதை எந்த அளவுக்குப் பாதிக்கிறது என்பதைப் பற்றி கவனத்தில் கொண்டதுண்டா? இந்தியாவில்; குழந்தைகள் வேண்டாம் அல்லது குழந்தைகளை தத்தெடுத்துக் கொள்வதாக முடிவெடுத்த தனிமனிதர்களுக்கு அந்த முடிவெடுக்கும் வகையில் வழிசெய்வதில் சூழலியல் தொடர்பான பிரச்சினைகள் முக்கிய பங்காற்றுகின்றனவா?

### சமநிலையை மீட்டெடுத்தல்

கருமறுப்பியம் (Anti-Natalism) என்பது ஒரு புதிய தத்துவமல்ல. இத்தத்துவம் பண்டையகால கிரேக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. சோபகில்ஸ் (Sophocles) எழுதிய ஈடிபஸ் (Oedipus) என்னும் நாடகத்தில் வாழ்க்கையைப் பற்றிய இரங்கற்பாவில் அதற்கான சான்றுகள் உள்ளன. தீவிர கருமறுப்புவாதிகள், பிறப்பு என்பதை ஒரு அறமற்ற செயலாகக் கருதுகின்றனர். அவர்கள் இனப்பெருக்கத் தடையை மக்களுக்கு ஊக்கு விக்கின்றனர். இது சீரான அளவில் மனித இனத்தையும், தவிர்க்கவே முடியாத துன்பங்களைத் தாங்கிக் கொண்டிருக்கும் மனித வாழ்க்கையையும் அதன் விளைவுகளையும் சேர்த்து நீக்கிவிடும்.

மார்வெல் ஸ்டுடியோஸ் (Marvel Studios) தயாரித்த அவஞ்சர்ஸ் இன்ஃபினிட்டி வார் (Avengers: Infinity War) திரைப்படத்தில் இந்தச் சிந்தனை எதிரொலிப்பதைக் காணலாம். அழிவை ஏற்படுத்தி சமநிலையை மீட்டெடுப்பதற்கான காரணங்களைத் தன்னுடைய மகளான கமோராவிடம் (Gamora) அத்திரைப்படத்தில் எதிரியாக வரும் தானோஸ் (Thanos) கூறுகிறார்.

“மகளே, இது ஒரு சாதாரணமான கணக்குத் தான். இந்தப் பிரபஞ்சம், வரையறுக்கப்பட்ட அளவிற்குத்தான் அதன் வளங்களைக் கொண்டுள்ளது. உயிர்கள் தடுக்கப்படாமல் இருந்தால், அந்த உயிர்கள் அழிக்கப்பட்டுவிடும். அதற்கு மாற்றங்கள் தேவை.”

கருமறுப்பியத்தைப் பின்பற்றும் இன்னும் சிலர் தீவிரம் குறைந்த பார்வைகளையே கொண்டிருக்கின்றனர். அனைவரும் இனப் பெருக்கத்தை நிறுத்திக் கொள்வார்கள் என்பது நடைமுறைக்குச் சாத்தியமேயில்லை என்பதை அவர்கள் உணர்ந்திருந்துள்ளனர். ஆனால், இம்முடிவை எடுப்பதன் மூலம் மக்கள் தொகை அதிகரிப்பதைக் கட்டுப்படுத்த முடியும். தான் ஈன்றெடுக்கும் குழந்தையே வேண்டும் என்ற எண்ணத்தை தவிர்ப்பதன் மூலம்; பெற்றெடுப்பதற்குப் பதிலாக ஒரு குழந்தையைத் தத்தெடுப்பதன் மூலம்; அல்லது அவர்கள் ஒரு பெரிய குடும்பம் வேண்டுமென்று எண்ணினால், ஒரு குழந்தையை மட்டும் பெற்றெடுத்துவிட்டு, நிறைய குழந்தைகளைத் தத்தெடுத்துக் கொள்ளலாம்.

இந்திய நகரங்களில் வாழும் மக்கள் இதிலிருக்கும் ஒரு சில கருத்துக்களைத்தான் இப்பொழுது சிந்தித்துக் கொண்டிருக்கின்றனர். அதிலும் குறிப்பிடத்தக்க அளவில் தங்களுக்குக் குழந்தை வேண்டாம் (Child-free) என்று பலர் தேர்வு செய்தனர். மேற்கூறிய பிரச்சினைகளின் பொருட்டு தங்களுக்குக் குழந்தை வேண்டாம் என்றும் அல்லது தாங்கள் பெற்றோர்களாக வேண்டுமென்றால் தத்தெடுத்துக் கொள்வதாகவும் முடிவெடுத்தனர்.

### நீலம் சிங்

பதிப்புத்துறையில் வேலை பார்க்கும் 44 வயது நீலம்சிங், குழந்தைகளோடு இருக்கும் அவரது வாழ்க்கையைக் கற்பனைகூட செய்து பார்த்த தில்லை. “குழந்தைப் பருவத்திலிருந்தே, எதற்காக திருமணத்திற்குப் பிறகு கண்டிப்பாகக் குழந்தைகள் பெற்றுக்கொள்ள வேண்டும்? என்ற கேள்வி இருந்தது.” என்று கூறினார். தனக்குக் குழந்தை வேண்டாம் என்று முடிவெடுத்ததில் சுற்றுச்சூழல் பற்றிய கருத்தின் பங்கு மிக முக்கியமானது என்கிறார். “தண்ணீர் பற்றாக்குறை, மாசுபடுதலின் அளவு, இயற்கை வளங்களைச் சூறையாடுதல் இவை யனைத்தும் எனக்கு முக்கியமாகப்பட்டன. நான் கட்டுப்பாட்டுடன் வாழ்ந்து வருகிறேன், வரும் தலை முறையினருக்காகச் சில முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களை விட்டுச் செல்லும் பொருட்டு, இதையே மற்றவர்களும் செய்ய வேண்டும் என்று வேண்டுகிறேன்.”

“எத்தனைக் காரணங்கள் இருந்தாலும் இந்தியாவில் குழந்தை-வேண்டா தம்பதியர்களாக வாழ வேண்டும் என்று முடிவெடுப்பது மிகவும் கடினம். சமூகம், குடும்பம், நண்பர்கள் மற்றும் வாழ்க்கைத்துணை இவர்களால் கடுமையான அழுத்தங்களுக்கு உள்ளாகின்றனர். ஆனாலும் சில தம்பதிகளுக்கு இது அவர்களது முன்னேற்றத்திற்கும் எதிர்கால இலக்குகளை அடைவதற்கான வாய்ப்பாகவும் இருக்கிறது” என்றார்.

### மானாவ்

உடல் நலம் மற்றும் அறிவியல் காப்பீட்டுத் துறையில் வல்லுனரான இவருக்கு 18 வயதிருக்கும் போது, அதாவது 21 ஆண்டுகளுக்கு முன்னர் தனக்குக் குழந்தை வேண்டாமென்று முடிவெடுத்தார். அதன் பின்னர் அவருடைய அந்த முடிவிலிருந்து அவர் பின்வாங்கவேயில்லை. அவருக்கு இந்தத் துன்பமான உலகினுள் அந்தக் குழந்தைகளுடைய உடன்பாடில்லாமல் அவர்களை இவ்வுலகிற்குள் கொண்டுவருதற்கு விருப்பமில்லை. மேலும், இந்தப் பூமியின் பாரத்தை மேலும் அதிகமாக்க விரும்பவில்லை.

இன்னுமொரு காரணம், அவருடைய குடும்பத்தில் இருக்கும் அந்த மரபுவழி நோய்ப் பிரச்சினைகளால் அந்தக் குழந்தை பாதிப்புக் குள்ளாகி விடக்கூடாது. “நாம் எல்லோரும் உயிர் பிழைத்துக் கொண்டிருக்கிறோம்; இந்தப் பிரச்சினையால் தான் டெல்லி போன்ற நகரங்களில் வாழும் மக்களின் உளவியல் (மனம்) அதிகம் பாதிக்கப்படுகின்றது.” என்று அவர் எடுத்த இந்த உறுதியான முடிவின் காரணமாக இன்னும் திருமணமாகாதவராக உள்ளார். இதுவரை எந்தத் துணையும் அவருடைய இந்த முடிவை ஏற்றுக் கொள்ளவில்லை என்று அவர் வெளிப்படை யாகவே கூறினார்.

**அதிக மக்கள்தொகையின் விளைவு**

அதீதமாகப் பெருகிவரும் இந்திய மக்கள் தொகையின் சதவீதத்தையும் அதனால் விளையும் நடைமுறைச் சிக்கல்களையும் நாம் பார்த்துக் கொண்டிருந்தாலும், நாம் தெளிவாகவே கடந்து செல்கிறோம். தற்போதைய நிலவரப்படி இந்திய மக்கள்தொகைப் பெருக்கமானது 1.3 பில்லியன் என இருக்கின்ற காரணத்தினால், உலகின் இரண்டாவது மக்கள்தொகை கொண்ட நாடாக உள்ளது. வரும் 2024-ஆம் ஆண்டில் சீனாவின் மக்கள்தொகை எண்ணிக்கையை முறியடித்துவிடுவோம். இதில் ஒரு மனிதன் இல்லாமல் போனால் என்ன பாதிப்பு ஏற்படப் போகிறது?

*Environmental Research Letters* என்னும் இதழில் ஒரு ஆய்வு வெளியிடப்பட்டது. அந்த ஆய்வில், பல குழந்தைகள் பெற்றுக்கொள்வதற்கு மாற்றாக, ஒரே ஒருகுழந்தையை மட்டும் பெற்றுக்கொள்வதன் மூலம் அந்தப் பெற்றோர்களால், ஒவ்வொரு வருடமும் 58 மெட்ரிக் டன்கள் C02 (கார்பன் டைஆக்ஸைடு) குறைகின்றது. இன்னும் பல பயனுள்ள வழிகளில் ஒருவரின் கார்பன் தடத்தை ஒப்பீட்டளவில் குறைக்க முடியும். வாகனங்கள் இல்லாமல் செல்லும் போது 2.4 மெட்ரிக் டன் மாசையும் மற்றும் உணவுக்குத் தாவரங்களை அதிகம் பயன்படுத்துவதன் மூலம் 0.82 மெட்ரிக் டன்கள் மாசையும் குறைக்க முடியும்.

என்னதான் நாம் இந்த எண்ணிக்கைகளைப் புறக்கணித்தாலும், அதன் விளைவுகளை நாம் உணர்ந்துகொண்டுதான் வருகிறோம். இன்னும் இரண்டு வருடங்களில் டெல்லி மற்றும் பெங்களூரு போன்ற நகரங்களில் தண்ணீர் முழுவதுமாக வற்றிவிடும். அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் ஆய்வு மையத்தின் கூற்றுப்படி, டெல்லியில் இருக்கும் அதிக மாசுபடுதலினால் ஒவ்வொரு மூன்றாவது குழந்தையும் குணப்படுத்த முடியாத அளவிற்கு நுரையீரல் பாதிப்படைவதாகத் தெரிய வருகிறது. தொடர்ந்து அதிகரித்து வரும் மாணவர்களின் எண்ணிக்கையால் அவர்களின் தேவையைக் கல்வி நிறுவனங்களால் சமாளிக்க முடியாமல் திணருகின்றனர். அரணாயிருந்த வனப்பகுதிகளைச் சுருக்கிக் கட்டுமானங்களுக்கு வழிவகுத்துவிட்டனர்.

**கேரன் டி'சோஸா Karen D'Souza**

செய்தித்தாள் ஆசிரியரும் எழுத்தாளருமான இவர், குழந்தை வேண்டாமென்று தான் எடுத்த முடிவைப் பற்றி உற்சாகமாகப் பேசுகிறார். அவர் கூறியது, "தட்பவெப்ப நிலை மாற்றம், குற்றம் மற்றும் வன்முறை, மாசுபடுதலின் அளவினால் இந்தக் கிரகமே ஒரு பெரிய நெருக்கடியில் சிக்கியுள்ளது." "இந்த உலகத்தினுள் ஒரு குழந்தையைக் கொண்டு வருவதன் மூலம் நான் பொறுப்பே இல்லாதவளாகி விடுகிறேன் என்று நினைக்கிறேன். அவர்களின் எதிர்கால வாழ்க்கை கேள்விக்குள்ளாகிவிடும் என்பது மட்டுமல்ல, மூச்சுத்திணறிக் கொண்டிருக்கும் இந்த பூமிக்கு அவர்கள் மேலும் ஒரு அழுத்தத்தை உண்டாக்குகிறார்கள்."

> **இந்தக் கருத்துகளோடு இருந்தும் பெற்றோர்களாக வேண்டும் என்று நினைப்பவர்கள் தத்தெடுப்பதைத்தான் முக்கியமான வழியாகக் கருதுகிறார்கள். "இங்கு ஏராளமான குழந்தைகளுக்கு இன்னும் அன்பு தேவைப்படுகிறபொழுது, நானே பெற்றெடுக்கும் குழந்தைதான் எனக்குத் தேவை என்ற எண்ணத்தை மாற்றிக் கொண்டால் என்ன?"**

**வரதன் கோந்விகார் Vardhan Kondvikar**

எழுத்தாளரும், ஒரு பருவஇதழின் ஆசிரியரும், சுற்றுலா ஒருங்கிணைப்பாளருமான கோந்விகரிடம், இதே உணர்வுகள் எதிரொலிப்பதைக் காணலாம். "இந்த உலகத்தில் இருந்ததற்காகக் கண்டிப்பாக வருத்தப்படப் போகும் யாரோ ஒருவரை நான் இங்கே அழைத்துவர விரும்பவில்லை. இந்தச் சமூகம் அதற்கு காரணமாக இருக்கலாம் அல்லது இங்கே நிலவும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளாக இருக்கலாம்" என்று கூறினார்.

"காற்றும் தண்ணீரும் விஷமாக்கப்பட்ட ஒரு உலகத்தினுள் உங்களுடைய குழந்தையைக் கொண்டு வருவதைப்பற்றி எண்ணிப்பாருங்கள். இப்போதைய நிலையில் இது ஏறத்தாழ அருவருக்கத்தக்க உலகம். இந்தப் பூமியிலிருக்கும் ஒரு மிகப்பெரிய பிரச்சினை மக்கள்தொகைப் பெருக்கமாகத்தானிருக்கும் என்று நான் நம்புகிறேன். மேலும் மற்ற அனைத்து வகைப் பிரச்சினைகளும் இதிலிருந்துதான் வளர்கிறது. மிகவும் குறைவாகயிருக்கும் வளங்களின் மீது அழுத்தம் கொடுக்காமல் உங்களால் இன்று உயிர்வாழ முடியாது. இதோடு சேர்த்து இரண்டாவது முக்கியத்துவமிக்க பிரச்சினை என்பது வாழ்க்கையில் தொடர்ந்து அதிகரித்து வரும் எதிர்பார்ப்புகளே."

**ஜோ ஜோஸ் Zoe Jose**

தகவல்தொடர்பு வளர்ச்சி வல்லுனரான இவர், குழந்தை வேண்டாம் என்று தேர்வு செய்ததற்கான முக்கியமான காரணமே இந்த பாதுகாப்பற்ற உலகம் தான். "ஒரு குழந்தையை இந்த உலகினுள்கொண்டு வரும்பொழுது அவர்களுக்கு எந்தவித வாய்ப்பும் அளிக்காமல், அவர்களை வலுக்கட்டாயப்படுத்தி இந்தச் சமூகத்தின் எதிர்பார்ப்புகளையும் சுமைகளையும் கொடுப்பதற்கு எனக்கு எந்தவித உரிமையும் இல்லை என்று நம்புகிறேன். நம் நாட்டைப் போன்ற மிகவும் மாசடைந்த மற்றும் ஏற்கனவே மக்கள் தொகை அதிகமுள்ள நாட்டினுள் அதிகமான குாந்தைகளைக் கொண்டு வருவதென்பது நிஜமாகவே தேவையற்றது என்று கருதுகிறேன். இந்த உலகத்திற்கு நான் சிறந்த முறையில் பங்காற்ற வேண்டுமென்றால், நான் இனியும் மக்களை இதனுள் கொண்டுவந்து இருக்கும் பிரச்சினைகளை மேலும் மோசமாக்க வேண்டாம் என்று நம்புகின்றேன்."

**தத்தெடுப்பதைப் பற்றி?**

இந்தக் கருத்துகளோடு இருந்தும் பெற்றோர்களாக வேண்டும் என்று நினைப்பவர்கள், தத்தெடுப்பதைத்தான் முக்கியமான வழியாக கருது கிறார்கள். "இங்கு ஏராளமான குழந்தைகளுக்கு இன்னும் அன்பு தேவைப்படுகிற பொழுது, நானே பெற்றெடுக்கும் குழந்தைதான் எனக்குத் தேவை என்ற எண்ணத்தை மாற்றிக் கொண்டால் என்ன?" என்கிறார் கோந்விகார்.

"எப்பொழுதாவது நான் குழந்தை வேண்டு மென்று முடிவெடுத்தால், உறுதியாக அது தத்தெடுப்பதன் மூலம்தான். ஏற்கனவே மக்கள் தொகை அதிகம் உள்ள நாட்டில் இன்னொரு குழந்தையைப் பெற்றெடுப்பதைவிட வீடில்லாமலும் ஆதரவில்லாமலும் இருக்கும் கோடிக்கணக்கான குழந்தைகள்தான் குடும்பமாக்கிக் கொள்வதற்குத் தகுதியானவர்கள்", என்று ஜோஸ் ஒப்புக் கொள்கிறார்.

*World Children Welfare Trust India*, என்ற பொதுத் தொண்டு நிறுவனத்தில் இருக்கும் சுலோச்சனா கல்ரோ (Sulochana Kalro),

"தங்களால் குழந்தை பெற்றுக்கொள்ள முடியாத தம்பதிகள்தான் அதிக அளவில் எங்கள் அமைப்பிலிருந்து குழந்தைகளைத் தத்தெடுத்துக் கொள்கிறார்கள்," "என்னுடைய அனுபவத்தில், இங்கே குழந்தைகளைத் தத்தெடுக்கும் பெற்றோர்களின் காரணங்களுள் இதுவரை சுற்றுச்சூழலைக் கருத்தில் கொண்டும் யாரும் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அதில் பலருக்கு, அவர்களின் உணர்வுகள்தான் முக்கிய பங்காற்றுகிறது," என்று கூறுகிறார்.

இந்திய மக்கள் "குழந்தை வேண்டும்" என்று எடுக்கும் முடிவில் உணர்வுகள்தான் மிக முக்கிய இடத்தில் உள்ளன. இன்னும் பலர் சமூக, பண்பாட்டு அழுத்தங்களுக்கு உள்ளாகித் திணருகின்றனர். அந்தப் பெரும்பான்மை இந்தியர்களுக்கு மாற்றாகச் சிலருக்கு இந்தச் சுற்றுச்சூழல் பற்றிய அக்கறையானது "தங்களுக்கு குழந்தை வேண்டாம்" என்று முடிவெடுக்கும் ஊக்கத்தை அளிக்கிறது.

*By Reem Khokhar, July 23. 2018 Scroll.in*


## மணமகள் தேவை

திருச்சியில் வசிக்கும் 30 வயது இளைஞருக்கு மணமகள் தேவை.
கல்வித்தகுதி: 10, ஐ.டி.ஐ
சொந்தமாக மொபைல் சர்வீஸ் கடை நடத்துகிறார்.
வசிப்பிடம்: திருச்சி
மாத வருமானம்: ரூ-20,000
சொந்தமாக வீடு, புஞ்சை இருக்கிறது.
**எதிர்பார்ப்பு**
*சாதிமறுப்பு, தாலிமறுப்பு.*
*வரதட்சணை, நகை வேண்டாம்.*
*எளிமையான திருமணம்*
தொடர்புக்கு: **98655 24094, 81109 69860**


# இறப்பிலும் திராவிடர் புரட்சி

கருந்திணைக் குடும்பங்களைச் சேர்ந்த உடுமலைப்பேட்டை தோழர் மலரினியனின் தாயார் கன்னீசுவரி அவர்கள் 03.12.18 அன்று இயற்கை எய்தினார். இந்து மதத்திலும், ஜாதி உணர்விலும் நம்பிக்கை கொண்டு வாழ்பவர்கள் தங்கள் குடும்பங்களில் நிகழும் இறப்புகளின் போது, மதம் வலியுறுத்தியபடி உடலை எரிக்கவோ, புதைக்கவோ செய்வர்.

பெரியாரின் திராவிடர் பண்பாட்டுப் புரட்சியில் ஈடுபாடு கொண்ட தோழர் மலரினியன், தனது தாயாரின் இறப்பு என்ற பெரும் இழப்பு நேரத்திலும், சமுதாயத்திற்குப் பயன்படும் செயல்களைத் திட்ட மிட்டுச் செய்தார்.

தனது தாயாரின் கண்களை அரவிந்த் கண் மருத்துவமனைக்குத் தானமாக வழங்கினார். உடலை மருத்துவக் கல்வி மாணவர்களின் ஆராய்ச்சிக்கு வழங்கினார்.

பெற்றோர் இறந்தபிறகு அவர்களுக்குக் கொள்ளி வைப்பது என்ற காரியத்திற்காகத்தான் இந்து மதத்தைப் பின்பற்றும் அனைவரும் ஆண் பிள்ளைகள் வேண்டும் என்று தவிக்கின்றனர். கொள்ளி வைக்க ஆண் பிள்ளை வேண்டும் என்பதற்காக, 5 அல்லது 6 பெண் குழந்தைகள்வரை கூடப் பெற்றுக்கொண்ட பெற்றோர்கள் நம்மிடையே வாழ்ந்து வருகிறார்கள்.

இந்தச் சமுதாயச்சூழலில், தனது தாயாருக்குக் கொள்ளி வைப்பதைத் தவிர்த்து, ஒரு மகனாக தாயாரின் உடலுக்குச் செய்ய வேண்டிய எந்தச் சடங்கையும் நடத்தாமல் இருந்தது மிகவும் பாராட்ட வேண்டிய செயல்.

உறவினர்களும், நண்பர்களும், ஜாதிச் சொந்தங்களும் சூழ்ந்துள்ள அந்த உணர்ச்சிகரமான சூழலில் கொள்கைக்காக அவர்கள் அனைவரையும் எதிர்த்து நிற்பது என்பது திராவிடர் இயக்கங்களின் தோழர்களிடம் மட்டுமே காணப்படும் சிறப்பியல்பு.

மிகப்பெரும் பொதுவுடைமைவாதிகள், ஆயுதம் தாங்கிய நக்சலைட்டுகள், தனித்தமிழ்நாட்டுப் போராளிகளின் மரணங்களில்கூட ஜாதிச் சடங்குகள் நடக்கின்றன. அவர்களின் உடலைக்கூட பயனற்ற வகையில் எரிப்பது, புதைப்பது போன்றவற்றைத் தடுக்க இயலாத நிலைதான் உள்ளது.

இந்த நிலையில், கண்தானம், உடல்தானம், உடலைப் பெண் தோழர்களே சுமந்து செல்வது எனப் பல அறிவுப்பூர்வப் பண்பாட்டுக்கூறுகளைச் செயல் படுத்திய தோழர் மலரினியன், அவரது இணையர் சுடரொளி மற்றும் குடும்பத்தினர் அனைவருக்கும் சமுதாய மாற்றத்தில் அக்கறை கொண்டோர் அனைவர் சார்பிலும் நன்றியையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

காட்டாறு

ம. கி. எட்வின் பிரபாகரன்

# வைணவத்தை வலுப்படுத்திய பிர்சா





"Jangal ke javedar" என்ற கற்பனை நாவலை அடிப்படையாக வைத்து "பிர்சா முண்டா" படத்தை ஹிந்தியில் எடுக்கவிருக்கிறார் இயக்குநர் பா. ரஞ்சித். நமஹ் நிறுவனம் இந்தத் திரைப்படத்தைத் தயாரிக்கவிருக்கிறது. இவர் விடுதலைப் போராட்ட வீரர் எனவும், பழங்குடியினருக்காகத் தன் வாழ்வையே அர்ப்பணித்தவர் என்றும் நம்பப் படுகிறது. இது உண்மைதானா? பா.ஜ.க.வினரும், 'தேசியவாதிகள்' என்போரும் சொல்வதைப்போல இவர் அவ்வளவு பெரிய போராளியா? என்பதை ஆய்வுக்கு உட்படுத்துவோம்.

மெய் வரலாற்றை அறிந்துகொள்ள நாவல் தேவையில்லை. வரலாற்று ஆய்வுநூல்களும் அறிக்கைகளுமே தேவை. அந்த வகையில் Hoffman பாதிரியாருக்கும் வெள்ளைக்கார அரசுக்கும் இடையே அனுப்பப்பட்ட கடிதங்களில் இருந்து பல தகவல்கள் கிடைத்தன. London School of Economics கல்லூரியில் துணைப் பேராசிரியராகப் பணியாற்றும் அல்பா ஷா, மாவோயிஸ்டுகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளில் தங்கி, பலஆய்வுகளை மேற்கொண்டவர். *"Religion and the Secular Left: Subaltern Studies, Birsa Munda and Maoists"* என்ற பெயரில் ஒரு ஆய்வறிக்கையை *"Anthropology of this Century Press"* என்ற ஆய்விதழின் 9 ஆவது வெளியீட்டில் ஜனவரி 2014-ஆம் ஆண்டு எழுதியுள்ளார். இந்த ஆய்வறிக்கை, பிர்சா முண்டாவின் மறுபக்கத்தைப் படம்பிடித்துக் காட்டுகிறது. அதிலிருந்து சில தகவல்களை இங்கே காண்போம்.

1966ஆம் ஆண்டு குமார் சுரேஷ் சிங் 'பிர்சாவை' பற்றி எழுதிய நூலில் மக்களின் போராட்டங்களை விளக்க பிர்சாவை ஒரு உருவகமாக மட்டுமே குறிப்பிட்டுள்ளார். இந்த உருவகத்தை உண்மையென்று நம்பி பிர்சாவை ஒரு போராளி நிலைக்கு உயர்த்தி பல பாடல்களும், இலக்கியங்களும், கவிதைகளும் புனையப்பட்டன. பழங்குடி மக்கள் பிர்சாவை கடவுளாகவே பார்த்தனர்; பார்க்கின்றனர்.

மக்களின் இத்தகைய மூடநம்பிக்கைக்குத் தன்னுடைய புத்தகமும் ஒரு காரணம் என்பதை உணர்ந்த குமார் சுரேஷ் சிங் தான் இறப்பதற்கு 4 ஆண்டுகளுக்கு முன் 2002-இல் மீண்டும் அதே புத்தகத்தை மாறுபட்ட முன்னுரையோடு வெளியிட்டார். அந்த முன்னுரையில், "பிர்சா ஆயுத போராட்டத்தில் பங்கெடுத்ததற்கான ஆதாரங்கள் உள்ளனவா?", "பிர்சா ஒருமுறையாவது அம்பை எய்தி இருக்கிறானா?" என்றெல்லாம் கேள்வி எழுப்பியுள்ளார். 1984-ஆம் ஆண்டிலிருந்து இந்தியாவின் மானுடவியல் ஆய்வுத்துறை இயக்குநராக இருந்தவர் இவர்.



முண்டா பழங்குடியினரின் பெரும்பாலான தாக்குதல்கள் நேரடியாக வெள்ளையர் அரசுக்கு எதிராக நடந்தவையல்ல. பெரும்பாலான தாக்குதல்கள் கிறிஸ்தவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களே ஆகும். 24 தாக்குதல்கள் கிறிஸ்துமஸ் நாளுக்கு முந்நாள் இரவு நடந்தவையே ஆகும். கிறிஸ்தவப் பாதிரியார்கள் பழங்குடியினருக்குக் கல்வியை வழங்கியவர்கள். மக்களின் நிலவுரிமைக்காக நீதிமன்றங்களில் வழிகாட்டியவர் கள். அதே வேளையில் வெள்ளையர்களின் அடக்கு முறைகளும் இருந்தன. இதை மக்கள் எதிர்க்க ஆரம்பித்தனர்.

### பிர்சா வின் சமஸ்கிருதமயமாக்கல்

சிறு வயதிலேயே கிறிஸ்தவ மதத்தைத் தழுவிய பிர்சா ஆனந்த் பானே என்ற வைஷ்ணவத் துறவியுடன் ஏற்பட்ட தொடர்பால் மனம் மாறியவன். துளசிச் செடியை வணங்கி, பூணூல் அணிந்து வைஷ்ணவ குருவின் சீடனாக மாறிய பிர்சா புலால் உணவையும் தவிர்த்தான். தன்னை "கடவுளின் அவதாரம்" என்று சொல்லி மக்களை மூடநம்பிக்கைகளில் வைத்திருந்தான். இராமாயண, மஹாபாரதக் குப்பைகளைப் பழங்குடியினரிடம் பரப்பினான். கிறிஸ்தவ ஆதிவாசிகளைத் தாய் மதத்துக்கு திரும்பச் செய்தான்.

ஆக, பிர்சா முண்டாவின் இலக்கு மதமாற்றத்தைத் தடுப்பதே! இதில் நிலவுரிமைக்கான நோக்கமும் இருக்க வாய்ப்புண்டு. மக்களும் பிர்சாவைத் தங்களுக்கு மோட்சம் அளிக்க வந்த கடவுளாகவே பார்த்தனர். வைஷ்ணவ சாமியார் சொல்படி அசைவம் சாப்பிடக்கூடாது என்று போதித்த பிர்சா வியாதிகளைக் குணப்படுத்துவது மாயாஜாலம் என்ற பெயரில் மக்களை ஏமாற்றுவதில் வல்லவனாகத் திகழ்ந்தான். அசைவ உணவுகளை மக்கள் தவிர்த்ததோடல்லாமல், வெள்ளைப் பன்றிகளையும், வெள்ளைக் கோழிகளையும் அழித்தனர். ஆடு, கோழிகள் பலியிடுவது தடுக்கப்பட்டது.

பிர்சாமுண்டா செய்த இந்தச் செயல்களுக்குச் சரியான பெயர் 'சமஸ்கிருதமயமாக்கல்' (sanskritisation). ஜாதி அடுக்கில் தன்னை விட மேலே இருப்பவனின் பழக்கவழக்கங்களையும் ஆச்சார அனுஷ்டானங்களையும் பின்பற்றுவதே சமஸ்கிருதமயமாக்கல். இதற்கு இரையான ஒடுக்கப்பட்டவர்கள் பிற்காலத்தில் 'பஜ்ரங் தள்', 'அனுமன் சேனா' போன்ற வன்முறையில் இறங்கும் R.S.S. அடியாட்களாகத்தான் மாறுவார்கள். பிர்சா முண்டாவும் அத்தகையவனே.

1895-ஆம் ஆண்டில் ஒருநாள், 'உலகம் அந்த நாளில் முடிவுக்கு வந்துவிடும்' என்று கூறிய பிர்சா மலைப்பகுதி மட்டுமே உயிர்பிழைக்கும் என்று நம்பவைத்து 6,000 மக்களை சால்காடு குன்றில் கூட வைத்தான். பிர்சா முதல்முறை கைது செய்யப்பட்டதும் அப்போதுதான். வெள்ளைக்காரர்களிடம் தன்னிலை விளக்கமாக, "இது மத ஒன்றுகூடுகையே தவிர, அரசுக்கு எதிரான செயல் அல்ல" என்றான் பிர்சா. பின்பு விடுவிக்கப்பட்டான்.

பிர்சாவின் இந்த மதமாற்ற எதிர்ப்பு நடவடிக்கைகளாலும், பிர்சாவாதிகளின் தாக்குதல்களாலும் அச்சம் அடைந்த பாதிரியார் ஹாஃப்மேன், ஆங்கிலேய அரசுக்கு எழுதிய கடிதத்தில் கிறிஸ்தவ மதத்துக்கு ஆபத்தான பிர்சாவை நாட்டுக்கு ஆபத்தானவராகச் சித்தரிக்கிறார். "பிர்சாவுக்குத் தக்க பாடம் கற்பிக்குமாறும், பிர்சா என்ற நபரே இல்லாமல் ஆக்குமாறும்" வேண்டுகோள் விடுக்கிறார். அதன்படியே பிர்சா கைது செய்யப்படுகிறான்.

கமிஷனர் ஃபொர்ப்ஸ் பிர்சாவைப்பற்றிச் சொல்லும்போது, "காலனிய நாட்டின் ஆயுதப் படைகள் பிர்சாவையும், அவரைப் பின்பற்றுபவர்களையும் நசுக்கியதற்குப் பிர்சாவின் மதம் காரணமில்லை. சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டுவரவே தாக்குதல் நடத்தப்பட்டது" என்றார். கைது செய்யப்பட்ட பிர்சா இரண்டு மாதங்களில் கொல்லப்படுகிறான்.

### கிறிஸ்தவ எதிர்ப்பாளர் பிர்சா

இதிலிருந்து நமக்குத் தெரியவருவது என்னவென்றால், பிர்சாவின் போராட்டத்தை விடுதலைப் போராட்டமாக எடுத்துக்கொள்ளாமல், அதை முதலில் ஒரு மதச்சண்டையாகப் பார்க்க வேண்டி உள்ளது. "வெளியில் இருந்து வந்த தேவாலய அழிவுச் சக்திகள், பழங்குடியினர் மத்தியில் உருவாக்கிய கோளாறுகளைச் சரிசெய்யும் நோக்கோடு, ஒரு வைஷ்ணவ இந்துத்துவவாதியால் மனம் மாற்றப்பட்ட பிர்சா என்ற இளைஞன், ஒரு புது மதத்தை உருவாக்கி கிறிஸ்துவ மிஷினரிகளை எதிர்த்துச் சண்டையிட்டதே பிர்சாவின் வரலாறு" என்கிறார் ஆய்வாளர் அல்பா ஷா.

கிறிஸ்தவ எதிர்ப்பே பிர்சாவின் முதன்மை எதிர்ப்பாக இருந்திருக்கிறது. நிலவுரிமைக்காக வெள்ளைக்காரர்களை எதிர்த்ததைவிட, கிறிஸ்தவ மிஷனரிகளைப் பிர்சாவின் ஆட்கள் தாக்கியதே மிக அதிகம். தன்னைக் கடவுள் என்று சொல்லிப்பல ஆண்டுகள் மக்களை ஏமாற்றி வந்த பிர்சா முண்டா என்ற இளைஞன் இறக்கும் போது வயது 25.

படேலுக்கு 182 அடி சிலை வைத்த பாஜக, பிர்சா முண்டாவுக்கு ஜார்க்கண்ட் மாநிலத்தில், 100 அடி சிலை வைத்து விசுவாசத்தை காட்டவிருக்கிறது. காரணமில்லாமல் யாருக்கும் 100 அடியில் பா.ஜ.க. சிலை வைக்காது. பிர்சாவின் கடவுள்தன்மையை மடத்தனமாக நம்பும் பழங்குடியினர் மனதில் இன்னும் அதிகமாக மூடநம்பிக்கைகளை ஊறச் செய்து, அதைத் தேர்தலில் ஓட்டாக்குவதே பா.ஜ.க. வின் திட்டம்.

இரண்டு ஆண்டுகளாகப் பிர்சா முண்டாவைப்பற்றிய தரவுகளைச் சேகரித்து வருவதாகக் கூறும் இயக்குநர் கோபி நயினாருக்குப் பிர்சா ஒரு இந்துத்துவ சக்தி என்பது தெரியாமல் போனது ஆச்சரியத்தை அளிக்கிறது! நாவலை மட்டும் நம்பி ஹிந்தியில் பிர்சா முண்டாவைப்பற்றி படமெடுக்கப் போகும் இயக்குநர் இரஞ்சித்தாவது இதை ஆய்வு செய்திருக்க வேண்டாமா?




**பழமைவாதக் குப்பைகள் பார்ப்பனியம் வலுப்பெறவே பயன்படும்.**



# யாகப் புதைகுழிகளில் மீண்டும் தமிழர்கள்

அதி அசுரன்

திருப்பூர் மாவட்டம் பொங்கலூரில் வரும் டிசம்பர் 23, 24, 25 ஆகிய தேதிகளில் இந்து முன்னணி சார்பில் யானை பூஜை, 108 குதிரை பூஜை, 1008 நாட்டுப் பசுமாட்டு பூஜை, 16 மகாயாகம் ஆகியவைகள் நடைபெற உள்ளன. இராஜராஜ சோழன் காலத்தில் நடந்ததைப் போன்று 300 மீட்டர் நீளம், 20 மீட்டர் அகலம் கொண்ட யாகபீடம் அமைக்கப்படுகிறது. சோழர்கள் காலத்திற்குப் பிறகு நடக்கும் மிகப்பெரிய யாகம் இது. இவைபற்றி இந்துமுன்னணியின் மாநிலப்பொறுப்பாளர் காடேஸ்வரா சுப்ரமணியம் செய்தியாளர்களிடம் கூறியவை,

"உலக நன்மை வேண்டியும், விவசாயம் செழிக்கவும், வியாபாரம் வளம் பெற வேண்டியும் இந்த யாகம் நடக்க உள்ளது. வரும் டிசம்பர் மாதம் 23-ம் தேதி கஜ பூஜை, அஸ்வ பூஜை, மீனாட்சி திருக்கல்யாணம் ஆகியன நடக்க உள்ளது. தொடர்ந்து, 24-ம் தேதி 1008 நாட்டு பசுக்களை வைத்து கோ பூஜை நடக்கும். அன்று மாலை ஆண்டாள் திருக்கல்யாணம் நடைபெற உள்ளது. மூன்றாவது நாள் நிகழ்ச்சியில் ஒரு லட்சம் குடும்பத்தை சேர்ந்த 10 லட்சம் பேர் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கிறோம்.

மேலும், இதனை மக்களிடையே கொண்டு செல்ல இந்த நான்கு ரதங்களும் கோவை மாநகர், திருப்பூர், ஈரோடு ஆகிய இடங்களுக்குச் செல்லும். ஒவ்வொரு குடும்பத்தில் இருந்து ஒரு செங்கல் மற்றும் பசு மாட்டின் நெய் கொடுக்கக் கேட்டுக் கொள்ளப்பட்டு உள்ளது. இதனை யாகத்தில் பயன்படுத்துவோம்."

இந்த யாகத்தை மக்களிடம் பரப்பவும், நிதி திரட்டவும் கடந்த 13.11.18 அன்று, கோவையிலிருந்து நான்கு மாவட்டங்களை நோக்கி ரதயாத்திரை தொடங்கப்பட்டது. இராம.கோபாலன் இந்த பிரச்சாரப் பயணங்களைத் தொடக்கி வைத்துள்ளார். மகாலட்சமி ரதம், வீரலட்சுமி ரதம், சிவ பார்வதி ரதம், கோமாதா ரதம் என்ற இந்த ரதங்கள் ஈரோடு, திருப்பூர், கோவை, நீலகிரி ஆகிய நான்கு மாவட்டங்களிலும் யாகப் பிரச்சாரத்தைத் தொடங்கி விட்டன. வீடு வீடாகச் செங்கல் சேகரிப்பும், நெய் சேகரிப்பும், யாகத்தில் அழிப்பதற்காக நன்கொடைகளும் திரட்டப்பட்டு வருகின்றன.

பெரியாரின் புரட்சியால் 80 ஆண்டுகாலம் அடங்கிக்கிடந்த யாகப் பண்பாடு கடந்த 2017 ஆம் ஆண்டில் தலைதூக்கத் தொடங்கின. 2017 செப்டம்பர் 12 அன்று மயிலாடுதுறையில் காவிரி ஆற்றில் புஷ்கர யாகங்கள் நடந்தன. உடனடியாக தி.க.வும், தி.வி.க.வும் அதை எதிர்த்துப் போராடின. தொடர்ந்து, திருச்சி ஸ்ரீரங்கம், நெல்லை, சிவசைலம் எனப் பலஇடங்களில் புஷ்கரயாகங்கள் தொடங்கப் பட்டு பெரும் விழாக்களாக மாற்றப்பட்டு வருகின்றன.

2017 இல் மயிலாடுதுறையில் நடந்த புஷ்கர விழாவில் முதமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி கலந்துகொண்டார். எதிர்க்கட்சித் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் துணைவியார் துர்கா அவர்களும் பங்கேற்றார். 2018 இல் தாமிர பரணியில் நடந்த புஷ்கர விழாவில் தினகரன் அணியின் தகுதிநீக்கம் செய்யப்பட்ட எம்.எல்.ஏக்கள் கலந்து

கொண்டனர். (அவர்கள் பங்கேற்ற அடுத்த நாளே அவர்களது எம்.எல்.ஏ.பதவி பறிபோனது ) பார்ப்பன - பார்ப்பன அடிமை ஊடகங்கள் இந்த விழாக் களையும், யாகங்களையும் பெரிதுபடுத்தி வருகின்றன.

கடந்த 80 வருடங்களில் இவைபோன்ற பெரும் யாகங்கள் ஆங்காங்கே திருட்டுத்தனமாக நடந்து வந்தன. ஆனால் இப்போது வெளிப்படையாக - ஏராளமாக நடக்கத் தொடங்கியுள்ளன. திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை அரசு மருத்துவ மனையில் கடந்த 21.11.18 அன்று யாகம் நடத்தப் பட்டுள்ளது.

தமிழ்நாட்டில், திராவிடர் சமுதாயத்தில் இப்படித்தான் பண்டிகைகளும், யாகங்களும், விழாக்களும் மெல்ல மெல்ல நுழைக்கப்பட்டு, நமது அடையாளங்களையும், அடிப்படைகளையும் தகர்த்துள்ளன. நம் கண்ணெதிரே புஷ்கர யாகம் பெரும் விழாவாகி வருகிறது. இந்தச்சூழலை இந்துமுன்னணி அடுத்த கட்டத்திற்கு நகர்த்துகிறது. யாகங்களை மக்கள் பங்கேற்புடன் நடக்கும் ஒரு மாபெரும் பண்டிகையாக மாற்றும் முயற்சியைத் தொடங்கியுள்ளது.

பார்ப்பனர்கள் யாகங்களை எதற்காக முன்னெடுக்கிறார்கள்? மத விழாக்களை எதற்காக புதிது புதிதாக அறிமுகப்படுத்தி அவற்றை நமது பண்பாடாகவே மாற்றுகிறார்கள் என்பவை பற்றி அறிந்து கொள்ள வேண்டுமானால், இந்தச் சமுதாயத்தின் உற்பத்தி முறையை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும்.

**பார்ப்பனிய உற்பத்தி முறை**

இந்தியாவைத் தவிர உலகிலுள்ள மற்ற நாடுகளின் மனித சமுதாயம் அவ்வப்போது உரிய மாற்றங்களையும், வளர்ச்சிகளையும் அடைந் துள்ளது. ஆதிப்பொதுவுடைமைமுறை, பண்ணை அடிமைமுறை, நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம் என வளர்ந்து கொண்டே வந்துள்ளது. சில நாடுகளில் முதலாளித்துவத்துக்கு அடுத்து சோசலிசம் சமுதாயம் உருவானது. அதை அடுத்து கம்யூனிச சமுதாயம் என்ற நிலை நோக்கிய பயணமும் தொடங்கியது.

ஆனால் இந்தியாவில் மட்டும் ஆரியப் பார்ப்பனர்களின் படையெடுப்புக்குப் பிறகு, ஆரியப் பார்ப்பனர்கள் இந்தியப் பகுதியைக் கைப்பற்றிய பிறகு இங்கு சமுதாயத்தில் எந்தவிதமான மாற்றமோ, வளர்ச்சியோ உருவாகவே இல்லை. வேறு எந்த நாடுகளிலும் இல்லாத ‘பார்ப்பனிய உற்பத்தி முறை’ இந்தியாவை முடக்கிப் போட்டது. சமுதாயத்தின் இந்தத் தேக்கத்தை, முடக்கத்தை அறிஞர் கார்ல் மார்க்ஸ் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

> “இந்தியாவின் கடந்தகாலத்தில் அரசியல் அம்சத்தில் எவ்வளவு மாற்றங்கள் நிகழ்ந்திருந்தாலும், மிகத் தொல் பழங்காலம் முதல் 19-ம் நூற்றாண்டின் துவக்க காலம் வரை அதன் சமுதாய நிலை மாற்றமின்றி இருந்து வந்துள்ளது” - The British Rule in India – Karal Marx

இந்தியச் சமுதாயமானது உலகின் மற்ற நாடுகளைப்போல வளராமல் தேங்கிக்கிடந்தது என்பதை மார்க்சிய வரலாற்று அறிஞர் டி.டி.கோசாம்பியும் பதிவு செய்துள்ளார்.

> “இப்படிப்பட்ட படிநிலைகளைக் கடந்து வந்துள்ள தென்பதை வரலாற்றுச் சான்றுகள் அடிப்படையில் நிர்ணயிக்க இயலாது”

என்று அவர் தனது *The Culture and civilization of Ancient India in Historical Outline* எனும் நூலில் குறிப்பிடுகிறார். இந்தத் தேக்கத்திற்குக் காரணம் இங்குள்ள பார்ப்பன உற்பத்தி முறையே ஆகும். இந்த உற்பத்தி முறை பற்றிச் சுருக்கமாகப் பார்ப்போம்.

**உபரி உற்பத்தி**

ஈடு செய்யாத உழைப்பின் காரணமான பொருள் அபகரிப்பு அல்லது ஈடு செய்யாத உழைப்பின் பயன். உதாரணமாக ஒருவருடைய உழைப்பிற்கு அளிக்க வேண்டிய மதிப்பு 100 ருபாய் என்ற நிலையில், அவருக்கு வெறும் 10 ரூபாயைக் கொடுத்தோம் என்றால், மீதமுள்ள அந்தச் சுரண்டப்பட்ட 90 ருபாய் தான் உபரி உற்பத்தி ஆகும். அதை அபகரிப்பதற்கான வழிகளை அதாவது சுரண்டல் முறைகளை ஏற்படுத்திச் சுரண்டுவது தான் உபரி உற்பத்தி அபகரிப்பு.

**உபரி உற்பத்தி அபகரிப்பு - நாசம் - முடக்கம்**

ஒரு கிராமத்தில் ஒரு விவசாயி ஒரு ஆண்டுக்கு செலவுகள் எல்லாம் போக, சுமார் 25 ஆயிரம் ரூபாய் மிச்சப்படுத்துகிறார் என்று வைத்துக்கொள்வோம். சரியாக அறுவடைக்காலத்தில் ஊர்த் திருவிழாக்கள், கும்பாபிசேகங்கள், யாகங்கள், சிறுதெய்வங்களில் வழிபாடுகள், குலசாமி கும்பிடுகள் என வரிசைகட்டி வருகின்றன. அதுமட்டுமல்ல, அந்த வருமானத்தைக் கொண்டுதான் காதுகுத்து, பூப்புனிதநீராட்டு, கல்யாணம், வளைகாப்பு ஆகிய வீட்டுச் சடங்கு களையும் நடத்துகிறார்கள். இந்த விழாக்கள் எல்லா வற்றையும் மிக மிக அதிகமான பணச் செலவில் நடத்தினால்தான் சமுதாயத்தில் மரியாதை கிடைக்கும் என்ற மதஅடிமைச் சிந்தனையை இந்து மதப் பார்ப்பனர்கள் உருவாக்கினார்கள். இந்து மதத்தை ஏற்றுக் கொண்ட அனைவரும் அதையே தங்களது பண்பாடாகப் பின்பற்றி வருகிறார்கள்.

இவைபோன்ற மத விழாக்கள், வீட்டு விழாக்களால் எந்த விவசாயியும், எந்த விவசாயத் தொழிலாளரும் அதுவரை சேர்த்து வைத்திருந்த பணத்தை மொத்தமாக அழித்து விடுகிறார்கள். அடுத்த விதைப்புக்கு கமிசன் கடைகளிலும், உரம், பூச்சிமருந்துக் கடைகளிலும் கையேந்துகின்றனர். இயற்கை விவசாயி என்றால் கமிசன் கடை மட்டும் மாறும். அவ்வளவுதான் வேறுபாடு.

இந்த நிலை பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து வருகின்றது. இந்த நிலையை மார்க்சிய பாணியில் சொல்ல வேண்டுமானால் இதுதான், ‘உபரி உற்பத்தி அபகரிப்பு, நாசம்’, முடக்கம்’. இதைத்தான் அறிஞர் மார்க்சும், டி.டி.கோசாம்பியும்

குறிப்பிடுகிறார்கள். சமுதாய அறிஞர் தோழர் பெரியார் அவருக்கே உரிய எளிய நடையில் இதை விளக்குகிறார்.

> "நாட்டின் பொருளாதார நிலையை விருத்தி செய்ய அவசியமான பொதுத் தொழிற்சாலைகள், இயந்திர சாலைகள் முதலியவைகள் ஏற்பாடு செய்வதற்கும் மார்க்கமில்லாமல் பொருட்களை எல்லாம் - சடங்குகளும் வாழ்க்கை முறைகளும் கவர்ந்து கொள்வதோடு, கோவில் கட்டுதல், சாமிக்கு நகை, வாகனம் முதலியவைகள் செய்து வைத்தல், மற்றும் உற்சவம், பூசை ஆகியவைகளுக்கு 'பண்டு' பூமிகள் முதலிய சொத்துக்கள் ஒதுக்கி வைத்தல் ஆகிய காரியங்கள் பெரும் பெரும் தொகைகளைக் கவர்ந்து கொள்கின்றன. ஆகவே, இந்த மாதிரியாக வெல்லாம் எல்லாப் பொருள்களும் வீணாகிக் கொண்டிருக்கையில் இந்த நாடு எந்தக் காலத்தில் தான் - எந்த வகையில்தான் பொருளாதாரத்தில் சீர் அடைய முடியும்?"
>
> -தோழர் பெரியார் - குடிஅரசு -18.01.1931

இந்த அறிஞர்கள் கூறுவது ஒன்றுதான். மற்றநாடுகளில், பொருளாதார உற்பத்தி முறையை அடிப்படையாகக் கொண்டுதான் கலை, இலக்கியம், மதம், பண்பாடு, பழக்கவழக்கங்கள் உருவாகும். இந்தியாவிலோ, பொருளாதார உற்பத்தி முறையை நிர்ணயிக்கும் இடத்திலேயே ஜாதியும், மதமும் முக்கிய இடம் பிடித்துள்ளது. இந்த வகைப் பொருளாதார உற்பத்தி முறைதான் 'பார்ப்பன உற்பத்தி முறை' எனப்படுகிறது. இந்தப் பார்ப்பன உற்பத்தி முறையின் வெளிப்பாடுதான் இன்றும் இந்து முன்னணிகளும் பார்ப்பன ஊடகங்களும் புதிது புதிதாக உண்டாக்கி, ஊதிப்பெருக்கும் பண்டிகைகள் ஆகும். இந்தப் பார்ப்பன உற்பத்தி முறையைத் தகர்க்காமல் சமுதாய வளர்ச்சி சாத்தியமே இல்லை.

### பார்ப்பன உற்பத்தி முறை எதிர்ப்பு - யாக எதிர்ப்பு

இந்திய வரலாற்றில் அனைத்து தேசிய இன மக்களின் முன்னேற்றத்தையும் சமுதாய வளர்ச்சியையும் முடக்கிப் போட்ட பார்ப்பன உற்பத்தி முறையில், மிக முக்கிய இடம் வகிப்பது இந்த 'யாகங்கள்'. கபிலர், சார்வாகர், பரிவிராஜகர்கள் தொடங்கி, புத்தர் வரை ஏராளமான தலைவர்கள் இந்த யாகங்களை எதிர்த்துக் கடும் போர் புரிந்துள்ளனர்.

இந்து மதப்புராணங்களும், இதிகாசங்களும் இந்த நாட்டின் மண்ணின் மைந்தர்களான பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவர்கள் அனைவரையும், அசுரன், அரக்கன், அரக்கி, ராட்சசி என்றெல்லாம் இழிவு படுத்தியதற்கு முக்கியக் காரணம் என்னவென்றால், நம்மவர்கள் எல்லாம், பார்ப்பனர்களின் யாகங்களை எதிர்த்துள்ளனர். யாகங்களை எதிர்ப்பவர்கள் எல்லாம் அசுரர்களாக, அரக்கர்களாகக் காட்டப் பட்டார்கள்.

### திருக்குறளில் யாக எதிர்ப்பு

அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று

என்று திருக்குறள் அறிவுறுத்துகிறது.. ஆயிரம் யாகங்களை நடத்துவதைவிட, ஒரு உயிரை வதைக்காமல், கொன்று உண்ணாமல் இருப்பது சிறந்தது என்கிறார் வள்ளுவர். ஆனாலும் சங்க இலக்கியக் காலத்திலிருந்து பெரியாரின் திராவிடர் பண்பாட்டுப் புரட்சி தோன்றும் வரை தமிழ்நாட்டின் அனைத்து மன்னர்களும் பார்ப்பன அடிமைகளாகி, யாகப்புகைகளில் சிக்கி தமிழ்நாட்டைச் சீரழித்தனர். தமிழர்களின் வளர்ச்சியை முடக்கினர்.

### பார்ப்பன அடிமைகளான மன்னர்கள்

தமிழ்நாட்டு மன்னர்களில் பிற்காலச் சோழர் வரலாற்றில் முக்கிய இடம் பிடித்துள்ளவர் இராஜராஜசோழன். அவரது காலம் பார்ப்பனர்களுக்குப் பொற்காலம். அவருக்கு முன்பு சங்க காலத்திலேயே முற்காலச் சோழர் வரலாற்றில் மிக முக்கிய மன்னராகத் திகழ்ந்தவர் கரிகாலன். அந்தக் கரிகாலன் காலத்திலேயே தமிழ்நாட்டில் யாகங்கள் தொடங்கி விட்டன. கரிகாலனே முன்னின்று பார்ப்பனர்களுக்கு அள்ளி அள்ளிக் கொடுத்துள்ளான். யாகங்கள் என்ற பெயரால் பார்ப்பனரல்லாத தமிழர்களின் பொருளாதாரத்தை நெருப்பில் போட்டு அழித்திருக்கிறார். கல்லணை கட்டி, அதன் மூலமாக, விவசாயத்தைப் பெருக்கி, விவசாயத்தால் வந்த செல்வத்தை யாகத்தில் அழித்துள்ளார்.

புறநானூற்றில் கருங்குளவாதனார் எனும் புலவர் பாடிய 224-வது புறநானூற்றுப் பாடல் கரிகாலனின் யாகச் செயல்பாடுகளைத் தெளிவாக விளக்கியுள்ளது. கரிகாலன் மட்டுமல்ல, முற்காலச் சோழர்களிலேயே மற்றொரு முக்கிய அரசரான 'பெருநற்கிள்ளி' என்பவருக்குப் பார்ப்பனர்கள் 'ராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளி' என்று பட்டமே வழங்கியுள்ளனர். அந்த அளவுக்கு அவரும் பார்ப்பன அடிமையாக இருந்து தமிழர்களின் சமுதாய வளர்ச்சியை முடக்கியுள்ளார். பெருநற்கிள்ளியின் யாகச் செயல்பாடுகளை புறநானூற்றின் 367 வது பாடல் விளக்குகிறது.

சங்ககாலப் பாண்டிய மன்னன் 'பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி' நடத்திய யாகங்களைப் பற்றி புறநானூற்றில் 15 வது பாடலாக வந்துள்ள புலவர் நெட்டிமையாரின் பாடல் விளக்கியுள்ளது. சங்க காலச் சேர மன்னர்களின் யாகச் செயல்பாடுகள் பற்றி 'பதிற்றுப்பத்து' எனும் சங்க இலக்கியம் விரிவாகப் பேசியுள்ளது.

### பார்ப்பனப் பொருளாதாரமுறையை எதிர்த்த பெரியார்

சங்க காலத்தில் தொடங்கி, பெரியாரின் திராவிடர் புரட்சி தோன்றும் வரை தமிழர்கள், யாக - வேள்வி - ஓமகுண்டங்களால் தங்களது பொருளாதாரத்தையும், அறிவையும், மானத்தையும் இழந்து - அந்த இழப்புகளையே தங்களது பெருமை

வாய்ந்த பண்பாடாகவும் பின்பற்றி வந்தனர். இந்த இந்துமதச் சீரழிப்புப் பண்பாட்டுக்கு எதிராகப் பெரியார் தொடர்ச்சியாக எழுதியும், பேசியும் வந்தார்.

**“இந்த யாகங்கள் புண்ணிய காரியங்களாம். சுவர்க்கத்திற்குக் காரணமானவைகளாம். சொர்க்கம் நரகம் என்பவைகள் சோம்பேறிகளின் வயிற்றுப் பிழைப்பு சாதனங்கள் என்று பல தடவை நான் சொல்லி வந்திருக்கிறேன். பாடுபட்டு உழைத் தவன் பொருளைக் கையைத் திருகிப் பிடுங்கிக் கொள்வதற்குப் பதிலாக சொர்க்க நரகங்கள் என்னும் பூச்சாண்டிகளைக் காட்டி பயப்படுத்திப் பிடுங்கிக் கொள்ளப்படுகின்றன.**

**யாகத்துக்கு ஏதோ சக்தி இருப்பதாகவோ அது நம்மை ஏதாவது செய்து விடுமென்றோ யாரும் பயப்பட்டு விடாதீர்கள். இந்த தந்திரம் எல்லாம் உழைப்பாளிகளின் உழைப்பை சோம்பேறிகள் சாப்பிடுவதற்காகவே ஒழிய வேறில்லை.**

**...உழைத்தவன் உழைப்பின் பயனை அடைய வேண்டுமானால் இப்படி யாகம், சாஸ்திரம், வேதம், மோக்ஷம், கர்மம், முன் ஜன்மம், கடவுள் செயல் என்கின்ற பித்தலாட்டங்களுக்கு அடிமைப் படக்கூடாது.**

**எத்தனையோ வருஷ காலமாய் யாகம் செய்யப்பட்டு வருவதாய் அறிகிறோம். உலகத்தில் என்ன அக்கிரமம் மாறி இருக்கிறது? என்ன கொடுமை நீங்கியிருக்கின்றது? யாகம் எக்கியம் கிரமமாய் செய்யப்பட்டு வந்த தெய்வீக அரசர்களான ராமன், அரிச்சந்திரன் ஆகியவர்கள் காலத்தில் உள்ள அக்கிரமம், அயோக்கியத்தனம், கொலை பாதகம் எல்லாம் இன்னும் இருந்துதான் வருகின்றன. எவ்வித மாறுதலும் ஏற்பட்டு விடவில்லை. ஆகையால் நீங்கள் இப்படிப்பட்ட மிரட்டுதல்களைக் கண்டு பயந்துவிடாதீர்கள்! ஏமாந்து விடாதீர்கள்!!**

**...இவைகளெல்லாம் பாமர மக்களை ஏமாற்று வதற்காகச் செய்யப்படும் சூழ்ச்சிப் பிரசாரமே யொழிய வேறில்லை. இப்படிப்பட்ட யாகங்களுக்கு சங்கராச்சாரி சுவாமியார் என்பவரும் அனுமதியளிக் கிறாராம்; பணம் கொடுக்கிறாராம். இதிலிருந்து சங்கராச்சாரிகள் என்பவர்கள் யோக்கியதை களையும் உணர்ந்து கொள்ளுங்கள்.**

– தோழர் பெரியார், புரட்சி – சொற்பொழிவு 10.06.1934

பெரியாரின் உழைப்பினால், தமிழ்நாட்டில் பெரும் பெரும் யாகங்கள் என்பவை, ஒழிந்தன என்றே கூறலாம். திருமணங்கள், கிரகப்பிர வேசங்களில் மட்டும் இன்னும் ஓமகுண்டப் புகைகள் வந்து கொண்டிருக்கின்றன. இந்தச் சமுதாயச் சூழலை மீண்டும் பொருளாதார - அறிவு - மான இழப்புக்கு பின்னோக்கி இழுத்துச் செல்லும் முயற்சியைத்தான் இந்து முன்னணியும், பார்ப்பனர் களும் தொடங்கியுள்ளனர்.

## அழிந்துகொண்டிருக்கும் திருப்பூர் மாவட்டம்

கடந்த 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் பா.ஜ.க வின் மோடி அரசு அறிவித்த பண மதிப்பிழப்பு நடவடிக்கையாலும், ஜி.எஸ்.டி வரிவிதிப்பினாலும், திருப்பூர் மாவட்டம் மிகப் பெரும் பொருளாதாரச் சீரழிவைச் சந்தித்துள்ளது. தமிழ்நாடு ஜவுளி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் ஓ.எஸ்.மணியன் 08.07.2018 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்திலேயே இதை ஆதாரத்துடன் பதிவு செய்துள்ளார். மத்திய பா.ஜ.க அரசின் ஜி.எஸ்.டி, பணமதிப்பிழப்பு போன்ற நடவடிக்கைகளால் திருப்பூர் பனியன் தொழில் 16,000 கோடி ரூபாய் நட்டத்தைச் சந்தித்துள்ளது என்று அறிவித்துள்ளார்.

ஆண்டுக்கு 50,000 கோடி ரூபாய் மதிப்புள்ள திருப்பூர் பனியன் தொழிலில் பா.ஜ.க. வினர் ஏற்படுத்திய இழப்பு ஏறத்தாழ 34 விழுக்காடு ஆகும். 2004 ஆம் ஆண்டு உலக அளவில் பனியன் உற்பத்தியில் 2 இடத்தில் இந்தியாவை ஏற்றி வைத்தது திருப்பூர். இன்று பங்களாதேஷ், வியட்நாம், கம்போடியா, மியான்மர், எத்தியோப்பியா போன்ற நாடுகளின் கடும் போட்டியில் சிக்கியுள்ள நிலையில் மத்திய அரசின் மோசமான பொருளாதார நடவடிக்கைகளால் மேலும் சீரழிந்து குற்றுயிரும் குலை உயிருமாகத் தவிக்கிறது.

இந்தச் சூழலில் அதே திருப்பூர் மாவட்டத்தில் மிச்சமுள்ள பொருளாதாரத்தையும் மதம், கடவுள், பக்தி, பண்பாடு, யாகம், பண்டிகைகளின் பெயரால், மொத்தமாக வாரிச் சுருட்டி அழிக்கும் வகையில் இந்தப் பெரும் யாகம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது திருப்பூர் மாவட்டத்திற்கு மட்டும் வரும் அழிவு அல்ல. தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களிலும், தஞ்சை டெல்டா பகுதிகளிலும் விவசாயம் இன்றி, வாழ வழியின்றி இலட்சக்கணக்கான மக்கள் திருப்பூர், கோவை, ஈரோடு ஆகிய மாவட்டங்களில் வாழ்வாதாரங்களைத் தேடிவந்து வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் அனைவரது வாழ்க்கை யையும் இந்த யாகங்கள் அழிக்கும் என்பது உறுதி.

## கோவையில் 1000 கழுதைகள் ஊர்வலம்

நம் கண்முன்னேயே நடைபெறப் போகும் பொருளாதார - பண்பாட்டுச் சீரழிவை நாம் எப்படி எதிர்கொள்ளப் போகிறோம்? 1987 ஆம் ஆண்டில் இதே போல கோவை சரவணம்பட்டியில், 108 யானைகளை வைத்துக் ‘கஜ பூஜை’ நடத்தப் போவதாக அறிவிப்பு வந்தது. அப்போது திராவிடர் கழகத்தின் மாநிலப்பொறுப்பாளராக இருந்த தோழர் கோவை கு.இராமக்கிருட்டிணன் அவர்கள் கஜபூஜை நடக்கும் அதேநாளில் ‘1000 கழுதைகளின் ஊர்வலம்’ நடக்கும் எனஅறிவித்தார். தமிழ்நாடே அலறியது.

30 ஆண்டுகள் கழித்து இப்போது அறிவிக்கப் பட்டுள்ள கஜ பூஜை, 108 குதிரை பூஜை, 1008 நாட்டு மாட்டு பூஜை இவை ஏதோ ஒருநாள் நிகழ்வாக மட்டும் நடக்க இருப்பவை அல்ல. கடந்த நவம்பர் 13 இல் தொடங்கி டிசம்பர் 24 வரை தமிழ்நாட்டின் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த மேற்கு

மாவட்டங்கள் அனைத்திலும் இந்த யாகச் சீரழிவை வீடு வீடாகப் பரப்பும் வாகனங்கள் சுற்றி வருகின்றன. பார்ப்பன அமைப்புகளின் ஆபத்தான பின்னணிகளைப் புரிந்துகொள்ள வாய்ப்பில்லாத எளிய மக்களை அணித் திரட்டுகின்றனர். அந்த அணித் திரட்டலுக்கு உறுதியாக நாம் எதிர்வினை ஆற்ற வேண்டும்.

தோழர் பெரியாரின் நினைவு நாளான டிசம்பர் 24 ஆம் நாள், பெரியார் இயக்கங்களின், தோழர்கள் அனைவரும் ஏதோ ஒரு நிகழ்வை அவசியம் திட்டமிடுவார்கள். அந்தத் திட்டமிடலில், யாக எதிர்ப்பு, யாகப் பரப்புரை எதிர்ப்பு ஆகியவற்றையும் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். ஏற்கனவே, பெரியார் உணர்வாளர்கள் கூட்டமைப்பு என்ற ஒரு புதிய கூட்டமைப்பு டிசம்பர் 24 இல் திருச்சியில் கருஞ்சட்டைப் பேரணி நடத்தப் போவதாக அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அந்தக் கருஞ்சட்டைகளின் ஒன்றுகூடலை, மூடநம்பிக்கை ஒழிப்புப் பேரணியாக கோவையிலோ, திருப்பூரிலோ நடத்தினால், அது பார்ப்பன, காவிக் கும்பலுக்குச் சரியான எதிர்வினையாக அமையும்.

ஒருவேளை அந்தக் கூட்டமைப்பில் உள்ள சில தமிழ்த்தேசிய அமைப்புகளுக்கு இதில் ஆர்வம் இல்லை என்றால், திராவிடர் இயக்கங்கள் மட்டுமாவது டிசம்பர் 24 இல் திருப்பூரிலோ, கோவையிலோ அணிதிரள முயற்சித்தால் சிறப்பாக அமையும். அப்படி, காவிகள் யாகம் நடத்தும் அதே நாளில், அதே பகுதியில் நாம் மூடநம்பிக்கை ஒழிப்புப் பேரணிகளை நடத்துவது சட்டச் சிக்கலாகும் என்றோ அல்லது உரிய பயன் அளிக்காது என்றோ கருதினால், அதற்கு முன்பே மேற்கண்ட மேற்கு மாவட்டங்கள் முழுவதிலும் யாக எதிர்ப்பு - மூடநம்பிக்கை ஒழிப்புப் பயணங்களை நடத்தலாம்.

திராவிடர் கழகம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்தியக் கம்யூனிஸ்ட், விடுதலைச்சிறுத்தைகள், ஆதித்தமிழர் பேரவை, தமிழ்ப்புலிகள், சமூகநீதிக் கட்சி, ஆதித்தமிழர் முன்னேற்றக் கழகம், தி.மு.க, ம.தி.மு.க போன்ற அனைத்து அமைப்புகளும் ஒன்றிணைந்து ஒரு பொதுக் கூட்டமைப்பை உருவாக்கி, இந்தப் "பொருளாதார - பண்பாட்டுச் சீரழிவு யாகங்களைத்" தொடக்கத்திலேயே தடுத்து நிறுத்த வேண்டும். யாகங்களுக்கு ஆதரவாக மக்களை அணிதிரட்டும் செயலுக்கு எதிர் வினையாக, அறிவியல் பரப்புரைகளையும் அறிவியல் கண்காட்சிகளையும் நடத்தவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறோம்.


சான்றுகள்:

1. 'பெரியார் பார்வையில் இந்தியதேசியம்' நூல்

2. www.periyarwritings.org

3. The Hindu 09.07.2018


## திராவிடர் பண்பாட்டு நாட்காட்டி 2019

இந்து - வேத மதத்திற்கு எதிராக, தோழர் பெரியார் உருவாக்கி, நடைமுறைப்படுத்திய திராவிடர் பண்பாட்டுப் புரட்சியை இளைய தலைமுறைக்குப் பரப்பும் நோக்கில் நாட்காட்டிகளை வெளியிட்டு வந்தது காட்டாறு. அந்த நாட்காட்டிகள் ஒவ்வொரு வீட்டையும் ஒரு பிரச்சார மேடையாக மாற்றின. குடும்பத்திற்குள்ளேயே கலகங்களை மூட்டின. அந்தக் கலகத்தை வரும் 2019 லும் தொடர இருக்கிறோம். இந்தியாவில் "பெண்களுக்கு மிகவும் ஆபத்தான இடம் குடும்பம்தான். வீடுகள்தான்" என ஐ.நா. வின் புள்ளி விபரங்கள் சான்களுடன் விளக்கிவிட்டன. ஆபத்தான குடும்பம் எனும் நிறுவனத்தில் ஒரு மிகச்சிறிய கல்லை எறிகிறோம். எங்களுக்குத் தோள் கொடுங்கள்.

**நாட்காட்டி நன்கொடை: ரூ.75.**

தொடர்புக்கு:

சி.விஜயராகவன் 99762 56821

இராவணன் 97868 89325

இணையத்தில் வாங்க: www.periyarbooks.in

## பள்ளிகளில் ரதயாத்திரைக்குத் தடை!

மகாலட்சுமி யாகத்திற்காகத் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள தனியார் பள்ளி மாணவர்களிடம் செங்கல், நெய் சேகரிக்கும் முயற்சிகள் தொடங்கின. கடந்த 02.12.18 அன்று திருப்பூர் ஜெய்சாரதா பள்ளியில் மாணவர்களிடம் செங்கல், நெய் சேகரிப்பதற்காக இந்து முன்னணியின் இரதம் செல்ல இருப்பதாகச் செய்தி வெளியானது. இச் செயலைக் கண்டித்து உடனடியாக, தந்தைபெரியார் திராவிடர் கழகத்தின் பொறுப்பாளர் தோழர் சண்.முத்துக்குமார் தலைமையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமும், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரிடமும் கண்டன அறிக்கை அளிக்கப் பட்டது.ஜெயசாரதா பள்ளிநிர்வாகத்திற்கும் நேரடியாகக் கண்டனக் கடிதங்கள் கொடுக்கப்பட்டன.

தோழர்களின் உடனடிச் செயல்பாடுகளால், பள்ளிகளில் இந்து முன்னணியின் செங்கல், நெய் சேகரிப்பு தடுக்கப்பட்டது. பள்ளிகளில் ரத யாத்திரையும் நிறுத்தப்பட்டது. யாகங்களுக்கு ஆதரவாக வெகு மக்களைத் திரட்டும் புதிய சீரழிவுப் பண்பாட்டைத் தடுக்க இயலா விட்டாலும், கல்வி நிறுவனங்களிலும், பள்ளி மாணவர்களிடம் இந்த யாகப் பண்பாடு பரப்பப் படுவதைத் தடுத்த தோழர்களின் எதிர்வினை பாராட்டுக்குரியதாகும்.

த.மு.எ.ச பொறுப்பாளர்கள் தோழர்கள் ஈசுவரன், கணேசன், குமார், பதியம் இலக்கிய அமைப்பின் பாரதிவாசன், திராவிடர் விடுதலைக் கழகத்தின் பொறுப்பாளர் தோழர் முகில் ராசு, காட்டாறுகுழு தோழர்கள் வேணி, சண்முகம், வடிவேல், நாராயணமூர்த்தி, மதன், விமல், கார்த்தி ஆகிய தோழர்கள் இந்து முன்னணியின் ரத யாத்திரைக்கு எதிராக வினையாற்றினர்.





தோழர் பெரியார்

# யாகப் புரட்டு ஜீவகாருண்யம்

நான் ஏன் இங்கு இந்த ஜீவ காருண்யக் கூட்டத்திற்கு வந்தேன் என்று சிலர் கேட்கலாம். உண்மையிலேயே இங்கு கடலாடியில் நடக்கும் யாகத்தில் ஏதோ சில ஐந்தோ பத்தோ ஆடுகள் கொல்லப் படுவதை நான் பிரமாதமாகக் கருதி இங்கு வரவில்லை. லக்ஷக்கணக்கான ஆடுகள் மாடுகள் மற்றும் சில ஜீவர்கள் தினமும் கொல்லப்படுவது எனக்குத் தெரியும். அப்படிப் பட்ட கொலைகளை என் போன்றவர்களால் நிறுத்துவிட முடியாது என்பதும் எனக்குத் தெரியும். அப்படி இருக்க, பின் ஏன் நான் இங்கு வந்தேனென்றால் யாகத்தின் புரட்டையும், அது செய்யப்படுவதின் உள் எண்ணத்தையும் அதனால் ஏற்படும் பலன்களையும் “உயர்ந்த ஜாதியார் அஹிம்சா தர்மமுள்ள அந்தணர்” என்று கர்வமுடன் தங்களைச் சொல்லிக் கொள்ளும் பார்ப்பனர்களின் யோக்கியதையையும் பொது ஜனங்களுக்கு எடுத்துக் காட்டவும் கொல்லப்படும் பிராணிகள் யாகத்தின் பேரால் எப்படிக் கொல்லப்படுகின்றன என்பதையும் ஜனங்களுக்கு அறிவித்து இப்படிப்பட்ட கொடுமையான சித்திரவதை இனி நிகழாமல் இருக்கும்படி செய்ய சர்க்காரைத் தூண்டுவதற்காகவுமே இங்கு வந்திருக்கிறேன்.

இவற்றில் என் அபிப்பிராயம் தவறுதலாய் இருந்தாலும் இருக்கலாம். எப்படி இருந்தாலும் நான் உண்மையானதென்று அறிந்ததை எவ்வித விருப்பு வெறுப்பு இல்லாமல் பொது நன்மையை உத்தேசித்து சொல்லுகின்றேன். உங்களுக்கு சரியென்று பட்டதை எடுத்துக்கொண்டு அதற்கும் உங்களாலான உதவி செய்யுங்கள். மற்றதைத் தள்ளிவிடுங்கள்.

**கொலைக் கொடுமை**

முதலில் கொலைக் கொடுமைகளைப் பற்றிச் சொல்லுகிறேன். யாகத்தில் கொல்லப்படும் ஆடுகள் எப்படிக் கொல்லப்படுகின்றன என்பது தங்களில் சிலருக்காவது தெரிந்திருக்குமென்றே நினைக்கிறேன். நான் அறிந்த மட்டில் ஆட்டை கால்களைக் கட்டிக் கீழே தள்ளி கொம்பைப் பிடித்து ஒருவர் அமிழ்த்துக் கொண்டு வாய்க்குள் மாவைத் திணித்துக் கொண்டிருக்க ஒருவர் நன்றாக மூச்சுவிடாமல் கட்டி சத்தம் போடாமல் செய்து ஒருவர் விதர்களை கிட்டி போட்டு நசுக்க, மற்றவர் வயிற்றில் ஆயுதங்களால் இடித்து கிழித்து அதன் சிற்சில உறுப்புகளை தனித் தனியாய் அறுத்து எடுப்பதன் மூலம் கொல்லப்படுகிறதாம்.

ஆடு கோழியை தலைகீழாகப் பிடிப்பதையும், தர தரவென்று இழுப்பதையும் ஜீவஹிம்சை என்று சட்டஞ்செய்து அம்மனிதர்களைத் தண்டிக்கும் சர்க்கார் இவர்களை என்ன செய்ய வேண்டும்? ஆலையிலிட்டு நசுக்கும்படி சட்டம் செய்தால் அதை தப்பு என்று சொல்ல முடியுமா? யோசித்துப் பாருங்கள். இந்த யாகம் ஆட்டுக்கு மாத்திரமில்லையாம். மாடு, மனிதர், குதிரை முதலியவைகளுக்கும் உண்டாம். இப்படியே விட்டு விட்டால் நாளைக்கு இந்த ஆடுகளின் கதிதானே மனிதர்களுக்கும் ஏற்படும். மத சம்மந்தத்தில் அரசாங்கம் நுழைவதில்லை என்று சொல்லி அரசாங்கம் சுலபமாய் தப்பித்துக் கொள்ளலாம்.

ஆனால் நாளைக்கு நரமேதயாகம் செய்து 10, 20 மனிதர்களை இந்தப்படி சித்திரவதையான கொலைபாதகம் செய்தால் மதத்தில் பிரவேசிக்காமல் அரசாங்கம் பார்த்துக் கொண்டிருக்குமா? அதுபோலவே இப்போது கருதி இப்படிப்பட்ட மூர்க்கத்தனமான சித்திர வதைக் கொலைகளையும், ஹிம்சைகளையும் அரசாங்கம் ஏன் நிறுத்தக்கூடாது? பார்ப்பனர் களுக்குப் பயந்தோ, மதத்திற்குப் பயந்தோ தாங்கள் சும்மா இருப்பதாக சொல்லுவார்களானால் இப்படிப்பட்ட கொலையும், சித்திரவதையும் தங்கள் மதத்திற்கு விரோதம் என்று கருதி அதற்காக வேதனைப்படும் ஜயின மதத்தி னுடையவும், ஜயினர்களுடையவும் கொள்கையும், மரியாதையும், உணர்ச்சியும் காப்பாற்றப்பட வேண்டாமா என்று கேட்கின்றேன்.

## இராமாயணம்

தோழர்களே! இந்தக் கொடுமைகளை உருவகப்படுத்திப் பார்க்கும்போது இராமாயணக் கதையின் தத்துவம் இதில் தாண்டவமாடுகின்றது. இராவணனையும் அவர் குடும்பத்தையும் ஆரியர்கள் இழித்துப் பழித்துக் கூறி அவன் அரசை நாசமாக்கியதாகக் காணப்படுங் கதையை இப்போது நினைத்துப் பாருங்கள். இராமாயணக் கதைக்கு அஸ்திவாரமே இந்த சித்திரவதைக் கொலைபாதகச் செயல்களான யாகமே யாகும். தாடகை என்கின்ற ஒரு பெண் யாகத்தைக் கெடுத்ததற்காகத்தானே கொல்லப்பட்டிருக்கிறார். இந்த மாதிரி கொலை பாதக யாகத்தைக் கெடுக்க யார்தான் துணியமாட்டார்கள்? யாகத்தைக் கண்டு மனம் வருந்தி பரிதாபப்பட்டு அதை நிறுத்த முயற்சித்ததல்லாமல் அந்த அம்மாள் செய்த கெடுதி என்ன?

நமக்குச் சக்தியில்லாததாலும், நம் உணர்ச்சிக்கு அனுகூலமான ஆக்ஷி இல்லாத தாலும் நாம் எல்லோரும் இங்கு வந்து கத்து கிறோம். சக்தியும் ஆக்ஷி உரிமையும் இருக்கு மானால் நாம் தாடகையைப் போல்தானே நடந்து கொண்டு தீருவோம். யாகத்தை வெறுத்ததற்காக அந்த அம்மாளைக் கொன்றுவிட்டது மல்லாமல் அந்தம்மாளை இழித்துக் கூறும் முறையில் அந்த அம்மாள் மூத்திரம் பெய்து யாக நெருப்பை அணைத்துவிட்டார் என்றும் மிருகங்களையும், பக்ஷிகளையும் பச்சையாய் சாப்பிட்டார் என்றும், பொருத்தமற்றதும், போக்கிரித்தனமானதுமான ஆபாசக் கதைகளையும் கட்டி விட்டார்கள்.

இதிலிருந்தே ராமாயணக் கதை ஜீவகாருண்யம் காரணமாய் ஏற்பட்ட ஆரியர் திராவிடர் கலகம் என்றும், ஆரியர் தங்களை உயர்த்தியும் திராவிடர்களைத் தாழ்த்தியும் திராவிடர்களுக்கு என்றும் பழி இருப்பதற்காக எழுதி வைத்துக் கொள்ளப்பட்டது என்றும் ராம லக்ஷ்மணர்கள் ஆரியக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், ராவணனாதியோர் திராவிட அதாவது ஜீவகாருண்யக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் விளங்கவில்லையா? என்பதை யோசித்துப் பாருங்கள்.

அக்கதையில் மிருகங்களையும் ஜீவர் களையும் கொல்லும் விஷயங்களிலும், மது மாம்சம் சாப்பிடும் விஷயங்களிலும், சூதுவாது செய்த விஷயங்களிலும் பெண்களை இழிவாய் நடத்திக் கொடுமைப் படுத்தின விஷயங்களிலும் சிறிதும் தயங்காத ராம லக்ஷ்மணக் கூட்டங்களை இவ்வளவு தூரம் புகழ்ந்திருப்பதுமல்லாமல் அவர்களைக் கடவுளாகக் கருதச் செய்து திராவிட மக்களைக் கொண்டே பூஜிக்கவும் வணங்கவும் புகழவும் செய்து விட்டார்கள். அது போலவே ராவணாதியர்கள் இந்த யாகத்தை வெறுத்த தல்லாமல் வேறொரு கெடுதியும் ராம லக்ஷ்மணாள் செய்த அளவுகூட செய்யாதவர் களை திராவிட மக்களைக் கொண்டே இகழச் செய்துவிட்டார்கள். திராவிட மக்களில் சிலரையே இவ்விதப் புகழ்ச்சியும், இகழ்ச்சியும் செய்து கொண்டு பிழைக்கவும் செய்துவிட்டார்கள்.

## புண்ணியம், சொர்க்கம்

இது நிற்க, இந்த யாகங்கள் புண்ணிய காரியங்களாம். சுவர்க்கத்திற்குக் காரணமான வைகளாம். புண்ணியம், சொர்க்கம் என்கின்ற புரட்டைப் பாருங்கள். ஜீவர்களை சித்திரவதை செய்தல் புண்ணியமாகவும் சொர்க்க லபிதமாகவும் இருந்தால் இனி பாபத்துக்கும் நரகத்துக்கும் காரணமான காரியம் என்ன என்பது எனக்கு விளங்கவில்லை. நமக்குப் புண்ணியம் சொர்க்கம் வேண்டுமானால் நமக்கு இஷ்டமானவர்களைப் பிடித்து கால் கைகளைக் கட்டிப் போட்டு வாயில் மண்ணை அடைத்து விதரைப் பிடித்து நசுக்கிக் கொன்று போட்டால் புண்ணியமும் சொர்க்கமும் கிடைத்துவிடும்போல் இருக்கிறது. வேண்டு மானால் சில மந்திரங்களையும் சொல்லிவிடலாம்.

இதில் நமக்கு இரண்டு வித லாபம் போலும். சொர்க்கம் நரகம் என்பவைகள் சோம்பேறிகளின் வயிற்றுப் பிழைப்பு சாதனங்கள் என்று பல தடவை நான் சொல்லி வந்திருக்கிறேன். பாடுபட்டு உழைத்தவன் பொருளைக் கையைத் திருகிப் பிடுங்கிக் கொள்வதற்குப் பதிலாக சொர்க்க நரகங்கள் என்னும் பூச்சாண்டிகளைக் காட்டி பயப்படுத்திப் பிடுங்கிக் கொள்ளப்படுகின்றன. இப்படிப்பட்ட சொர்க்க நரகத்துக்கு உண்மை யான அர்த்தம் நல்ல விதத்தில் செய்ய வேண்டு மானால் மனிதனின் மூர்க்க சுவாபமும் பழிவாங்குந் தன்மையும் சொர்க்க நரகம் என்னும் வார்த்தை களால் கற்பனைகளால் பிரதிபலிக்கின்றது என்பதே யாகும்.

## யாகத்தின் கருத்து

இப்படிப்பட்ட சொர்க்க நரகத்தைப் பிரசாரம் செய்யவே யாகங்கள் முதலியன செய்யப் படுகின்றன. யாகத்தில் பிராமணர்களுக்கு நம்பிக்கை இல்லையென்பதே எனது அபிப்பிராயம்.

மற்றவர்களை மிரட்டவும் ஏமாற்றவும் சிலர் செல்வம் சேர்த்து வயிறு பிழைக்கவுமே இப்போது யாகங்கள் செய்யப்படுகின்றன.

யாக சம்பந்தமான வேத சாஸ்திர ஆதாரங்கள் நமக்குப் பொருத்தமானவைகளாகுமா? நாம் அவற்றை ஏற்றுக் கொள்ள முடியுமா? இப்படிப்பட்ட கொடுமைக்கும், கொலை பாதகத்துக்கும், சித்திரவதைக்கும் ஒரு கடவுள் சொர்க்கத்தைக் கொடுப்பதாய் இருந்தால் கடவுளின் தன்மையாகக் கூறப்படும் அன்பு, கருணை என்று சொல்லுவது உண்மையாய் இருக்க முடியுமா? கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு ஜீவனை மற்றொரு ஜீவன் சித்திரவதை செய்து ஆகுதி கொடுப்பதைக் கடவுள் விரும்பு கின்றார் என்றால் ஜீவர்களையெல்லாம் கடவுள் உற்பத்தி செய்தார் என்பது உண்மையாயிருக்க முடியுமா?

கடவுள் பேராலேயே இப்பேர்ப்பட்ட காரியங்கள் நடப்பதை ஒரு கடவுளோ, அரைக் கடவுளோ, அணுவளவு கடவுளோ இருந்தால் பார்த்துக்கொண்டு இருக்க முடியுமா? அல்லது கடவுளுக்கு இது தெரியாது என்று சொல்லி விட முடியுமா? இவைகளெல்லாம் பாமர மக்களை ஏமாற்றுவதற்காகச் செய்யப்படும் சூழ்ச்சிப் பிரசாரமேயொழிய வேறில்லை. இப்படிப்பட்ட யாகங்களுக்கு சங்கராச்சாரி சுவாமியார் என்பவரும் அனுமதியளிக்கிறாராம்; பணம் கொடுக்கிறாராம். இதிலிருந்து சங்கராச்சாரிகள் என்பவர்கள் யோக்கியதைகளையும் உணர்ந்து கொள்ளுங்கள்.

**யாகம் ஏன் செய்யப்படுகிறது?**

இந்த யாகங்கள் இப்பொழுது ஏன் செய்யப் படுகின்றன? என்பது உங்களுக்குத் தெரியுமா? சனாதன தர்மங்கள் கெட்டுப் போய்விட்டனவாம். எதனால் என்று கேட்பீர்களானால் சாரதா சட்டம் செய்யப்பட்டு விட்டதாம். தீண்டாமை ஒழிப்புச் சட்டமும், கோவில் பிரவேசச் சட்டமும் இப்போது இந்திய சட்டசபையில் இருக்கிறதாம். அவை நிறைவேறிவிடும் பக்ஷத்தில் சனாதன தர்மத்துக்குப் பெரிய ஆபத்து வந்துவிடுமாம். ஆதலால் யாகங்கள் செய்வதன் மூலம் அவற்றைத் தடுத்து சனாதன தர்மத்தை நிலை நாட்ட வேண்டுமாம். ஆகவே சனாதன தர்மங்கள் என்பவைகள் பார்ப்பனரல்லாத மக்களுக்குப் பார்ப்பனர் ஒழிந்த மற்ற மனித சமூகத்துக்கு எவ்வளவு மோசமானதும் கெடுதியானதும் சுயமரியாதைக்கு விரோதமானதுமான காரியம் என்பதை நான் உங்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டியதில்லை.

இதிலிருந்து பார்ப்பனப் புரட்டுகளை நீங்கள் தெரிந்து கொள்ளக் கூடும் என்று நினைக்கிறேன். சில பார்ப்பனர்கள் தீண்டாமை ஒழிய வேண்டும் என்பதும் சில பார்ப்பனர்கள் கோயில் பிரவேசம் எல்லோருக்கும் இருக்க வேண்டும் என்பதும், மற்ற பார்ப்பன குருமார்கள், மடாதிபதிகள், ஜாதித் தலைவர்கள் ஆகிய எல்லோரும் சேர்ந்து சட்டம் ஒழியவும், பிரயத்தனப்படுபவர்கள் ஒழியவும் யாகம் செய்வதும் யாகத்தை ஆதரிப்பதுமாயிருந்தால் இதற்கு என்ன அர்த்தம் சொல்வது என்று உங்களையே கேட்கின்றேன். நான் இங்கு வரப்போவதாய்ப் பத்திரிகையில் தெரிந்தவுடன், இரண்டொரு பார்ப்பன நண்பர்கள் என்னைப் பரிகாசம் செய்தார்கள். அது என்னவென்றால்,

“நீங்கள் இப்பொழுது உலக மக்கள் பொது விஷயங்களில் சம்மந்தம் வைத்துக் கொண்டிருக்கும் போது எங்கோ இரண்டொரு பார்ப்பனர்கள் வயிற்றுப் பிழைப்பிற்காக ஏதோ ஒரு வியாபாரமாய் யாகம் செய்து பிழைக்கிற காரியத்தைப் பிரமாதமாய்க் கருதி அதற்காக நீங்கள் போகலாமா?”

என்று கேட்டார்கள். இந்த யாகங்களை யாரோ இரண்டொரு பார்ப்பனர்களின் வயிற்றுப் பிழைப்பு வியாபாரம் என்று எண்ணிவிட முடியுமா? இதற்கு எல்லாப் பார்ப்பனரும் பணம் கொடுத்திருக்கிறார்கள். சங்கராச்சாரி முதலியவர்கள் ஆதரவளிக்கிறார்கள். அய்யங்கார் பார்ப்பனர் களுக்கு யாகம் விரோதமானது என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் இப்போதைய யாகத்தில் அய்யங்கார் பார்ப்பனர்களும் சில மாத்வப் பார்ப்பனர்களும்கூட சேர்ந்து ஆதரவளித்தும் இருக்கிறார்கள் என்று தெரிகிறது. அப்படி இருக்க இரண்டொரு பார்ப்பனர் என்று எப்படி சொல்லிவிட முடியும்?

அப்படியானால் இவ்வளவு கூச்சல் ஏற்பட்ட பிறகாவது சில முக்கியமான பார்ப்பனர்கள் ஏன் ஒன்று கூடி ஒரு அறிக்கையை வெளிப்படுத்தக் கூடாது. “இந்த யாகம் பார்ப்பன சமூகத்தின் சார்பாகவோ மதத்தின் தத்துவப் பிரகாரமோ நடப்பதல்ல. நாங்கள் அதை ஆதரிப்பதில்லை என்பதோடு வெறுக்கவும் செய்கிறோம்” என்று தோழர்கள் மகாகனம் சாஸ்திரியாரும், சர். சிவசாமி அய்யரும், சர்.சி.பி. ராமசாமி அய்யரும், டி.ஆர். வெங்கிட்டராம சாஸ்திரியாரும், சர். அல்லாடி கிருஷ்ணசாமி அய்யரும் ஒரு அறிக்கை வெளியிடட்டுமே?

இவர்களெல்லாம் தங்களைப் பெரிய சீர்திருத்தவாதிகள் என்றும், தாங்களே இந்திய மக்களின் பிரதிநிதிகள் என்றும், எல்லா விஷயங்களுக்கும் தாங்களே அபிப்பிராயம் கொடுப்பவர்கள் என்றும் தாராளமாக விளம்பரம் செய்ய ஏற்பாடு செய்ததுடன் போதிய விளம்பரமும் பெற்றிருக்கிறார்கள். ஏன்? இவர்கள் வாய்திறக்கக் கூடாது என்று கேட்கிறேன்.

தீண்டாமை விலக்கு மசோதாவையும், கோவில் பிரவேச மசோதாவையும் காங்கிரசின் சார்புடையவையல்லவா என்றும், தோழர் காந்தியார் இம்மசோதாக்கள் நிறைவேற வேண்டி கவலை எடுத்துக் கொண்டு இந்திய சட்டசபை அங்கத்தினர்களிடம் பிரசாரம் செய்து ஆதரவு

தேடி வருகிறார்களா இல்லையா என்றும் கேட்கின்றேன். இப்படிப்பட்ட காங்கிரஸ் அனுமதி பெற்ற காங்கிரஸ் சார்பான மசோதாக்களை ஒழிப்பதற்கு யாகம் செய்தால், காங்கிரஸ்வாதியான தோழர் சத்தியமூர்த்தியின் கடமை என்ன என்று கேட்கின்றோம்?

தோழர் சத்தியமூர்த்தி இந்திய சட்ட சபைத் தேர்தலுக்கு தஞ்சை, திருச்சி ஜில்லா சார்பாக நிற்கப்போவதாய் பிரஸ்தாபம். தஞ்சை ஜில்லா பார்ப்பனர்கள் வருணாச்சிரமக்காரர்கள். அவர்கள் தீண்டாமை விலக்கு மசோதாவுக்கும் கோவில் பிரவேச மசோதாவுக்கும் எதிராகவும், சாரதா சட்டத்தை ஒழிப்பதற்கும் தகுதி உடையவர் களையும், அந்தப்படி செய்வதாக வாக்களிப்பவர் களையுந்தான் தேர்ந்தெடுப்பவர்கள். அப்படி இருக்க தோழர் சத்தியமூர்த்தி சாஸ்திரிகள் அந்தத் தொகுதியில் நிற்பதென்றால் அவர் எப்படிப் பட்டவராய் இருக்கக் கூடும் என்று யோசித்துப் பாருங்கள். தோழர் சத்தியமூர்த்தி அவர்கள் இந்த இரண்டு மூன்று மசோதாக்களையும் ஆதரிப்பதாக இதுவரை எங்கும் பிரஸ்தாபிக்கவே இல்லை.

அன்றியும் தீண்டாமை விலக்கு, கோவில் பிரவேசம் ஆகிய காரியங்களுக்கு சட்டம் செய்யக் கூடாது என்று தஞ்சை, திருச்சி ஜில்லாவில் பேசியிருக்கிறார். இப்படிப்பட்ட பார்ப்பனர்கள் தான் காங்கிரஸ் தலைவர்கள் மாத்திரமல்லாமல் தோழர் காந்தியால் பாராட்டப்பட்டவர்களுமாய் இருக்கிறார்கள். இவர்களைப் போன்ற சில பார்ப்பனரல்லாதார்களும் இருக்கிறார்கள். தோழர் முத்துரங்கமுதலியார் கூட்டமும் இப்படிப்பட்டதே யாகும். இவர் இந்திய சட்டசபை போக வேண்டுமாம். இதுமாத்திரமா? தோழர் சீர்காழி சிதம்பரநாத முதலியார், கோவை வெள்ளியங்கிரிக் கவுண்டர் ஆகியவர்கள் சனாதன தர்மத்தை ஆதரித்ததுடன் வைசிராய் பிரபுவைக் காண சனாதன தர்ம பார்ப்பனர்களுடன் டெபுடேஷன் சென்றார்கள் என்று நான் சமீபத்தில் அறிந்தேன். ஆகவே காங்கிரஸ் யோக்கியதையைப்பற்றி நீங்களே அறிந்து கொள்ளுங்கள்.

### தேர்தல் தந்திரம்

இந்த யாகத்தை நான் ஒரு தேர்தல் தந்திரமாகவே நினைக்கின்றேன். சனாதன தர்மம் நிலை நிறுத்தப்பட யாகம் செய்தால் அந்த சனாதன தர்மத்துக்கு விரோதமானவர்களுக்குப் பாவமும் கெடுதியும் ஏற்படக்கூடும் என்று பாமர மக்கள் பயப்படக்கூடும். அப்போது பெரும்பாலும் பகுத்தறிவற்ற பாமர ஜனங்களும், தோழர்கள் சிதம்பரநாத முதலியார், வெள்ளியங்கிரிக் கவுண்டர், முத்துரங்க முதலியார் போன்ற செல்வவான்கள் என்பவர்களும், சனாதன தர்மத்தைக் காப்பாற்றுவேன் என்பவர்களுக்கே ஓட்டுக் கொடுக்கக் கூடும் என்கின்ற எண்ணத்தின் மீது பாமர மக்களைப் பயப்படுத்தவே இந்த யாகப் பூச்சாண்டி காட்டப்படுகின்றது.

யாகத்திற்காக யாரும் பயப்பட வேண்டிய தில்லை. நான் வைக்கம் சத்தியாக்கிரகத்தில் இருக்கும் போது எனக்கும் என் மனைவிக்கும் மற்றும் எனது கூட்டு வேலைத் தோழர்களுக்கும் விரோதமாக யாகம் செய்யப்பட்ட இந்த யாகங் களுக்கு மேல்ஜாதிக்காரர்கள், பணக்காரர்கள் மற்றும் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் அரசாங்க தேவஸ்தான இலாக்கா ஆகியவர்கள் பலவித உதவி செய்தார்கள். அது எங்களைக் கொல்ல முடிய வில்லை. அது மாத்திரமல்லாமல் அந்த சமஸ்தான ராஜாவை சாகாமல் காப்பாற்றவும் முடியவில்லை.

அந்த யாகத்தின் போது நான் 6 மாதம் தண்டனை பெற்று திருவனந்தபுரம் சென்டிரல் ஜெயிலில் இருந்தேன். அதே சமயத்தில் அத்தேச அரசர் இறந்து போனார். அதனால் நான் தண்டனை காலம் பூராவும் முடியும் முன்பே விடுதலை செய்யப்பட்டுவிட்டேன். யாகம் முடிந்தும் கூட வைக்கம் சத்தியாக்கிரக விஷயம் வைக்கத்தைப் பொருத்தவரை வெற்றி பெற்று விட்டது. ஆகையால் யாகத்துக்கு ஏதோ சக்தி இருப்பதாகவோ அது நம்மை ஏதாவது செய்து விடுமென்றோ யாரும் பயப்பட்டு விடாதீர்கள். இந்த தந்திரம் எல்லாம் உழைப்பாளிகளின் உழைப்பை சோம்பேறிகள் சாப்பிடுவதற்காகவே ஒழிய வேறில்லை.

உழைத்தவன் உழைப்பின் பயனை அடைய வேண்டுமானால் இப்படி யாகம், சாஸ்திரம், வேதம், மோக்ஷம், கர்மம், முன் ஜன்மம், கடவுள் செயல் என்கின்ற பித்தலாட்டங்களுக்கு அடிமைப் படக் கூடாது.

**எத்தனையோ வருஷ காலமாய் யாகம் செய்யப்பட்டு வருவதாய் அறிகிறோம். உலகத்தில் என்ன அக்கிரமம் மாறி இருக்கிறது? என்ன கொடுமை நீங்கியிருக்கின்றது? யாகம் எக்கியம் கிரமமாய் செய்யப்பட்டு வந்த தெய்வீக அரசர்களான ராமன், அரிச்சந்திரன் ஆகியவர்கள் காலத்தில் உள்ள அக்கிரமம், அயோக்கியத்தனம், கொலை பாதகம் எல்லாம் இன்னும் இருந்துதான் வருகின்றன. எவ்வித மாறுதலும் ஏற்பட்டு விடவில்லை. ஆகையால் நீங்கள் இப்படிப்பட்ட மிரட்டுதல்களைக் கண்டு பயந்துவிடாதீர்கள்! ஏமாந்து விடாதீர்கள்!!**

குறிப்பு: ஆரணிக்குப் பக்கத்தில் கடலாடி என்னும் கிராமத்தில் சென்னை ஜீவரக்ஷ பிரசார சபையாரால் 03-06-1934-இல் பார்ப்பனர்கள் நடத்திய யாகத்தைக் கண்டித்து நடத்தப்பெற்ற யாகக்கண்டன கூட்டத்தில் திரு.வி.கலியாணசுந்தர முதலியார் தலைமையில் ஆற்றிய சொற்பொழிவு.

தோழர் பெரியார்,
புரட்சி - சொற்பொழிவு 10.06.1934

## அபிநயா சக்தி, மனிதி

‘தும் ஹாரி சுலு’ வித்யாபாலன் நடிப்பில் சுரேஷ் திரிவேணி இயக்கத்தில் 2017 நவம்பர் 17 ல் வெளிவந்த படம். 2018 நவம்பர் 16-ல் தமிழில் ரீமேக் செய்து இயக்குநர் ராதாமோகன் இயக்கத்தில் காற்றின் மொழி என்கிற பெயருடன் ஜோதிகா நடிப்பில் வெளிவந்து இருக்கிறது. ஜோதிகா விஜயட்சுமியாக வருகிறார்.

ஜோதிகாவிற்குத் திருமணம் ஆனபிறகு அவர் நடிக்கும் படத்தின் கதைகள், கதாபாத்திரங்களைப் பேசுவோம். அதாவது ஜோதிகாவிற்குத் திருமணம் ஆன பின்பு அவர் 36 வயதினிலே, மகளிர் மட்டும், நாச்சியார், செக்கச் சிவந்த வானம் இப்போது காற்றின்மொழி என ரொம்ப செலக்டிவான, அதே நேரத்தில் இத்தனை கவனத்துடன் கதாபாத்திரம், கதைகள் தேர்வு செய்ய வேண்டிய கட்டாயம் என்ன?

சூர்யா திருமணத்திற்குப் பின்பு நடித்த நடிக்கிற கதாபாத்திரம், கதைகள் படங்கள் பற்றி நாம் அறிவோம். சமூகப் பெண்களைப் பொதுச் சமூகம் சொல்லும் அந்தக் குடும்பப் பெண்களைப் பிரதிபலிக்கிறேன் என மிக மோசமான பிற்போக்குத்தனங்களை மேலும் விஷம் போல் உள்ளே ஏற்றும் வேலைகள்தான் ஜோதிகா தேர்வு செய்து நடிக்கும் படங்களும் கதாபாத்திரங்களும். நிஜத்தில் இவர் நடிக்கும் கதாபாத்திரங்கள் போல இவர் இருக்க மாட்டார்.

ஆனால் பொதுச் சமூகப் பெண் களுக்கு இந்த மாதிரியான பிம்பத்தைக் கொடுப்பதன் மூலம் மேலும் இங்கு பெண்களின் அடிமை மனோபாவம் கூடவே செய்யும். ஒரு முறை டீக்கடையில் நின்று இரண்டு ஆண்கள் பேசிக்கொள்கிறார்கள். ‘மச்சா... எனக்கு ஜோ வ ரொம்ப பிடிக்கும் டா.. ஏன்னா அவ பாரு மச்சா கல்யாணத்துக்குப் பிறகு கொஞ்சநாள் நடிக்கல... அப்ரம் நடிக்க வந்தபிறகு எப்டிலாம் கேரக்டர் செலக்ட் பன்ரா, கதைலாம் செமயா செலக்டிவா செய்கிறா... கிளாமரா இல்லாம சேலை கட்ர மாதிரி டிரஸ்லாம் டீசன்ட் ஆ இருக்கு’ எனப் பேசிக் கொள்கிறார்கள்.

இது மிக ஆபத்தான விசயம் இல்லையா. ஒரு பெண் திருமணம் ஆனதாலேயே நடிக்க இயலாமல் இருப்பதும், அப்படி நடிக்க வந்தாலும் பல கண்டிசன்களுடன் இந்த மாதிரியான கதா பாத்திரத் தேர்வுகளுடன் நடிக்க வேண்டியதும், அத்தோடு தன் மார்கெட்டைத் தக்க வைக்க மிக மோசமான அடிமைத்தனக் கட்டமைப்பை வருடிக் கொடுப்பதும், ஆணாதிக்கம் இல்லையா?

சூர்யா தேர்வு செய்யும் படங்கள், கதா பாத்திரங்கள் எதையும் அவருடைய திருமணம் நிச்சயிக்கவில்லை. ஆனால் ஜோதிகாவிற்கு அவர் எப்படி உடை அணிய வேண்டும் என்ன மாதிரியான கதை தேர்வு செய்ய வேண்டும்? என்ன பாத்திரத்தில் நடிக்க வேண்டும்? என எல்லாவற்றையும் அவரது திருமணமே முடிவு செய்கிறது. இவருக்கு மட்டும் இல்லை எல்லாப் பெண்களுக்கும். இதற்குப் பெரிய பாராட்டுகள் சமூகத்தில் இருந்து கிடைக்கும் குறிப்பாக ஆண்களிடம் இருந்து. இப்படியான நிர்பந்தத்திற்கு அவரைத் தள்ளியது எது? என நாம் யோசிக்க வேண்டும்.



தாய்மை, கணவன், குடும்பம், குழந்தை என வட்டத்திற்குள்ளேயே வாழும் பெண்களைத் திருப்திபடுத்தும் கதாபாத்திரங்கள். ஆனால் இந்தக் கதாபாத்திரப் படைப்பை அதன் கருத்தியலை நாம் கேள்வி கேட்டுவிட, யோசிக்க, அடையாளம் காணக் கூடாதல்லவா அதற்காக அவரே சுய கழிவிரக்கத் திற்குச் சில வசனங்களை இந்தப் படத்தில் பல காட்சிகளில் கேள்வியாய்க் கேட்டுக் கொள்வார்.

சரி, படத்துக்கு வருவோம். படத்தில் ஒரு மாமி வருகிறார். அவர் ஊறுகாய், புளிகாய்ச்சல் செய்து விற்கிறார். அவர் எப்போதும் வேலை செய்து கொண்டே இருக்கார், அது தனக்குப் பிடிக்கும் என்கிறார். ராதா மோகனின் பல படங்களில் ஒரு மாமா, மாமி வருகிறார்கள். அதே மொழியுடன், வாசனையுடன் வந்து போகின்றார்கள். ஒருவேளை நீங்கள் சொன்ன மொழி இதுதானோ? வலிய ஏன் இந்தக் கதாபாத்திரங்களைப் படத்தில் வைக்க வேண்டும்? ஊறுகாய், புளிகாய்ச்சலும் நாங்களும் சாப்டுவோம் நாங்களும் செய்வோம் அதுக்கு எதுக்கு ஒரு மாமி ராதா மோகன் அவர்களே?

நீங்கள் வைக்கும் கதாபாத்திரத்திலே உங்கள் அரசியல் பல்லிளிக்கிறதே... ஜஸ்டு கேரக்டர்தானே எனவெல்லாம் கடக்க முடியாது. உழைக்கும் மக்களையே காணோம். ஒரு நபர் வருகிறார். பாலு (வித்தார்த்) வேலை செய்யும் ஏற்றுமதி நிறுவனத்தில் வேலை செய்பவராகக் கொஞ்சம் பொது உடைமை பேசுகிறார். அவரை ஒரு ஜோக்கர் போலச் சித்தரித்து இருக்கிறார்கள். நிஜத்திலும் பகுத்தறிவு, பொது வுடைமை பேசுபவர்களை, செயல்படுபவர்களை மக்கள் அப்படித்தான் பார்க்கிறார்கள். உங்கள் தயவில் மேலும் அதிகமாகும். இது விசுவல் மீடியம்; மக்கள் அப்படியே உள் வாங்குவார்கள் என்கிற குறைந்தபட்சப் பொறுப்புணர்வு இல்லாத காட்சி களை அடுக்கியிருக்கிறார்கள்.

அதேபோல ஜோ, வித்தார்த் வீட்டில் டிவி ரிப்பேர் ஆகிறது. ஜோ வின் அப்பா டிவி ரிப்பேர் பற்றிக் கேட்கும்போது கஸ்டமர் கேரில் பேசியாச்சு, பலமுறை கம்பிளைண்டு கொடுத்தாச்சு, இனி குடும்பத்தோட தீ தான் குளிக்க வேண்டும் என்கிறார் ஜோதிகா. இந்தக் காட்சிக்கு இந்த வார்த்தையைச் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. நாம் நினைக்க மறந்தாலும் கந்துவட்டிக் கொடுமையால் கலெக்டர் அலுவலகம் முன்பு சின்னக் குழந்தை களுடன் தீக்குளித்து இறந்து போன அந்த அப்பாவிக் குடும்பம் நினைவுக்கு வருகிறது. அவசியம் இல்லாமல், தேவையே இல்லாமல் இந்த வார்த்தையைப் பயன்படுத்தி அவர்களைக் கொச்சைப் படுத்துவது போல் உள்ளது. மிக மோசமான காட்சியாக அது தொக்கி நிற்கிறது.

ஆனால் அது சாதாரணமாகப் பார்க்கும் போது புரியாதபடி காட்சிகள் காமெடியாக வைக்கப்பட்டுள்ளது. பின்பு ஜோதிகாவிற்கு ரேடியோ ஜாக்கியாக வேலை கிடைக்கிறது. அது இரவு நேரத்தில் நடக்கும் ஒரு லைவ் நிகழ்ச்சி.

சிறு தயக்கத்துடன் வித்தார்த் ஒத்துக் கொள்கிறார். அந்த இரவுகளில் கால் செய்து தன் மன உணர்வுகளை, அழுத்தங்களைப் பேசுகிறார்கள். அதற்கு ஆறுதலாய் ஜோ பேசுவதும் பாடல் போடுவதுமான நிகழ்ச்சி அது.

ஆனால் அதில்கூட ஆண்கள் மட்டுமே காதல், கலவிபற்றிப் பகிர்கிறார்கள். ஏன் பெண்களுக்கும் மன அழுத்தம் வராதா? செக்ஸ்பற்றிப் பேச மாட்டார்களா? அந்த இரவுகளில் ஜோதிகாவிடம் ஒரு பெண் கூடக் கால்செய்து பேசுவதாகக் காட்ட வில்லை. அப்படிப் பேசும் ஆண்களும் லேட் நைட் ஷோ என்பதால் செக்ஸ் பத்தி மட்டுமே பேசுவது ஆண்கள் மன நிலையை இயக்குநரின் இந்தக் காட்சி மூலம் புரிந்துகொள்ள முடிகிறது. பெண்கள் கால் செய்வது, பேசுவது கூட விலக்கப்பட்டுதான் (taboo) இருக்கு இங்கே என்பது தெளிவாகிறது.

பின்பு இந்த 2 மணி நேர இரவு வேலைக்குச் செல்வதால் ஜோதிகாவின் மகன் செல்போனில் விளையாட்டு அதிகமாவதாகவும், வித்தார்த் மன உளைச்சலுக்கு ஆளாவதாகவும் காட்டி ரேடியோ ஜாக்கி வேலையை விடுவதற்குப் பெரிய காரணமாகச் சில காட்சிகள் கட்டமைக்கப்படுள்ளது. அதாவது கால் செய்து ஜோதிகாவிற்குப் பேசும் ஆண்கள் ஆபாசமாய்ப் பேசுவதாயும் அது வித்தார்த்துக்குப் பிடிக்கவில்லை என்பது மட்டும் இல்லாமல், ஒரு வித பய உணர்வோடு இருக்கிறார். ஆண்கள் போனில் ஜோவிடம் பேசுவது, வேலைக்குச் சென்று முப்பதாயிரம் சம்பாதிப்பது எனப் பல தொந்தரவு அவருக்குக் கொடுக்கிறது.

ஒரு கட்டத்தில் ஜோதிகா என் சம்பளத்தில் உனக்கு எதாவது வாங்கித் தரவா? எனக் கேட்கும் போது உன் சம்பாத்தியத்தில் நான் சாப்பிடவா? எனக் கேட்கிறார். அதாவது ஆண் சம்பாதித்து, பெண் வீட்டில் வேலை செய்து குழந்தைகளை வளர்கிறார்கள், வீட்டைப் பராமரிக்கிறார்கள். ஆனால் பெண் சம்பாதிப்பதை இணையைவிடக் கூடுதல் சம்பளம் வாங்குவதை, இரவு நேர வேலைக்குச் செல்வதை, வேலையின் தன்மையை ஒரு ஆணினால், புரிந்துகொள்ள இயலவில்லை என்பதாகத்தானே காட்சியாக அமைத்து இருக்க வேண்டும்?

ஆனால், அந்த ஆணின் ஒற்றைத் தன்மையை, ஆணின் பார்வையை இயக்குநர் உடைக்கவே இல்லை. மாறாக, காட்சிக்குக் காட்சி உரம் போட்டு வித்தார்த் பார்வையும், வலியும் சரி என்பது போலவே காட்டி இருக்கிறார். பார்க்கும் நமக்கும் வித்தார்த் பாவம் ஜோதிகா அந்த வேலைக்குச் செல்லாமல் வீட்டில் இருந்து குடும்பத்தைப் பார்ப்பது சரி என்று தோன்றும் அளவுக்கு வித்தார்த் பக்கம் காட்சிகள் நகர்கிறது. ஒரு கட்டத்திற்கு மேல் ஜோதிகா ரேடியோ ஜாக்கியாக இருக்கும் அந்த நிகழ்ச்சிக்கே கால்செய்து தன் கஸ்டங்களை விதார்த் சொல்கிறார். அதாவது ஒன்றும் இல்லை; அவரின் புரிந்துகொள்ள இயலாத அந்த ஆணாதிக்கத்

தன்மையின் மற்றுமொரு வெளிப்பாடு அவ்வளவே அந்த காட்சி. ஜோதிகாவும் கணவனின் ஃபீலி ல் கரைந்து போகிறார்.

பொதுவாக ஆண்கள் இரவு நேர வேலைக்குச் செல்லும் போது பெண்கள் குடும்பத்தை, குழந்தைகளைப் பார்த்துக் கொள்வது இல்லையா என்ன? அதேபோல மகனை இந்த 2 மணி நேர வேலையில் கவனித்துக் கொள்ளாதது யார் தப்பு? பொறுப்பு வித்தார்த் பொறுப்புதானே? அதையும் ஏன் ஜோதிகா தலையில் போடவேண்டும்? பொறுப்புகளை, பேரண்டிங்கை எப்போதும் பெண்கள் மீதே திணிக்கிறார்கள் என்பதற்கு இந்தக் காட்சிகளே போதுமானது. அதுவும் இவை எல்லாவற்றிற்கும் பெண்களையே குற்றவாளி ஆக்கி அவளையே வருத்தப்பட வைப்பது என்பது ஒரு வன்முறையே.

அதே போல இந்த வேலையை விடச்சொல்லி அப்பா, அக்கா, கணவன் என ஒட்டு மொத்தக் குடும்பமுமே ஜோதிகாவிற்கு அட்வைஸ் செய்கிறது, சண்டை போடுகிறது. அதற்கு அவர்கள் சொல்லும் காரணம், ஆண்கள் கால்செய்து கண்டபடி பேசுகிறார்கள், கவுரவமான வேலை இல்லை என காரணங்களை அடுக்குகிறார்கள். ஒரு பெண்ணின் மீது வன்முறையைப் பிரயோகித்துவிட்டு அவளையே குற்றவாளி ஆக்கும் இந்தச் சமூகம், இந்தக் காட்சிகளைச் சர்வ சாதாரணமாகத்தான் கடக்கும்.

கணவன், குழந்தை இதைவிட இரவு வேலை முக்கியமா? என்ற அறிவுரைகள் அடுத்தடுத்து வந்தாலும், அந்த இடத்தில் ஜோதிகா, தனது வேலை பற்றியோ, பேரண்டிங் பற்றியோ, குடும்பப் பொறுப்பில் ஆணின் பங்கு பற்றியோ தனக்கு மட்டும் வரும் அறிவுரைகளின் முட்டாள்தனத்தைப் பற்றியோ கேள்வி கேட்காமல் இருப்பதால் காற்றின் மொழி அந்நியப்பட்டு நிற்கிறது.

ஒரு கட்டத்தில் வித்தார்த்தின் ஈகோ அதிகமாக, வேலையை விடுகிறார் ஜோதிகா. எதற்காக என்றால் அதே குடும்பக் கட்டமைப்பைக் கட்டிக்காக்க, குடும்ப அடிமையாய் குழந்தை, கணவனைப் பார்த்துக் கொள்ள.

அலுவலகத்தில் பிரியா விடை கொடுக்கும் போது அந்த ரேடியோ ஸ்டேசனில் சமையல் காண்டிராக்ட்டர் தேவை இருப்பதை அறிந்து ரேடியோ ஜாக்கி வேலையில் இருந்து சமையலுக்கு மாறுகிறார். அடுத்த காட்சியிலேயே கிட்சனில் வேலை செய்கிறார். சமையல் காண்டிராக்டராக பாலு உதவுகிறார். பின்பு எல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன்... நீ ரேடியோ ஜாக்கி வேலைக்குக் கிளம்ப ரெடி ஆகச் சொல்கிறார். ஜோதிகா தயங்கி, செல்ல மறுத்து ஆண்கள் பேசுவார்களே எனச் சொல்ல வித்தார்த்தோ ரொம்பப் பெருந்தன்மையாக "நீ எப்படிப் பேசுவன்னு தெரியும், உன் மேல நம்பிக்கை இருக்கு" என வழியனுப்புகிறார்.

என்ன ஒரு பயம்? ஆத்தி! கடைசியில் ஜோதிகா வேலைக்குச் சென்று ஹலோலோலோ என வேலையை ஆரம்பிப்பது போலப் படம் முடிகிறது. என்ன சொல்ல வருகிறது காற்றின் மொழி? தனக்குப் பிடித்த வேலையைக் குடும்பத்துக்காக விட்டு, சமையல் வேலையை ஆரம்பித்து கணவன் அனுமதி கொடுத்து வழியனுப்பி வைத்த பிறகு வேலைக்குச் செல்வதில் என்ன சுயம் இருக்கிறது. இப்படியான நல்ல பெயரை வாங்குவதில் நமக்கு என்ன பயன் இருக்கிறது.

"எனக்கு இந்த வேலை முக்கியம், குழந்தையைப் பார்ப்பதும், வீட்டைக் கவனிப்பதும் கூட உன் வேலைதான். உன்னைவிட அதிகமாய் சம்பாதித்தால் தாழ்வாய் உணராதே, நானும் இத்தனை வருடம் உன் வருமானத்தில்தான் குடும்பத்தைக் கவனித்தேன். எனக்கு எந்த ஈகோவும் இல்லை" என்பதான அடிப்படை விசயங்களைத் தானே உரையாடி இருக்க வேண்டும்?

அந்த உரையாடலில் இயக்குநர் வைத்த காட்சிகளின் நூல்களை உடைத்து இருக்கலாம். அது மட்டும் இன்றி இந்த உரையாடல் இப்போது சமூகத்துக்கு அவசியமான உடைக்க வேண்டிய நுண்ணரசியலும் கூட. ஆனால் ஒற்றைப் பார்வையில் படம் முழுக்க நகர்வதும், சமூகப் பெண்களை அதே பண்பாட்டு, சாதிய, அடிமைக் கட்டமைப்புடன் வைத்திருக்கக் காட்சிகளை அமைப்பதும், பிரதிபலிப்பதும் எனக் காற்றின் மொழி முழுக்க விசம் மட்டுமே. இடது சிந்தனைக்கும், உரிமைக்கும், சமத்துவத்திற்கும் எதிரான மொழி இது. இந்தக் காற்றில் உயிரும் இல்லை. பெண்ணின் மொழியும் இல்லை.


## மணமகள் தேவை

பெயர்: செ.வே.கார்முகில்
படிப்பு: பி.இ.பட்டதாரி
பிறந்த தேதி: 15.06.1990
பணி: சூரிய மின் உற்பத்தித் தொழிலகம்
(சோலார் பவர் சிஸ்டம்) சொந்தத் தொழில்.
பணியிடம்: 3/147-கேசவபுரம், உடுமலை சாலை
தொழில்பேட்டை அருகில், பொள்ளாச்சி
வருமானம்: ரூ.35,000 (தற்போது)
பிறவருமானம்: அணிக்கடவில்
அரசு மேல் நிலைப்பள்ளிக்கு எதிரில் சொந்தக்கடை
பாவுக்கு நூல் சுற்றும் மின் இயக்க இராட்டை
பெற்றோர்:
புலவர். கடவுள் இல்லை, வே.செந்தில்வடிவு
தொடர்புக்கு: பெரியார் இல்லம்
5/75 அணிக்கடவு, இராமச்சந்திராபுரம் (அ)
உடுமலை(வ) திருப்பூர் (மா)
79041 41870, 97893 39433

புலவர். கடவுள்இல்லை



# காமராசர் கொலை முயற்சி வரலாறு

மனித இனத்தின் வளர்ச்சியானது தான் தோன்றிய காலத்தின் நிலையில் இல்லை. மாற்றங்கள் இயல்பாகவும் புதிய வழிகளாலும் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. ஆனாலும் சமுதாய நன்மை கருதி மாற்றங்கள் நிகழ்த்த முற்படும்போது, மாற்றத்தை விரும்பாத, பழமையால் மட்டுமே பயன்பெற்று வாழ்கின்ற தன்னலவாதிகளால் வேறு வகையாக எதிர்வினைகள் உருவாக்கப்படுகின்றன. ஆனாலும் தேவைகளுக்கு மாற்றங்கள் நிகழ்ந்தே முடிகின்றன.

இந்தியாவை ஆட்சி புரிந்த வெள்ளைக்கார ஆங்கில அரசாங்கம், இந்நாட்டின் பொருளாதாரத்தைச் சுரண்டினாலும் மக்கள் நலம் கருதி சமுதாயத்தில் நிலவும் அறிவுக்கும், கால முன்னேற்றத்திற்கும் பொருந்தாத பலவற்றை மாற்றிட விரும்பினர். அதை அமுல்படுத்திடச் சட்டங்களை இயற்றினர். இதை விரும்பாத தன்னல வாதிகளான மதவாதிகள் வேறுவகையான காரணங்களைக் கையில் எடுத்து, அரசின் திட்டங்களைத் தடுத்திடப் போராட்டங்களை உருவாக்கினர்.

1857-ல் வெள்ளைக்கார ஆங்கிலேய அரசானது சமுதாய மாற்றத்திற்கான பல பணிகளை நிகழ்த்தத் தொடங்கியது. அந்த மாற்றங்கள் மத தர்மத்திற்கு (மனுதர்மம்) எதிரானது என்று அதர்மத்தை ஆரியம் தூண்டிவிட்டது. அரசின் சமுதாயப் புரட்சியால் பார்ப்பன உயர்வுக்கும், பார்ப்பன உயர் வாழ்விற்கும், பார்ப்பன மந்திரிகள், அதிகாரிகள் ஆகியோரின் தன்னலம் மிகவும் பாதிக்கப்படும் என்று கருதி கொலை, கொள்ளை, நாசம்செய்தல் போன்ற காரியங்களைத் தூண்டி விட்டனர். விளைவு 'சிப்பாய்கலகமாக' அது உருவாக்கப்பட்டது. இது சமுதாய சீர்திருத்த முயற்சிக்கு எதிராக நடத்தப்பட்ட வன்முறையாகும்.

அந்தக்காலத்தில் இராணுவத்தில் பார்ப்பனர்களும், முஸ்லீம்களும் ஏராளமாக இருந்ததே இக்கலகத்திற்குக் காரணமாகவும் இருந்தது. அடுத்து 1835 முதல் 1920 வரை வெள்ளைக்கார அரசாங்கம் ஆட்சியில் உள்ள எல்லா உயர்வையும் தங்களுக்கு உள்ளதுபோக மற்ற எல்லாப் பெரும் பதவிகளையும், அதிகாரத்தையும் பார்ப்பனர்களுக்கு மட்டுமே கொடுத்து வந்தார்கள். பார்ப்பனர்களும் அதே முயற்சியில் மதத்தையும் இணைத்தே பெற்று வந்தார்கள்.

இந்நிலையில் நாட்டின் தேர்தல்முறை புகுத்தப் பட்டபோது மேற்கண்ட பயன்களும், பலன்களும் மாறத் தொடங்கியது. 1920-ல் பார்ப்பனரல்லாதார் அரசுப் பதவிகளையும் அதிகாரத்தையும் பெறும்படி யான சூழல் உருவானது. திராவிடர்கள் பலம் பதவிப் படிக்கட்டுகளில் பவனிவரத் தொடங்கியது. விளைவு 1920-முதல் 1947 வரை பார்ப்பனர்கள் தேசியம் என்ற பெயரைச் சூட்டிக்கொண்டு நாசவேலைகளைச் செய்யத் தொடங்கினர்.

பார்ப்பனர்களின் சூழ்ச்சியான மதியால் மக்கள் ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டனர். கொலைகள் நிகழ்த்தப்பட்டன. வேறுபாடுகள் விதைக்கப்பட்டன. ஆங்கில வைசிராய் மீதே குண்டெறியும் அளவிற்கு வன்முறைகள் துணிந்து நடந்தேறின. விளைவு எதிரிகள் ஒழிந்து ஆட்சி அதிகாரங்கள் வடநாட்டு பார்ப்பன கொள்ளைக் கும்பல் வசமானது.

1947-க்கு பின்பு ஆட்சிக்கு வந்தவுடன் 100-க்கு 7 பேர்கள் மட்டுமே படித்தவர்கள். 90-க்கு மேற் பட்டவர்கள் தற்குறிகளாகவும் இருக்கும் இந்நாட்டில் ஆட்சி பீடத்தில் அமர்ந்தவுடன் முதல் வேலையாக 2500, 3000, 6000 என்கின்ற கணக்கில் பள்ளிக்கூடங்களை மூடவும் மக்களை எல்லாம் இந்தி கட்டாயம் படிக்க வேண்டும். இவை மாத்திரமல்லாமல் பள்ளியில் ஒருநேரம் மாத்திரமே படித்துவிட்டு மறுநேரம் பார்ப்பனரல்லாத மாணவர்கள் கண்டிப்பாக அவரவர் ஜாதித் தொழிலைப் படிக்க வேண்டும் என்ற 'குலக்கல்வி' திட்டத்தை, கண்டிப்பான சட்டமூலம் நடைமுறைப் படுத்திட உத்தரவு போடும் காரியத்தைச் செய்தார்கள்.

நாடே போராட்டக்களமாக மாறியது. ஆரியத்தின் சூழ்ச்சியால் அறிவு வீழ்ச்சியானதை உணர்ந்த மக்கள் காங்கிரசில் இருந்த பார்ப்பன ஆதிக்கத்தை ஒழித்து, பார்ப்பனரல்லாதவர்கள் கட்சிப் பொறுப்பில் அமரவைக்கும் நிலையை உருவாக்கினர். நாட்டின் நிலை கருதி காங்கிரசானது நல்ல திட்டங்களை உருவாக்க முற்பட்டது. எல்லோருக்கும் படிப்பு, எல்லோருக்கும் வேலை, எல்லோருக்கும் வீடு, எல்லோருக்கும் வயிறார உணவு, சமுதாயத்திலும், பொருளாதாரத்திலும் எல்லா மக்களுக்கும் சமநிலை வாழ்வு என்ற திட்டத்தைக் கொள்கையாக அறிவித்தது. இதற்குத் தலைமையேற்று நடத்திடப் பார்ப்பனரல்லாத

வகுப்பைச் சார்ந்த பெருமகனார் காமராசர் அவர்கள் தலைவராக நியமிக்கப்பட்டார். பெருந்தலைவர் காமராசர் புதிய சமுதாயம் காணத் தீவிரம் காட்டினார்.

இக்காலகட்டத்தில் காங்கிரசு விரோதிகளுக்கு, சமதர்ம விரோதிகளுக்கு, சாதிப் பெருமையால் பிழைக்கும் அயோக்கியர்களுக்கு, காங்கிரசையும், சமதர்மக்கொள்கைகளையும் எதிர்த்துக் குறைகூறவோ, தடுத்துப்பேசவோ ஆதாரம் எதுவும் இல்லாத காரணத்தால், மதக் குறிப்புகளைச் சாக்காக வைத்து, அதுவும் யோக்கியமான முறையில் அல்லாமல், அயோக்கியத் தனமான முறையில் பாமர மக்களின் முட்டாள்தனத்தை மூலதனமாக்கிக் கொண்டு நாட்டில் கொலை பாதகப் புரட்சிகளைத் தூண்டி விட்டார்கள்.

**மாட்டுக்கறிக்குத் தவம்கிடந்த பார்ப்பனர்கள்**

நம் நாட்டில் பார்ப்பன அயோக்கியர்கள் மதக்குறிப்பு என்று எதைக் குறிப்பிட்டார்கள் என்றால் ‘பசுவதையைத் தடுக்கச் சட்டம் இயற்ற வேண்டும்’ என்ற பிரச்சனைகளைக் காரணமாகக் கொண்டு காலித்தனத்தைச் செய்யத் தொடங்கினார்கள். (இது அய்யா தந்தை பெரியார் வழங்கிய குறிப்பு) “பசுவதைத் தடுப்புப் பித்தலாட்டம்” என்றார் பெரியார். பார்ப்பனர்கள் தாங்கள்தான் காலம் காலமாகப் பசுவைத் தெய்வமாகப் போற்றி வருபவர்கள் என்றும், பசுவைக் காப்பாற்றுவது மனுதர்மம், இந்து தர்மமாகும் என்றும் கூப்பாடு போட்டார்கள். ஆனால் பார்ப்பனர்களின் முன்னோர்கள், ரிசிகள், முனிவர்கள் போன்ற எல்லா ஆரியர்களுக்கும் ‘பசுக்கள்’தான் விருந்து நடத்தப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பார்ப்பனர்களின் நூல்களில் இதற்கு எண்ணற்ற ஆதாரங்கள் குவிந்து கிடக்கின்றன.

மகாபாரதம்-துரோணபர்வம் 60-1-2-ல் அரசர்களின் மாளிகைகளில் பார்ப்பனர்களுக்கு விருந்து படைப்பதற்கென்றே 2000 சமையற்காரர்கள் இருந்தனர். நாளொன்றுக்கு 2000 பசுக்கள் வீதம் கொல்லப்பட்டன. இப்படி விருந்தில் பசு மாமிச ருசியில் மந்தை மந்தையாய்ப் பார்ப்பனர்கள் வந்து சமாளிக்க முடியாமல் போய்விட்டதால் அவர்களைப் பார்த்து சமையற்காரர்கள் “மாமிசம் குறைவாக இருக்கிறபடியால் தயவுசெய்து சூப்பை அதிகமாக ஏற்றுக்கொள்ளுங்கள்” என்று கேட்டுக் கொண்ட நிலைமை ஏற்பட்டு உள்ளது.

பார்ப்பனர்களின் மதுவெறி (சுராபானம்) மாமிசவெறி பற்றி வால்மீகி இராமாயணம், காளிதாசர் ரகுவம்சம், அபஸ்தம்ப தர்ம ஆத்திரம், யஜீர்வேதம், பிரகதாரண்ய உபநிஷதம் ஆகியவை பசு மாமிசம் உண்டதை விளக்குகின்றன. இப்படிப் பசு மாமிசம் தின்றுவந்த பார்ப்பனக்கூட்டம் பாராளு மன்றக் கூட்டத்தொடரில் ‘பசுவதைத் தடுப்புச் சட்டம்’ இயற்ற வேண்டுமென்று கூக்குரல் இட்டார்கள். கிளர்ச்சி செய்தார்கள்.

2.1.01.1966 காங்கிரசுக் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் பசுவதைத் தடுப்புக் கிளர்ச்சியைப் பற்றி காங்கிரசுத் தலைவர் காமராசர் அவர்கள் மிகவும் வன்மையாகக் கண்டித்ததோடு அக்கிளர்ச்சியை ஏதாவது ஒரு இடத்தில் நடத்தவேண்டுமென்றால் பொருத்தமான இடமாகச் சென்னையில் நடத்தலாமே தவிர, டெல்லியில் நடத்துவதற்கு எவ்விதப் பொருத்தமும் இல்லை. காரியக் கமிட்டியில் இது சம்பந்தமாக எந்தத் தீர்மானமும் வருவதைத் தம்மால் ஒப்புக்கொள்ள முடியாது என்று திட்டவட்டமாக மறுத்து விட்டார்.

**காமராசருக்கு எதிராகப் பார்ப்பனர்களின் காலித்தனம்**

இச்செய்தி கிளர்ச்சிக் கூட்டத்தார்க்குச் சென்றடைந்தது. ஆத்திரம் அடைந்த ஆர்.எஸ்.எஸ், ஆரியசமாஜ், சங்பரிவார், ஜனசங்கம், நிர்வாண சாமியார்கள், சன்னியாசிகள், பார்ப்பனச் சங்கராச்சாரியார்கள், அழுக்குமூட்டை சாதுக்கள், பார்ப்பனக் குருமார்கள், பார்ப்பன தர்மிகள் ஆகியோர் 7.11.1966 திங்களன்று டெல்லியில் பாராளுமன்றப் பகுதியில் மிகப்பெரிய கலவரத்தை முன்கூட்டியே திட்டமிட்டபடி நிகழ்த்தினார்கள். முன்கூட்டியே திட்டமிடப்பட்ட கலவரம் என்பதால் அன்று அதிகாலையே சீருடை (யூனிபார்ம்) அணிந்த ஆர்.எஸ்.எஸ் சகாக்கள் ஊர்வலப் பாதையில் பொறுப்புக்களை மேற்கொண்டனர்.

தொடர்ந்து கடைகள், பெருந்தொழில் நிறுவனங்கள், அலுவலகங்களுக்குச் செல்வோர் போகவேண்டாமென்று தடுத்தனர். தமக்குத்தாமே நியமித்துக்கொண்ட கலாச்சாரக் காவலர்கள் 11.30-க்கு முதல்பலியாக இர்வின் மருத்துவமனையை கல்வீசித் தாக்கி நோயாளிகள் உட்பட ஊழியர்களையும் முதியோர்களையும் வெளியேற்றினர். அடுத்து ஆசஃப் அலி சாலையில் பலகடைகளில் சன்னல்கள் அடித்து நொறுக்கப்பட்டன. சப்ஜிமண்டி, சதர்பஜார் பகுதிகளில் உள்ள கடைகளில் கை கலப்பு ஏற்பட்டது.கடைகள் மூடப்பட்டன. நடுத்தரமக்கள் வாழும் பகுதியான சக்திநகர் பயத்தின் பீதியில் நடுநடுங்கியது. 2 மின்சார நிலையங்கள் அரசு அச்சுக்கூடம் கல்வீசிதாக்குண்டதோடு தீக்கிரையாகத் தொடங்கியது. 11.40-க்கு அரசுப்பேருந்து இர்வின் மருத்துவமனை அருகில் தீயிடப்பட்டது பகல் 1.00 மணிக்கு பாராளு மன்றத்தெரு ஆர்ப்பாட்டக்காரர்களால் நிரம்பி வழிந்தது. எதிரில் உள்ள பேரக்ஸ் மேல் உள்ள மொட்டை மாடிகளில் ஏறி வெறிக்கூச்சம் போட்டது.

லோக்சபை அரைமணி நேரமே நடந்தநிலையில் அறையிலிருந்து வெளியேற்றப்பட்ட ஜனசங்க எம்.பியான ராமேசுர ஆனந்த மேடைமேல ஏறி ஒலி பெருக்கியில் “நான் சபையிலிருந்து வெளியேற்றப்பட்டேன். வேகமாக அணிவகுத்து முன்னேறுங்கள், பார்லிமெண்டைச் சுற்றி வளையுங்கள். ஒரு மந்திரி கூட வெளியே

போகக்கூடாது” என்று ஆவேசக் கூச்சலிட்டுப் பேசினார். அவர் பேசி முடிப்பதற்குள் நூற்றுக்கு மேற்பட்ட நிர்வாண சாமியார்கள் போலீசு வளையத்தை உடைத்துக்கொண்டு பார்லிமெண்ட் வாயில் கதவுமுன் போர் நடனத்தை ஆடத் தொடங்கினார்கள். பெண்கள் உட்பட நிர்வாணச் சாமியார்கள் வாயில் கதவைத்தாண்டி உள்ளே ஓடமுற்பட்டபோது சிறுஅளவிலான போலிசார் அவர்களை நோக்கி கரம் கூப்பு கும்பிடு போட்டனர்.

அடுத்த நொடி அதோ அங்கு ஒரு மகாத்மா தாக்கப்படுகிறார் என்று கூச்சல் கேட்டது. உடனே போர் துவங்கிவிட்டது. நிர்வாண சாதுக்கள், திரிசூலங்கள், ஈட்டிகள் சகிதமாக கோமாதாக்கி ஜே, என்று பெரும் தாக்குதல் நடத்தினர். போலீசார் அடித்து வீழ்த்தப்பட்டனர்.பார்லிமெண்ட் தாக்கும் நிலையில் 1.40-க்கு கண்ணீர்ப்புகைக்குண்டுகள் வீசப்பட்டது. அடுத்த 15-வது நிமிடத்தில் வானொலி நிலையம், டிராஸ்போர்ட் பவனம், ஷிராம் சக்திபவனம் என மேலும் பல இடங்கள் தீயிட்டுக் கொழுத்தப்பட்டன. பெட்ரோல் தீப்பந்தங்கள், பஞ்சு உருண்டைகள்,அக்கினி திராவக வெடிகள், ஆகாஷ்வாணிபவன், வானொலிநிலையம், பி.டி.அய் பத்திரிகை அலுவலகம் இந்திய ஆயில் கம்பனி, தனியார் பெட்ரோல் பங்க்,சூப்பர் மார்க்கெட்,தபால் ஆபீசு ஆகியவை மீது மேற்படி குண்டுகள் வீசப்பட்டன.

**காமராசர் வீட்டு முன்பு**

ஆர்ப்பாட்டக்காரர்களில் 25 முதல் 30 பேர்களை நல்ல குண்டான வாலிபர்களைப் பொறுக்கி இரண்டு குழுவாகப் பிரித்து அகில இந்திய காங்கிரசு கட்சி அலுவலகம் முன்பு காங்கிரசு தலைவர் காமராசர் அவர்கள் வீட்டுக்குமுன்பும் ஏற்கனவே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர். சுமார் 3-மணி அளவில் கையில் பெட்ரோல் டின்னுடனும் பஞ்சு உருண்டைகளுடனும் ஆயத்தமாக வந்திருந்த மற்றொரு கலகக்கூட்டம் ஐந்தர்மந்தர்சாலை, அசோக் சாலையில் வந்து இணைந்தது.

காமராசர் அவர்கள் பகலுணவுக்குப்பின்பு ஓய்வெடுக்கச் சென்றுவிட்டார். ஓவென்று இரைச்சலுடன் கூட்டம் காமராசர் வீட்டிற்குள் வரமுயல அவரின் உதவியாளர் நிரஞ்சன் லாலும், சேவகர் பகதூர்சிங்கு அவர்களை எதிர்த்தனர். தனியாளாக நிரஞ்சன் எதிர்க்க பகதூர்சிங் ஆகாயத்தை நோக்கிச் சுட்டார். கூட்டம் கற்களை வீசியது. நிரஞ்சனும் கல்லை வீசினார். துப்பாக்கி ரவை முடிந்தது. நிரஞ்சன் கல்லடிபட்டுக் கீழே வீழ்ந்தார். பகதூர்சிங் வேறுவழியின்றி நிரஞ்சனுடன் காமராஜரையும் வைத்து அறையில் உள்ளே தாளிட்டு நிலைமையைச் சொன்னார்.

அப்போது காமராசர் அவர்களோடு நான் பேசுகிறேன் என்றார். கூட்டம் நாலாப்புறமும் சூழ்ந்து கற்களை வீசியது. உள்பக்கம் வலைக்கதவு ஆனதால் கற்கள் உள்ளே விழவில்லை. அச்சம், வாக்குவாதம், குழப்பம் வெளியில் தகவல் சொல்ல முடியாதநிலை. தீயிடப்பட்டு புகை நாற்றம். அப்போது காமராசரின் சமையல் உதவியாளர் அம்பி (எனும் வரதராஜன்) வெளியில் ஓடிவந்தார். மெட்ரிக்குலேசன் வரை படித்தவர். காமராசரின் எல்லாப்பணிகளையும் கவனிப்பவர்.

“எங்கே காமராசர்” என்று கலகக்காரர்கள் கேட்க “அவர் வீட்டில் இல்லை” என்று கூறி விட்டார். அம்பியை அடித்து நொறுக்கினர். தலை, முகம், மூக்கு, தோள் என்று பார்க்காமல் அடிவிழ ரத்தம் வழிந்தது. அவர்மேல் பெட்ரோல் துணி வீசப்பட்டது. அவர் பனியனைக் கழற்றி வீசினார். அவர் ஏற்கனவே வயிற்றுவலி ஆப்ரேசன் செய்தவர். வலி தாங்காமல் என்னைக் கொன்றுவிடுங்கள் என்று கத்துகிறார். பெட்ரோல் டின்னுடன் ஒருவன் வந்திட மற்றொருவன் அதைத் தடுத்திட அம்பி மயக்கம் அடைந்து கீழே வீழ்ந்தார். உடனே காமராசர் அறையின் ஏர்கண்டிசன் கருவி உடைக்கப்பட்டது. பொருள்கள் நாசம். வீட்டிலிருந்து எழுந்த புகை பின்னால் இருந்த அய்ந்தாம் அடுக்கு வித்தல்பாய் ஹவுஸில் இருந்தவர்களின் கவனத்தைக் ஈர்த்தது. அவர்கள் போலீசுக்குத் தகவல் கொடுக்க ஒரு பெரிய படை வந்து, போராட்டக்காரர்களை விரட்டி அடித்தது.

வெளியே வந்த காமராசர் சரசரவென்று காரியத்தில் இறங்கினார். எரியும் பொருள்களின்மீது மணலை அள்ளி வீசினார். அந்த நேரத்திலும் அவரது கடமையுணர்வு அனைவரையும் சிலிர்க்கச் செய்தது. நண்பர்களின் வற்புறுத்தலின் பேரில் பின் பங்களாவுக்குச் சென்று ஓய்வெடுத்துக் கொண்டார்.

“டெல்லிக் கலவரமும் காலித்தனமும் பார்ப்பனரின் மனுதர்மத்திற்கும் காமராசரின் மனித (சம்) தர்மத்திற்கும் நடந்துவரும் பலாத்காரப் போராட்டம்” என்கிறார் தந்தை பெரியார்.

**ஆதாரங்கள்:**

காமராசர் கொலை முயற்சி சரித்திரம் டிசம்பர் 1966-இல் தந்தை பெரியார் எழுதிய முகவுரையுடன் முதற்பதிப்பு-ஜனவரி 1967-என்ற நூல், திராவிடர் கழக வெளியீடு, பெரியார் திடல், 50 ஈ.வெ.கி.சாலை வேப்பேரி, சென்னை-600007.





# தமிழ் இலக்கியங்களில் பெண் மீதான வன்கொடுமைகள்

*தமிழ்நாட்டின் கல்வித்துறையில் நீண்ட காலமாகப் பணியாற்றிவரும் திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரி, ஏராளமான அறிஞர்களையும், கல்வியாளர்களையும் உருவாக்கிய நிறுவனம் ஆகும்.. அங்கு டிசம்பர் 6, டிசம்பர் 7 ஆகிய இரு நாட்கள் "தமிழ்இலக்கியங்களில் பெண்கொடுமைகள்" என்ற தலைப்பில் ஒரு பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம் நடைபெற இருப்பதாக அறிவிப்பு வந்தது. அந்தக் கருத்தரங்கில் பல நாடுகளைச் சேர்ந்த, தமிழ் அறிஞர்களும், சமூக அறிஞர்களும் பங்கேற்றுக் கருத்துக்களை வழங்க இருந்தனர். அந்தக் கருத்தரங்கில் விவாதிக்கப்பட இருந்த தலைப்புகள் சிலவற்றைப் பாருங்கள்.*

1. தொல்காப்பியம் வரையறுக்கும் பெண் மீதான கட்டுப்பாடுகள்
2. சங்க அக இலக்கியங்கள் சித்திரிக்கும் குடும்ப வன் முறைகள்
3. சங்க இலக்கியம் சித்திரிக்கும் பரத்தையர் ஒழுக்கம்
4. சங்ககாலச் சமூகத்தில் கொண்டி மகளிர்
5. புறத்திணைகள் காட்டும் பெண் வன்கொடுமைகள்
6.சிலப்பதிகாரம் காட்டும் உரைசால் பத்தினி - மறுவாசிப்பு
7. மணிமேகலை காட்டும் கணிகையர் சமூகம்
8. சீவக சிந்தாமணி எடுத்துரைக்கும் பலதார மணமுறை
9.கம்பராமாயணத்தில் வெளிப்படும் ஆணாதிக்க சிந்தனைகள்
10.கம்பராமாயணத்தில் சூர்ப்பனகை சந்தித்த வன்கொடுமைகள்
11. வில்லிபாரதத்தில் பாஞ்சாலி சந்தித்த ஆணாதிக்க ஒடுக்குமுறைகள்
12. தனிப்பாடல்களில் வேசியர் ஏசல்
13. நீதி நூல்கள் திணிக்கும் பெண்ணடிமை சிந்தனைகள்
14.பெண் கதை மாந்தர்கள் வழி பழங்கதைகள் கட்டமைக்கும் பெண்ணடிமைத்தனம்
15. சமயங்கள் மறுக்கும் பெண்ணின் அடையாளங்கள் பெண்ணின்
16 உலா இலக்கியங்கள் கட்டமைக்கும் காமம்
17. நாட்டுப்புறப் பாடல்களில் காணலாகும் பெண்ணடிமை சிந்தனைகள்
18 குறவஞ்சி இலக்கியங்கள் வெளிப்படுத்தும்
19 பெண்களை பழித்துரைக்கும் பட்டினத்தார் பாடல்கள்
20 மாதவையாவின் முத்து மீனாட்சி புதினம் சித்தரிக்கும் பெண் வன்கொடுமைகள்
21. புதுமைப்பித்தனின் "பொன்னகரம்" கேள்விக்குள்ளாகும் கற்புக் கோட்பாடு
22. தி.ஜானகிராமனின் "மரப் பசு" புதினத்தில் பெண் சுதந்திரம்
23 . ஜெயகாந்தனின் சில நேரங்களில் சில மனிதர்கள் கண்டிக்கும் பாலியல் வன்முறை
24. வைரமுத்துவின் கவிதைகளில் முதிர்கன்னிகள் குறித்த பதிவுகள்
25 சோலை சுந்தரபெருமாளின் செந்நெல் சித்திரிக்கும் பெண் தொழிலாளிகள் மீதான வர்க்க ஒடுக்குதல்கள்.

*உலகமெங்கிலும் வலுப்பெற்ற #MeToo இயக்கம், இந்தியாவிலும், தமிழ்நாட்டிலும் தனிநபர் சிக்கல்களாக மாற்றப்பட்டு வலுவிழந்தது. அப்படி #MeToo வை வலுவிழக்கச் செய்த இந்துமதச் சிந்தனைகளால் வழிநடத்தப்படும் ஆணாதிக்கக் கும்பல், திருச்சி கருத்தரங்கத்தின் தலைப்புகளைக் கண்டு அலறியது.*

“அன்னைத் தமிழை காக்க வேண்டுமென்று அனுதினமும் பாடுபடக்கூடிய அறிவுலக பெரு மக்களே, தமிழ் ஆர்வலர்களே, இலக்கிய பெரு மக்களே, இந்து உணர்வாளர்களே, அனைவரும் இணைந்து கிறித்தவ நிறுவனம் நடத்தும் கருத்தரங்கை நிறுத்துவோம்” என்று பா.ஜ.க வின் சமூகவலைத் தளங்களில் செய்திகள் பரப்பப்பட்டது. நமது திருப்பூர் தோழர் குமார் அந்தப் பதிவுகளை அனுப்பி வைத்தார். அவை வந்த அடுத்த நாளே, பா.ஜ.க.வின் எச்.ராஜா போன்றோர் கருத்தரங்கைத் தடைசெய்யக் கோரிக்கை விடுத்தனர். மதவெறியர்களால் கருத்தரங்கம் நிறுத்தப்பட்டுவிட்டது.

தமிழ்இலக்கியங்களைக் கைவைத்த உடனே தமிழ்த்தேசியர்கள் போராடத் தொடங்குவதற்கு முன்பு, இந்து வெறியர்கள் தமிழுக்காகப் போராட்டத்தில் இறங்கிவிட்டனர். தமிழ், தமிழ் இலக்கியம், தமிழ்ப்பண்பாடு, என்று அவற்றைப் பரப்புவதும், பரப்பத் துணைபோவதும் பார்ப்பனர்களுக்கும், இந்து மதத்திற்கும்தான் வலுசேர்க்கும். அதைத்தான் இந்தக் கருத்தரங்க எதிர்ப்பு நமக்கு உணர்த்துகிறது.

அதனால்தான் தோழர் பெரியாரும், உண்மையான பெரியார் தொண்டர்களும் தமிழ் இலக்கியங்களையும், தமிழ்ப் பண்பாடு என்பவைகளையும் கடுமையாக எதிர்த்துப் பரப்புரை செய்து வந்தனர். பெரியாருக்குப் பின் ‘உண்மை’ (14.02.1970, 14.03.1970) ஏட்டில் புலவர் இமயவரம்பன் அவர்கள் எழுதிய, “சங்க இலக்கியங்களில் வர்ணாசிரமம்” என்ற தொடர் கட்டுரை வெளியிடப்பட்டது. அந்தக் கட்டுரை காட்டாறு இதழில் 2017 ஜூன், ஜூலை மாத இதழ்களிலும் வெளியானது.

அந்தத் தொடரில், தொல்காப்பியம் தொடங்கி, அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, நெடுநல்வாடை, பரிபாடல் போன்ற அனைத்து சங்ககால இலக்கியங்களின் இந்து, வேத மத ஆதரவு மற்றும் பார்ப்பன ஆதிக்க ஆதரவுப்போக்கு சிறப்பாக விளக்கப்பட்டிருக்கும்.

மயிலாடுதுறையைச் சேர்ந்த பேராசிரியர், முனைவர் இரா.மணியன் அவர்கள் 2009 இல் “பெரியாரின் இலக்கியச் சிந்தனைகள்” என்ற ஒரு நூலை வெளியிட்டார். அதில் சங்க இலக்கியங்கள் மட்டுமல்லாமல், அதற்குப் பிந்தைய சிலப்பதிகாரத்தைப் பற்றியும் பெரியார் கொண்டிருந்த எதிர்ப்புக் கருத்துக்கள் தொகுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, அந்த நூலில், சிலப்பதிகாரம் நிறுவ விரும்பும் பெண்ணடிமைத்தனம் சான்றுகளுடனும், பெரியார் கருத்துக்களுடனும் விளக்கப்பட்டுள்ளது.

திராவிடர் இயக்கத்தின் புராண, இதிகாச, இலக்கிய எதிர்ப்புப் பண்பாட்டின் தொடர்ச்சியாக, ஒருபெரிய கல்விநிறுவனமே உண்மையான சமூக அக்கறையோடு ஏற்பாடு செய்த “தமிழ் இலக்கியங்களில் பெண் வன்கொடுமைகள்” என்ற கருத்தரங்கம் இந்துமத வெறியர்களால் நிறுத்தப்பட்டது என்பது, நமக்குப் பெரும் பின்னடைவாகும்.

இந்த நிலையில், தமிழ் இலக்கியங்கள், இந்துப் புராணங்கள், இதிகாசங்கள் பற்றிய பெரியாரின் கருத்துக்களை வாய்ப்புள்ள அனைத்து வழிகளிலும் பரப்புவதே இந்துவெறியர்களுக்கான எதிர் வினையாக இருக்கும் என்ற அடிப்படையில் பெரியாரின் சில கருத்துக்கள் உங்கள் பார்வைக்கு.

## இலக்கியங்கள் பற்றிப் பெரியார்

### இந்தியா, கம்பன்: இரண்டு சனியனும் வேண்டாம்

மேல்நாட்டுப் புலவர்கள் மேல்நாட்டு இலக்கியங்கள் ஆகியவைகளுக்கு இருக்கும் பெருமையும், அறிவும் நம் தமிழ்ப் புலவர்களுக்கு இருக்கின்றது என்று சொல்ல முடியுமா? ஷேக்ஸ்பியர் வேண்டுமா? இங்கிலாந்து வேண்டுமா? என்றால் இங்கிலீஷ் மகனே ஷேக்ஸ்பியர் வேண்டும் என்பானாம். நாம் எதைக் கேட்பது?

இந்தியா வேண்டுமா? கம்ப ராமாயணம் வேண்டுமா என்றால் உண்மைத்தமிழ் மகன் என்ன சொல்லுவான்? இரண்டு சனியனும் வேண்டாம் என்று தானே சொல்லுவான். மேல் நாட்டில்தான் அறிவாளிகள் உண்டு என்றும், கீழ்நாட்டில் அறிவாளிகள் இல்லை என்றும் நான் சொல்ல வரவில்லை.

மேல்நாட்டு அறிவாளிகள் தாங்கள் செய்த இலக்கியங்களை மத சம்மந்தமன்னியில் கடவுள் சம்மந்தமன்னியில் பெரிதும் செய்து வைத்தார்கள். அதனால் நூற்றுக்கணக்காக மேல்நாட்டு இலக்கியங்களும் பண்டிதர்களும் போற்றப் படுகிறார்கள்.

...கம்பராமாயணம் அரிய இலக்கியமாய் இருக்கிறதாகச் சொல்லு கிறார்கள். இருந்து என்ன பயன். ஒருவன் எவ்வளவுதான் பட்டினி கிடந்தாலும் மலத்தில் இருந்து அரிசி பொறுக்குவானா? அதுபோல் தானே கம்பராமாயண இலக்கியம் இருக்கிறது. அது தமிழ் மக்களை எவ்வளவு இழிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தமிழரின் சரித்திர கால எதிரிகளை எவ்வளவு மேன்மையாக குறிப்பிடப் பட்டிருக்கிறது. சுயமரியாதையை விரும்புகிறவன் எப்படி கம்பராமாயண இலக்கியத்தை படிப்பான். இன்று கம்பராமாயணத்தால் தமிழ் மக்களுக்கு இலக்கியம் பரவிற்றா இழிவு பரவிற்றா என்று நடு நிலையில் இருந்து யோசித்துப் பாருங்கள்.

-தோழர் பெரியார், குடி அரசு - 26.01.1936

### குறளின் புதுமை ஏது?

அறிவுத்துறைப் பெரியவர்கள் வள்ளுவரை பலர் காட்டலாம். அதற்கு இரண்டாயிரம் ஆண்டு ஆயுள் சொல்லுகிறார்கள். என் கருத்துப்படி அதற்கு 1500 ஆண்டுகளுக்கு மேல் சொல்லுவதற்கு இட மில்லை; என்றாலும், அதிலும் எவ்விதப் புதுமையையும் காணமுடியவில்லை என்பதோடு, தற்கால நிலைமைக்கு அல்லாமல், எதிர்காலத்து வளர்ச்சிக்கு வழி காட்டும் துறை எதுவும் காண முடியவில்லை என்றுதான் சொல்லவேண்டும்.

## காட்டுக் கற்பனைகள்

நமது புலவர்களும், பக்தர்களும் அந்த ஆரியக் காட்டுமிராண்டிக் கற்பனைகளை அடிப்படை யாய்க் கொண்டே "நமது இலக்கியங்" களை உண்டாக்கி இருக்கிறார்கள். ஆதலால், அந்த இலக்கியங்களைக் கொண்ட நமது பழங்கால நிலை என்பதைக் காட்டுமிராண்டித்தனம் என்கிறேன்.

நமது புலவர்கள் எவ்வளவு பெரிய காட்டு மிராண்டிகள் என்பதற்கு கம்பனையும், இளங்கோவையும் எடுத்துக் கொண்டாலே போதும்; இவர்களதும் மற்றும், பழங்காலம் புலவர்களதும் இலக்கியங்களையும் (நூல்களை) எடுத்துக் கொண்டு, அதன் இலக்கண - கற்பனை அமைப்பு முறை ஆகியவற்றை நீக்கிவிட்டு, அதிலுள்ள கற்பனைக் கதை வடிவங்களை எடுத்துக் கொண்டு பார்ப்போமானால்- அவற்றின் காட்டுமிராண்டித் தனம் எவ்வளவு குறைந்த அறிவுள்ளவர்களுக்கும் நல்லவண்ணம் விளங்கும்.

இந்நிலையில் நம்மை நாம் பழங்காலப் பெருமை பேசும் காட்டுமிராண்டிகள் என்பதைத் தவிர வேறு சொல்ல என்ன இருக்கிறது. தமிழர் களான கவிஞர்கள், கட்டுரையாளர்கள், அறிவுரைப் பிரச்சாரம் செய்பவர்கள், எழுத்தாளர்கள், மற்றும் நடிப்புத் துறையில் உள்ளவர்கள் முதலிய யாவரும் தங்கள் கலைகளை மக்களுக்குப் பயன்படும் தன்மையில் அவற்றைக் கையாள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழர்கள் புரட்சிகரமான மாறுதலடைய வேண்டிய நிலையில் இருக்கிறார்கள்.

- தோழர் பெரியார், உயர் எண்ணங்கள் நூல்

## எந்தப் புலவனும் ஒழுக்கத்தைப் பற்றிச் சொல்லவில்லை

நம் அறிஞர்களும், புலவர்களும் நமக்கு மனித தர்மத்திற்குக் குறளைத்தான் எடுத்துக்காட்டு வார்கள். அந்த வள்ளுவன் கூட இருக்கிற மற்றவனை விடக் கொஞ்சம் பரவாயில்லை என்பதுதானே யொழிய, அவன்தான் எல்லாவற்றிற்கும் என்பது பொருந்தாதது. நேற்று ஒரு பள்ளியில் பாரதிதாசன் படத்தைத் திறந்து வைத்துப் பேசும்போது, வள்ளுவன் படத்தைத் தூக்கி எறிந்து விட்டு பாரதிதாசன் படத்தை வைக்க வேண்டுமென்று சொன்னேன். பாரதிதாசனைப் போல சீர்திருத்தக் கருத்துக்களைச் சொல்ல நம் புலவர்கள் முன்வர வேண்டும். புலவர்களை வணக்கத்தோடு கேட்டுக் கொள்கிறேன்.

ஆண்களுக்கு எந்தப் புலவனும் ஒழுக்கத்தைப் பற்றிச் சொல்லவில்லை. அத்தனை நீதி சொன்னவனும், ஒழுக்கம் பற்றிச் சொன்னவனும் பெண்களுக்குத்தான் சொல்லி இருக்கிறான். இன்றைக்கு நாம் நினைப்பதை அவன் எப்படி நினைக்க முடியும். இன்றைய உலகம் வேறு; நேற்றிருந்த உலகம் வேறு.

...வள்ளுவன் அப்படிச் சொன்னான்; தொல்காப்பியன் இப்படிச் சொன்னான் என்றால், அதெல்லாம் அவன் வாழ்ந்த காலத்திற்கு வேண்டுமானால் சரியாக இருக்கலாமே தவிர,



இப்போதைக்கு அவை பயன்படக் கூடியதல்ல. இந்த வாழ்க்கைக்கு எவனும் வேலி போட முடியாது. நாளைக்கு எப்படி அமையும் என்று சொல்ல முடியாது. நாளுக்கு நாள், நேரத்திற்கு நேரம் உலகம் மாறிக் கொண்டிருக்கிறது. அதற்கேற்ப மனிதன் மாறிக் கொள்ளத்தான் வேண்டும்.

நம் புலவர்களுக்குத் தைரியம் இல்லை. இலக்கணம் - இலக்கியத்தின் மேலேயே அவர்கள் கண் இருப்பதால் அவர்கள் எண்ணம் பழைமை யிலேயே போகிறது. பகுத்தறிவே அவர்களுக்கு ஏற்படுவது கிடையாது. பகுத்தறிவு ஏற்படும்படியான இலக்கியங்கள் - நூல்கள் எதுவும் தமிழில் கிடையாது. இருப்பதெல்லாம் மனிதனின் அறியாமை - முட்டாள்தனம் - மூடநம்பிக்கை இவற்றை வளர்ப்பவைதான். பார்ப்பான் வருகிற வரை நமக்குச் சரித்திரமே கிடையாது. இருந்ததை யெல்லாம் பார்ப்பான் கொளுத்தி விட்டான். ஒன்றிரண்டு மிஞ்சியதையும் மாற்றி விட்டான்.

...தமிழனின் பழைய இலக்கியம், சிறந்த இலக்கியம் என்று தமிழ்ப் புலவர்கள் எடுத்துக் கூறும் தொல்காப்பியம் தமிழன் நூலல்ல. வருணாசிரமத் தர்மத்தை பாதுகாக்க ஏற்பாடு செய்து, நமக்குச் சுவையான சிலவற்றையும் சேர்த்து நமக்குள் மடமையையும் - முட்டாள்தனத்தையும் - அறிவற்ற தன்மையையும் வளர்க்க மேல்ஜாதிக் காரனால் புகுத்தப்பட்டதேயாகும்.

அதைத்தான் தமிழ்ப்புலவர்கள் மிக உயர்ந்ததாகப் போற்றுகின்றனர், புகழ்கின்றனர். அதில் இந்த அய்யர் வகுத்த கரணங்கள் மூவோர் மேலோர்க்கும்தான். அது நாளடைவில் கீழோர்க் காயிற்று என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தமிழனுக்கு இந்நிகழ்ச்சிக்கு முறையே இல்லை என்பதோடு, இதுபோன்ற நிகழ்ச்சி நடைபெற்றது என்பதற்கு ஆதாரமில்லை. தமிழனுக்கு நிகழ்ச்சியானது இருந்திருக்குமானால், தமிழில் அதற்காக ஒரு சொல் இருக்கும். தமிழ் மொழியில் இந்நிகழ்ச்சியினைக் குறிப்பிட்டுக் காட்டக்கூடிய சொல்லே இல்லை என்பதிலிருந்து, இது தமிழனுக் கில்லாத மற்றவனால் புகுத்தப்பட்டது என்பதை உணரலாம். யாராவது புலவர்கள் தமிழர்களுக்கு இந்நிகழ்ச்சி இருந்தது, அதற்கு இதுதான் முறை யென்பதை ஆதாரத்தோடு எடுத்துக் காட்டினால் தலைவணங்கி ஏற்றுக் கொள்கிறேன்.

-தோழர் பெரியார், விடுதலை, 06.08.1968



























அன்னை மணியம்மையார்

## அன்னை மணியம்மையார்

பிறந்தநாள் - நூற்றாண்டு தொடக்க நாளான

10.03.2019 இல்

## “உடைப்போம் சமையலறைகளை!”

தொடர்புக்கு: 76676 79363, 98940 69973, 99427 38950

#Kitchen# DEMOLISH VEDIC TRADITION'S 10.03.2019

காட்டாறு




























# அன்னை மணியம்மையார்

பிறந்தநாள் - நூற்றாண்டு தொடக்க நாளான

10.03.2019 இல்

## "உடைப்போம் சமையலறைகளை!"

தொடர்புக்கு: 76676 79363, 98940 69973, 99427 38950




காட்டாறு


Owner and Publisher by : S.Vijayaragavan # 103/104, Nethaji Road, M.C.Complex, Pollachi. 642 001
Consulting Editor: C.Ragavan Kaattaaru2014@gmail.com